Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර
பக்கம் 24 ரூபா 30.00
மே 02 - 08, 2013


# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1012

# வட மாகாணத் தேர்தல் இன்னுமொரு ஈழப் போர்

## தெற்கின் அச்சமும் வடக்கின் சந்தேகமும்




# ஈழத் தமிழர் விவகாரம்; அரசியலும் துரோகமும்



# சீன - இந்திய இராணுவ முறுகல்

## சித்திரா பவுர்ணமி!

ஆன்மீகம்

உலக உயிர்களின் பாவ–புண்ணியங்களுக்கு ஏற்ப, அவர்கள் இறப்புக்கு பின் அதற்கான பலன்களை பெறுகின்றனர். அதன்படி உலக உயிர்களின் பாவ – புண்ணியங்களை கணக்கிடுவதற்காக சிவபெருமானால் படைக்கப்பட்டவர்தான் சித்திரபுத்திரன். சிவபெருமான், உலக உயிர்கள் செய்யும் பாவ–புண்ணியங்கள் குறித்த கணக்கை எழுதுவதற்கு ஒருவரை நியமிக்க சித்தம் கொண்டார். தன் அருகில் அமர்ந்திருந்த உமையாளிடம், தங்கப் பலகை ஒன்றை எடுத்து வரும்படி கூறினார்.

அந்த பொற் பலகையில் அழகான ஒரு உருவத்தை வரைந்தார் சிவபெருமான். பின்னர் அந்த சித்திரத்திற்கு உயிர் கொடுத்தார். சித்திரத்தில் இருந்து உயிர்ப்பெற்று வந்த காரணத்தால், அவர் சித்திர புத்திரன் என்ற பெயர்பெற்றார்.

ஒரு நாள் சித்திரபுத்திரனை அழைத்தார் சிவபெருமான். சித்திரபுத்திரா! உலகின் உன்னத தேவைக்காகவே நீ படைக்கப்பட்டுள்ளாய். . அதற்கான நேரம் கனிந்து வருகிறது. தேவலோக அதிபதியான தேவேந்திரன் பிள்ளை வரம் வேண்டி, என்னை நோக்கி கடும்தவம் இருந்து வருகிறான். இந்திரனின் மாளிகையில் உள்ள காராம் பசு உருவத்தில் காமதேனுவின் வயிற்றில் மூன்றே முக்கால் நாழிகை மட்டுமே தங்கியிருந்து குழந்தையாகப் பிறந்து வளர்ந்து வா!. பெரியவன் ஆனதும் கைலாயம் வந்து உலக உயிர்களின் பாவ – புண்ணிய கணக்குகளை எழுதி வா! என்று கூறினார். காமதேனுவின் வயிற்றில் மூன்றே முக்கால் நாழிகை நேரம் மட்டுமே தங்கியிருந்து பிறந்தார் சித்திரபுத்திரன். அவர் பிறந்தபோது கைகளில் ஏடும், எழுத்தாணியும் வைத்திருந்தார். சித்திரபுத்திரர் பிறந்த தினம் சித்ராபவுர்ணமியாகும்.

## தேவனுடனான உறவு!

ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஜாண்நாக்ஸ் என்ற பக்தர் முழங்காலிட்டு ஜெபித்து, "ஸ்காட்லாந்து தேசத்தை எனக்குத் தாரும். இல்லாவிட்டால் நான் மடிந்து போகிறேன்,' 'எனக் கதறினார். அப்படியே தன் முழங்காலின் பலத்தால் ஸ்காட்லாந்தில் ஒரு பெரிய எழுப்புதலைக் கொண்டு வந்தார்.

அப்போது ஸ்காட்லாந்தை ஆட்சி செய்த ராணி கொடுங்கோல் ஆட்சியை இருந்தாள். அவளை அந்த தேசத்து மக்கள், ""ரத்த வெறி பிடித்தவள்," என்று அழைத்தார்கள். ஆனால், அவளோ ஜெபவீரராகத் திகழ்ந்த நாக்ஸிக்கு பயப்பட்டாள். ""அந்த மனிதன் முழங்காலிட்டு நின்றால், என் சரீரம் எல்லாம் தீப்பற்றி எரிவது போல் வேதனை உண்டாகிறது," என்று சொல்லி நடுங்கினாள்.

இதுபற்றி நாக்ஸிடம், "இவளோ கொடுங்கோல் அரசி, இராணுவத்தை தன் கைக்குள் வைத்திருப்பவள். அப்படியிருக்க அவளை எதிர்த்து நிற்கும் துணிச்சல் எப்படி வந்தது?" என பலரும் கேட்டனர்.

அதற்கு நாக்ஸ், "எந்த ஒரு மனிதன் பரலோக ராஜாவுக்கு முன்பாக நிற்கிறானோ, அவன் உலக ராணிகளைக் குறித்து கவலைப்படமாட்டான். அவர்களுக்கு அஞ்சமாட்டான். பரலோக தேவ தூதர்களின் சேனைகள் என்னோடு இருக்கும்போது, பூலோக இராணுவத்துக்கு நான் ஏன் பயப்பட வேண்டும்?" என்று அவர்களுக்கு ஆணித்தரமாகப் பதிலளித்தார். தேவனை நம்புவோர் எந்த ஒரு சக்திக்கும் பயப்படத் தேவையில்லை என்பதை இந்த நிகழ்ச்சி தெளிவுபடுத்துகிறது.

## அல்லாஹ்வின் நல்லருளோடு நாடிச் செல்வோம்

இஸ்லாம் மதம் நல்லறிவை நாடிச் செல்வதை கடமை யாக்கியுள்ளது. ஆகவே ஐயத் தெளிவுகளுக்காக வருபவர்களை அதட்டி அனுப்பிவிடக் கூடாது. அவர்களின் ஐயங்களைப் போக்கி அகத் தெளிவை ஏற்படுத்துவது அறிவாகளின் கடமை.

மனிதன் நல்லறிவைப் பெற்று நல்லவனாக வாழும் பொழுது அவன் அல்லாஹ்வின் பிரதிநிதியாகின்றான். நல்லறிவு பெறாத மனிதனின் சக்தி வீண் விரயமாகிவிடும். "அல்லாஹ்வே! எனக்கு அறிவை வளப்படுத்து" என்று பிரார்த்திக்குமாறு மாமறை மனிதனைப் பணிக்கிறது. நல்லறிவை நாம் பெற்றுக் கொள்வது நமது இருண்ட இதயங்களை ஒளியால் நிரப்புவது போன்றதாகும். அறிவின் துணையால் அல்லாஹ்வின் அடியான் நன்மையின் உச்சத்தை அடைகின்றான். உயர் இடங்களைப் பெறுகின்றான். இத்தகைய பல்வேறு அருளுரைகளால் அறிவுத் தேட்டத்தின் அவசியத்தை அறியும் நாம் அதனை அல்லாஹ்வின் நல்லருளோடு நாடிச் செல்வோம்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப்போட்டி இல 1009



### எலிப்புழுக்கை

காதலாகிக் கசிந்து
மோதலாகிக்
கண்ணீர் மல்கி
கன்னித் தோள் மேல்
கபடக் கை போட்டு
கன்னித் தமிழால்
கண்கள் பேச
காலம் கழிகிறது!
காதலருக்கு
விளங்கவில்லை
எள்ளாகக் காதல்
ஜோடி இருக்க.
எலிப் புழுக்கையாக...
இவர் இருப்பதும்
விளங்கவில்லை.

பாராட்டுக்குரியது

சேது –ராஜ்குமார்.
திருமலை.

## கவிதைப் போட்டி இல 1012



### சமத்துவம்

அன்புக்கு எல்லையில்லை
அரவணைப்புக்கு தடையில்லை
சாதிமத பேதமின்றி
சமத்துவமிங்கே உணர்த்தப்படுகிறது.

எம்.சி. கலீல், கல்முனை-05.

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 07.05.2013

கவிதைப் போட்டி இல. 1011 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### இரண்டும் இல்லையேல்!

கள்ளக் காதல்களுக்கு
காவல்துறை பாதுகாப்பா?
இல்லையேல்
இன்று நடக்கும்
இழிவு செயல்களில்
இதுவும் ஒன்றா?
இரண்டும்
இல்லையேல்
இவர்கள்
பிரபுக்களின்
பிள்ளைகள்தான்!

ஏ.பாரிஸ், மிகிந்தலை



### எம்மாத்திரம்

கண்ணின் கடைப்பார்வை
காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரருக்கு
மாமலையும் ஓர் கடுகாம்
இவ்வாறிருக்கையில்
இக்காவலரின்
கண்காணிப்பெல்லாம்
எம்மாத்திரம்.

கே.அல் –ஆஸாத்,
ஏறாவூர்.



### காதல் சட்டம்

காதலிக்க
காவல் கல்யாணத்துக்குப் பின்
கனவுகள் நனவாகும்.

எஸ்.பி.பாலமுருகன்

## உங்கள் பக்கம்

### அவசியமும் அவசரமும்

இலங்கையின் முதலாவது கடுகதி நெடுஞ்சாலை கொழும்பையும், தென்னிலங்கையையும் இணைக்கும் முகமாக காலி, அம்பாந்தோட்டை வரை நீண்டு செல்கிறது. இவ்வீதியால் பயணம் செய்வதற்கு மணித்தியாலத்திற்கு 100 கிலோமீற்றர் வரை வேகம் அனுமதிக்கப்படுகின்றது.

எனினும் குறித்த வீதியால் பயணிக்கின்ற வாகனங்கள் 100 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட வேகத்திலேயே பயணம் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளன. குறித்த வேகத்தில் செல்கின்ற வாகனச்சாரதிகளின் கவனம் சற்றுத் தடுமாறினாலும் மோசமான வீதி விபத்துக்களை ஏற்படுத்திவிடும்.

நிலைமை இவ்வாறு இருக்கையில் குறித்த நெடுஞ்சாலையின் அமைப்பு பல குறைபாடுகளைக் கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கும். குறித்த நெடுஞ்சாலையில் நாய்கள் . தமது இஸ்ரத்திற்கு நடமாடித்திரிகின்றன. அவை வாகனங்களுக்கிடையே சிக்குமிடத்து பாரிய விளைவுகள் ஏற்படும் என்பது கவனத்திற்கொள்ளப்படவில்லை.

அதேபோன்று இரவு நேரத்தில் பயணம் செய்கின்ற வாகனச் சாரதிகளுக்கு எதிர்த்திசையில் இருந்து வருகின்ற வாகனங்களின் மின்விளககுகள் நேரடியாக கண்ணுக்குள் பட்டுத் தெறிக்கின்றன. இவை தெரியாதவாறு நடுவீதியில் தடுப்புச் சுவர்அமைக்க வேண்டும் என்பது சர்வதேச நெடுஞ்சாலை விதியாக இருக்கின்ற போதிலும் இலங்கையில் இதுவரை அது கவனத்தில் கொள்ளப்படவில்லை. இதுவும் பாரிய வாகன விபத்துக்களுக்கு வழிகோலிவிடும் ஆபத்துக் காணப்படுகின்றது. அவற்றைக் களையவேண்டியது அவசியமும் அவசரமுமாகும்.

ம.கோகுலதாசன், கொழும்பு.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:– 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :–0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com





## வாசகர் சாலை

### அன்பின் முரசு

அன்பின் முரசு! இந்துக்களது மெய்ஞான சிந்தனைகளே விஞ்ஞானத்தின் முன்னோடி என்ற தலைப்பில் இணையத்தில் வெளியாகிய கட்டுரை ஆக்கத்தினை தேடி எடுத்து முரசு தனது வாசகர்களுக்காய் பிரசுரித்திருந்தது. உண்மையில் இந்துக்களும் இந்து மதத்தைச் சராதவர்களும் அறிந்துகொள்ள வேண்டிய எத்தனையோ விடயங்கள் குறித்த கட்டுரைக்குள் புதைந்திருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. இவ்வாறான மறைந்திருக்கும் தகவல்களை தேடி எடுத்து மக்களுக்கு வரலாற்று உண்மைகளை முரசு தொடர்ந்தும் தாராளமாகத் தர வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

எஸ்.வைகறை, புதுக்குடியிருப்பு.

### வாழ்த்துக்கள்!

அண்மைக் காலமாகக் கொலை என்பது விலைமதிப்பற்ற ஒரு விடயமாக எம்மத்தியில் மாறிவருவது வருத்தத்துக்குரிய விடயமாகும். தங்களின் எதிர்பார்ப்புக்களுக்கான தடைக்கற்களை அகற்றுவதற்கான இலகுவான வழிமுறை கொலை செய்வது என்ற மோசமான மனோபாவம் நம் சமூகத்தில் வளர்ந்து வருவதை அண்மைக்கால செய்திகள் படம்பிடித்துக் காட்டுகின்றன. அண்மையில் மட்டக்களப்பில் 16 வயதுச் சிறுமி காதல் மோகத்தில் தன் பெற்றோருக்கே எமனான சோகம் கலந்த அசிங்கம் அரங்கேறியிருக்கிறது. குறித்த சம்பவத்தை பக்குவமாக எடுத்துரைத்த பிரகஸ்பதிக்கு வாழ்த்துக்கள்.

ப.துவாரகா, மட்டக்களப்பு.

### எதிர்பார்ப்பு!

அழகான முரசின் நீண்ட நாள் அபிமான வாசகன் நான். கடந்த காலங்களில் எனது அரசியல் பார்வைகளைச் செப்பனிட்டதில் தினமுரசின் அரசியல் கட்டுரைகளுக்கும் கணிசமான பங்குண்டு என்பதை பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

ஆனால் அண்மைக்காலமாக வருகின்ற முரசின் கட்டுரைகளில் மக்கள் சார்பான கருத்துக்களை மிஞ்சும் வகையில் கூட்டமைப்பு மீதான எதிர்ப்பு மனோநிலை மேலோங்கி வருகின்றதோ என்ற சந்தேகம் அடியேனுக்கு ஏற்படுகின்றது.

இவ்விடயத்தில் முரசின் ஆசிரியர் பீடம் கூடுதல் கவனம் செலுத்தி அற்புதன் வகுத்த மக்கள் சார்பு நிலைப்பாடு என்ற கயிற்றைப் பலமாகப் பற்றிக்கொள்ள வேண்டும் என்தே முரசின் இலட்சக்கணக்கான வாசகர்களைப்போன்று எனக்கும் நீங்காத ஆசையாக இருக்கின்றது. அந்த ஆசை நிறைவேறும் என்ற எதிர்பார்ப்புக்களுடன் வாராவாரம் முரசின் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருக்கின்றேன்.

எஸ்.பரணீ, முல்லை.

# இன, மத பேதங்களைக் கடந்தவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

## முஸ்லிம் சம்மேளனத்தின் செயலாளர் புகழாரம்



இன, மத பேதங்களுக்கப்பால் தமிழ், முஸ்லிம் மக்களது மீள்குடியேற்றம் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், மனிதாபிமானமிக்க சிறந்த மனிதர் என யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் செயலாளர் அஸ்மின் ஐயூப் தெரிவித்தார்.

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம்பெற்ற யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறியுள்ள முஸ்லிம்களின் வீட்டுத்திட்ட விண்ணப்பங்களை கையளிக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த முஸ்லிம்களாகிய நாம் ஒரு காலகட்டத்தில் விரட்டப்பட்டபோது அதற்கெதிராக குரல் கொடுத்தவர் அமைச்சர் என்பது மட்டுமல்லாமல் இடம்பெயர்ந்து புத்தளத்தில் நாம் தங்கியிருந்தபோது அங்கு நேரடியாக வருகைதந்து எமது சுகநலன்களை கேட்டறிந்து கொண்டதுடன் 119 குடும்பங்கள் குடியமர்வதற்கான காணியையும், தற்காலிக வீட்டுத் திட்டங்களையும், பாலர் பாடசாலை வசதிகள் உட்பட பல்வேறு வசதிகளையும் தனது சொந்தச் செலவில் தொடர்ந்து மேற்கொண்டார்.

யுத்தம் முடிவிற்கு வந்து மீளவும் நாம் யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்ந்துவரும் நிலையில் எமக்கு அடிப்படைத் தேவையான வீட்டுத்திட்டம் உள்ளிட்ட வாழ்வாதார உதவித் திட்டங்களை வழங்குவதிலும் மிக கரிசனை காட்டிவருகின்றார். அந்தவகையில் இன, மத பேதங்களுக்கப்பால் எமக்கான உதவித்திட்டங்களை வழங்கிவரும் அமைச்சர் அவர்கள் மனிதாபிமானமிக்க சிறந்த மனிதர் மட்டுமல்லாது முஸ்லிம் மக்களது பெருவிருப்பிற்குரிய அமைச்சர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வைத்தியர் உருவில் ஒரு காமுகன்

மகப்பேற்றின்போது கர்ப்பிணியொருவரை பலாத்காரம் செய்ததாக கூறப்படும் அரசாங்க வைத்தியருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் மகப்பேற்று சமயத்தின் போது கர்ப்பிணியை வல்லுறவுக்குட்படுத்தியதாக சந்தேகநபரான வைத்தியர் ஜயசாந்த பரணமன்ன என்பவர் மீதே சட்டமா அதிபர் குற்றஞ்சாட்டியுள்ளார். சந்தேநபர் 2009 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 02 ஆம் திகதி மகப்பேற்று அறையில் வைத்தே இந்த குற்றத்தை புரிந்துள்ளதாக அவருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சந்தேக நபரான வைத்தியர், நீதவான் தேவிகா தென்னக்கோனினால் 5 இலட்சம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் இரண்டு சரீரப்பிணைகள் அடிப்படையில் விடுவிக்கப்பட்டார். இந்த வழக்கு விசாரணை ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## கொக்கட்டிச்சோலையில் அழுகிய சடலம்

மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 38ஆம் கொலனி குடியேற்றக் கிராமத்திலிருந்து அழுகிய நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கச்சைக்கொடி எனும் கிராமத்தில் டோஸர் இயந்திரத்தின் மூலம் நிலத்தைத் சமப்படுத்தி துப்பரவு செய்து கொண்டிருந்த போது இந்த சடலம் தென்பட்டதால் கொக்கட்டிச்சோலைப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணைகளை அடுத்து, பிரேத பரிசோதனைக்காக சடலம் வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கொக்கட்டிச் சோலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாத்தளை விமான நிலையத்தில் குரங்குகள் பரிதாப மரணம்




மாத்தளை ராஜபக்ஷ அனைத்துலக விமான நிலையத்துக்காக அமைக்கப்பட்டுள்ள மின்சார இணைப்பில் சிக்கி, நாளொன்றுக்கு 20 தொடக்கம் 30 வரையி லான குரங்குகள் உயிரை மாய்ப்பதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தென் மாகாணத்தில் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்காக, சீனாவின் உதவியுடன் கட்டப்பட்ட இந்த விமான நிலைய கட்டுமானத்தினால், பறவைகள், மயில்கள், முதலைகள், யானைகள் போன்றவற்றின் வாழ்விடங்கள் இழக்கப்பட்டுள்ளதாக, சில தரப்புக்களினால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றநிலையில், குரங்குகள் நாளாந்தம் பெருமளவில் உயிரிழந்துவருவதாகவும், இதுவரை பல நூற்றுக்கணக்கான குரங்குகள் உயிரைக் கொடுத்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அம்பாந்தோட்டையில் இருந்து மாத்தளை விமான நிலையத்துக்காக 33 ஆயிரம் வாட்ஸ் திறனுள்ள உயர் அழுத்த மின்சார இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. செலவுகளைக் குறைப்பதற்காக, இந்த இணைப்பு சரணாலயம் வழியாக கொடுக்கப்பட்டுள்ளது. சரணாலயப் பகுதியில் 13 கி.மீ வரை அமைக்கப்பட்டுள்ள இந்த மின்சார இணைப்புகளில் பாயும் உயர் அழுத்த மின்சாரத்தை அறியாமல், குரங்குகள் அவற்றின்மீது ஏறித் தாவுகின்றன. இதனால் நாளொன்றுக்கு 20 தொடக்கம் 30 வரையிலான குரங்குகள் உயிரிழந்துவருகின்றன.

அதேவேளை, விமான நிலைய பிரதேசத்திற்குள் யானைகள் திடீரென நுழைந்தமையால் சிறிது பதற்றம் ஏற்பட்டதாக சில வாரங்களுக்கு முன்னர் செய்திகள் வெளியாகியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# இலங்கை வீரர்களுக்குத் தடை; தமிழக ரசிகர்களுக்கு ஏமாற்றம்!

இந்தியாவில் ஐ.பி.எல் போட்டிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில் இலங்கை வீரர்களுக்கு தமிழக அரசு தடை விதித்தமையால், சென்னையில் நடைபெறும் போட்டிகளில் மட்டும் இலங்கை வீரர்கள் தவிர மற்ற வீரர்களை தெரிவு செய்து கொள்ளும்படி ஐ.பி.எல். நிர்வாகம் அறிவித்தது. அதன்படி இலங்கை வீரர்கள் சென்னை தவிர மற்ற மைதானங்களில் விளையாடி வருகின்றனர்.

இந்நிலையில், லீக் ஆட்டங்கள் முடிந்து 4 அணிகள் அடுத்த சுற்றுக்கு தெரிவுசெய்யப்படும். அடுத்த சுற்றில் முதல் இரண்டு போட்டிகள் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டு இருந்தது.

ஆனால், பல்வேறு தடைகளைத் தாண்டி அடுத்த சுற்றில் ஆடும்போது, இலங்கையின் முன்னணி வீரர்கள் இல்லாமல் வலுவான அணியை தெரிவு செய்யமுடியாது என்றும், அதனால் அவர்கள் கண்டிப்பாக பங்கேற்க வேண்டும் எனவும் அணிகளின் உரிமையாளர்கள் வலியுறுத்திவந்தனர்.

அவர்களின் வேண்டுகோளை ஏற்ற ஐ.பி.எல். நிர்வாகம், இலங்கை வீரர்கள விளையாடும்வகையில், சென்னையில் நடைபெறவிருந்த அடுத்த சுற்றுப் போடடிகளை டெல்லிக்கு மாற்றியுள்ளது. சென்னையில் நடைபெற இருந்த அதே நாளில் இப்போட்டிகள் டெல்லி பெரோஸ் ஷா கோட்லா மைதானத்தில் நடைபெறும். இதனால் சென்னை ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளதுடன், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியினரும் மைதான ஆதரவை இழந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# தொடர்ந்தும் ஏமாற்றப்படும் மலையக சமூகம்

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான கூட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒரு மாதமளவில், முடிவடைந்துவிட்டது. இந்தநிலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் இலங்கை தேசிய தொழிலாளர் சங்கம் ஆகிய கூட்டு உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட தொழிற்சங்கங்களை தவிர்ந்த ஏனைய தொழிற்சங்கங்கள் போராட்டங்களை நடத்திவருகின்றன. இந்தப் போராட்டங்கள், பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு உரிய சம்பளம் பெற்றுக் கொடுக்கப்படவில்லை என்ற காரணத்தை முன்வைத்தே நடத்தப்பட்டுவருகின்றன.

இவ்வாறான ஒரு போராட்டத்தின் போதே கொட்டக்கலையில் வைத்து ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தரப்பினரே மேற்கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டது. எனினும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தரப்பினர் அந்தத் தாக்குதலை நியாயப் படுத்தும் வகையிலேயே தமது கருத்துக்களை வெளியிட்டு வந்தனர். இதற்குக் காரணம் எதிர்த்தரப்பினர் எதனைச் செய்தாலும் சம்பளக்கூட்டு உடன்படிக்கையை எதுவும் செய்துவிடமுடியாது என்பது காங்கிரஸுக்கு தெரியும் என்பதனாலாகும். இதேவேளை தாம் எந்த போராட்டங்களை செய்தாலும், சம்பள உடன்படிக்கையை எதுவும் செய்ய முடியாது என்பது போராட்டங்களை நடத்தும் தொழிற்சங்கங்களுக்கும் தெரியும்.

எனினும் தமது அங்கத்தவர்களை திருப்திப்படுத்தும் வகையில் எதனையாவது செய்யவேண்டும் என்ற கட்டாயத்தின் அடிப்படையில், குறித்த தொழிற்சங்கங்கள் போராட்டங்களை நடத்திவருகின்றன. அத்துடன் அடுத்தகட்டமாக வரப்போகும் மத்திய மாகாண சபையின் தேர்தலை மையமாகக்கொண்டும் இந்தப் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன என்பதே உண்மை. யதார்த்தத்தில் பெருந்தோட்ட மக்கள் தற்போது தமது சம்பள உயர்வுக்கு தொழிற்சங்கங்கள் போராடிப் பெற்றுக்கொடுக்கும் என்ற நம்பிக்கையை இழந்துவிட்டனர்.

ஏனெனில் அவர்களில் பெரும்பாலானோர் பெருந்தோட்ட தொழிற்துறையில் சேவைபுரியும் அதேநேரம் மாற்றுத் தொழில்களையும் மேற்கொண்டுவருகின்றனர். அதன்மூலம் வருமானங்களையும் பெற்றுவருகின்றனர். எனவே சம்பள உயர்வைப் பற்றி அவர்கள் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. எனினும் அவர்களை தம்பக்கத்தில் இருந்து நழுவவிட்டு விடக்கூடாது என்பதில் குறியாக உள்ள தொழிற்சங்கங்கள், தொழிலாளர்களை போராட்டங்களில் ஈடுபட தூண்டிவருகின்றன. இதன்காரணமாகவே தொழிற்சங்கங்களின் போராட்டங்களுக்கு பெருந்தோட்ட மக்கள் தமது பெருத்த ஆதரவை வழங்கவில்லை.

இந்த நிலையில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காக தொழிற்சங்கங்கள் மேற்கொண்டுவரும் பிரயத்தனங்கள் எந்தவகையில் தேர்தலுக்கு உதவப்போகின்றன என்பதை எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலிலேயே பார்க்கமுடியும். குறிப்பாக மலையகத்தை பொறுத்தவரை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு மக்கள் மத்தியில் ஆதரவு குறைந்துள்ளதாக அந்தக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், நாடாளுமன்ற உறுப்பினர் பி.திகாம்பரத்தின் தொழிலாளர் தேசிய சங்கம் போன்றவற்றின் உறுப்பினர் கூறுகின்றனர். பொதுவாக ஐக்கிய தேசியக் கட்சிக்கே பெருந்தோட்ட மக்கள் மத்தியில் ஆதரவு உள்ளது என்பது அவர்களின் கருத்து.

இதன்போது சம்பள உடன்படிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கமும் கைச்சாத்திட்டுள்ளது என்பதை கூட பெருந்தோட்ட மக்கள் கருத்திற்கொள்ளவில்லை. காரணம் அவர்கள் தமது பொருளாதார முன்னேற்றத்தில் அரசாங்கத்தின் பங்கு குறைவாக உள்ளமையால், மாற்றுக்காக ஐக்கிய தேசியக் கட்சியை நாடவேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதே உண்மை. அத்துடன் மத்திய ஆட்சியிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் நடவடிக்கைக்கு பெருந்தோட்ட மக்கள் தமது ஆதரவை வெளிப்படுத்தி வருகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.



அமலன்

வாரமலர்
# தினமுரசு

த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## காணி அபகரிப்பு பாதகத்தை விளைவிக்கும்

யுத்தம் முடிவுக்குவந்து நான்கு வருடங்கள் ஆகின்றபோது. வடகிழக்கில் மக்களின் குடியிருப்புப் பகுதிகளிலிருந்து படையினர் அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்றும். அதிகரித்த படைகளின் பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும் என்றும் உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டத்தில் கோரிக்கைகள் முன் வைக்கப்படுகின்ற சூழலில் இராணுவ தேவைகளுக்காக தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றது.

வடக்கில் பிரதேச சபைகள் ரீதியாக படை முகாம்கள் அமைந்திருந்த பகுதிகளைச் சுற்றியிருந்த காணிகள் முன்னர் அபகரிக்கப்பட்டது. இப்போது வலிகாமத்தில் சுமார் ஆறாயிரம் ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளது.

புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் நாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்கள் இருக்கமுடியாது. யுத்த காலத்தில் பாதுகாப்புத் தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்ட பொதுமக்களின் வீடுகளும், காணிகளும் மீண்டும் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றெல்லாம் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் இன்று காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளது.

அரசியல் பலமும், அதிகாரமும் இருப்பதால் எதை வேண்டுமானாலும் செய்துவிட முடியுமென்ற நிலையில் காரியங்கள் நடந்தேறுகின்ற போக்கை அவதானிக்க முடிவதாக அவதானிப்பாளர்கள் கூறுகின்றனர். வடக்கில் திட்டமிட்ட காணி அபகரிப்பை செய்வதற்காகவே கிழக்கில் கண் துடைப்புக்காக சில காணிகள் அபகரிக்கப்படுகின்றன என்று மக்கள் சந்தேகிக்கின்றனர்.

அரசின் காணி அபகரிப்பானது எதிர்ப்பு கோஷங்களோடு மீண்டும் தமிழ் மக்களை வீதியில் இறக்கவும். தமிழர்களுக்காக போராடுகின்றவர்களாக தம்மைக் காட்டிக்கொள்ளவும். எதிர் அரசியல் கட்சிகளுக்கும் சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது.

அரசோடு குறிப்பாக ஜனாதிபதியோ. நேரடியாக பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு மாறாக எதிர்ப்பு போராட்டங்களை ஒருவர் மாறி ஒருவர் நடத்துவதால் பயன்மிகுந்த அரசியல் இலாபத்தை பெற முயற்சிக்கின்றனர்.

இவ்வாறான. எதிர்மறையான சூழலை அரசாங்கம் விரும்புகின்றதா?. அரசாங்கமே அதை ஊக்குவிக்கின்றதா? என்ற சந்தேகங்களும் அவதானிகள் மத்தியில் எழுந்துள்ளது.

எனவே காணி அபகரிப்பு என்ற விடயத்தில் அரசாங்கம் தொடர்ந்தும் மௌனமாக இருப்பதைத் தவிர்த்து ஆக்கபூர்வமான தீர்வொன்றைக் காணவேண்டும். நியாயங்களை அரசிடமிருந்து எதிர்பார்க்க முடியாது என்ற குற்றச்சாட்டுக்களை பொய்யாக்கி நியாயங்களை மக்களுக்குப் பெற்றுத் தரும் அரசு என்ற தெளிவான செய்தியை வெளிப்படுத்த அரசு துணிச்சலோடு முயற்சிக்கவேண்டும். அத்தகைய முயற்சியானது தமிழ் மக்களுக்கும் அரசுக்குமான நம்பிக்கையை வளர்த்தெடுக்க உதவும்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் அரசின் வெற்றிக்குத் தடையான பிரதான காரணிகளில் ஒன்றாக காணி அபகரிப்பு இருக்கப்போவது நிச்சயமாகும். தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுக்க அரசு நிறையவே காரியங்கள் ஆற்றவேண்டியுள்ளது. அந்தக் காணி அபகரிப்பை தடுத்து உரிமையாளர்களுக்கே மீண்டும் வழங்குவதிலிருந்து ஆரம்பிக்கலாம்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.






# ஈழத் தமிழர் விவகாரம்; அரசியலும் துரோகமும்

**தமிழக** ஆட்சியை தற்போது கையில் வைத்திருக்கும் செல்வி ஜெயலலிதா. ஜெயராம் தலைமையிலான அரசு ஈழத்தமிழர்கள் தொடர்பாக மேற்கொள்கின்ற செயற்பாடுகள் அனைத்தும் அரசியல் நோக்கம் கொண்டவை என்ற கருத்துப்பட தி.மு.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி வெளியிட்டுள்ள கருத்துக்களை அண்மையில் காணக் கூடியதாக இருந்தது.

அதைப் பார்த்தபோது சில வாரங்களுக்கு முன்னர் இந்திய மத்திய அரசுக்கு வழங்கிவந்த ஆதரவை தி.மு.க விலக்கிக் கொள்வதாக கலைஞர் அறிவித்த வேளையில் தமிழகத்தின் தற்போதைய முதல்வர் வெளியிட்ட அறிக்கை மனதில்பட்டுத் தெறித்தது.

குறித்த அறிக்கையில், "கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்" என்ற பழமொழியுடன் ஆரம்பிக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டு இலங்கையில் போர் உச்சக்கட்டத்தில் இருந்த போது, மத்தியிலும் மாநிலத்திலும் அதிகாரத்தைக் கையில் வைத்திருந்தவர் கருணாநிதி. அப்போது மத்திய அரசுக்கு உரிய வகையில் அழுத்தங்களைக் கொடுக்காமல் சங்கிலிப் போராட்டம் என்றும் மூன்று மணிநேர உண்ணாவிரதம் என்றும் தமிழர்களை ஏமாற்றி இருந்தார்.

கடந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுக் கூட்டத்தில் அமெரிக்காவின் சார்பில் கொண்டுவரப்பட்ட ஓரளவு வலுவான தீர்மானத்தை இந்திய அரசு வலுவிழக்கச் செய்தபோது கருணாநிதி மௌனமாக இருந்தார். இவ்வாறு மத்திய அரசை எதிர்த்து வலிமைக் குரல் கொடுக்கவேண்டிய சந்தர்ப்பங்களையெல்லாம் நழுவவிட்டு தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள சொல்லொண்ணாத் துயரங்களுக்கெல்லாம் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டிய கருணாநிதி, தன்னுடைய பொறுப்பிலிருந்து நழுவும்வகையில், தமிழ் மக்களை ஏமாற்றும் வகையில் முற்போக்குக் கூட்டணியில் இருந்து விலகுவது என்ற அறிவிப்பை தற்போது வெளியிட்டுள்ளார்" என்று ஜெயலலிதாவின் குறித்த அறிக்கை தொடர்கிறது.

இங்க அவதானிக்கப்படுவது என்னவென்றால், இரண்டு தமிழகத்தின் முக்கிய சக்திகளாக விளங்குகின்ற அ.தி.மு.க, தி.மு.க. ஆகிய இரண்டு தரப்புக்களும் ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளைத் தமது அரசியல் இலாபங்களுக்காக கையாண்டுகொண்டிருக்கின்றனர். அது ஈழத்தமிழர் பிரச்சினை என்றைக்கு விஸ்பரூபம் எடுத்ததோ அன்றிலிருந்து இன்றுவரை தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றது.

ஈழத்தமிழர்களுக்கும் தமிழக மக்களுக்கும் இடையில் இருந்துவரும் உணர்வுரீதியான பலமான உறவு, அதன் உணர்ச்சி வெளிப்பாடுகள் என்பவற்றைத் தமது தேர்தல் அரசியலுக்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதில் குறித்த கட்சிகள் அக்கறையாகவே இருக்கின்றன. இதனை கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஈழத்தமிழர்கள் அனுபவரீதியாக உணர்ந்து இக்கின்றார்கள் - கண்டு கொண்டிருக்கிறார்கள். இறுதி யுத்த காலத்தில் மத்திய அரசின் விருப்பங்களை மீறி ஈழத்தமிழர்களுக்காக உறுதியான கருத்துக்களை எடுக்கத் தவறிய தி.மு.க. அரசு கண்துடைப்புக்காக ஆர்ப்பாட்டங்களையும் உண்ணாவிரதங்களையும் நடத்தி. தமது அக்கறையை வெளிக்காட்டியிருந்தது.

இதன்விளைவு இறுதியாகத் தமிழகத்தில் நடந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி மோசமான தோல்வியைச் சந்திப்பதற்கு ஒருகாரணமாக அமைந்திருந்தது. இந்நிலையிலேயே வீழ்ந்திருந்த தமது மக்கள் ஆதரவைச் சரிசெய்து கொள்வதற்காக 84 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட டெசோ அமைப்பை தூசு தட்டிய கலைஞர், இதன் ஊடாக ஈழத்தமிழர்களின் துயர் துடைக்கப்போவதாக வீரப்பிரதாபம் செய்தார். குறித்த டெசோ மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை ஐக்கிய நாடுகள் சபைக்கும் அனுப்பி தனது அக்கறையை வெளிப்படுத்தியிருந்த வேளையில்தான் சனல்-04 தொலைக்காட்சி வெளியிட்ட பிரபாகரன் மகன் பாலச்சந்திரன் தொடர்பான புகைப்படங்கள் தமிழகத்தில் மாணவர் மத்தியில் ஆழமான உணர்வுகளைத் தூண்டிவிட்டு அவர்களை வீதிக்கு இறக்கிவிட்டிருந்தது.

இந்நிலைமை மோசமாகிப் போவதை அவதானித்த இரு பெரும் கட்சிகளும் அந்த மாணவர்களின் உள்ளக் குமுறல்களைத் தமக்கான ஆதரவுத்தளங்களாக மாற்றிக்கொள்வதற்கு முனைப்புக்காட்டின.

அதிரடியாகச் சட்டசபையில் தீர்மானத்தைக் கொண்டுவந்த அ.தி.மு.க. அரசு இலங்கையின் மீது பொருளாதாரத் தடை விதிக்கவேண்டும், இலங்கை ஜனாதிபதிக்குத் தண்டனை வழங்கவேண்டும் என்ற தொனியில் தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது.

இதற்குப் போட்டியாக தனது ஈழ உணர்வை வெளிப்படுத்து வதற்கு கலைஞரின் கரங்களில் இருந்த ஒரேயொரு ஆயுதம்! மத்திய அரசுக்கு வழங்கிவந்த ஆதரவை விலக்கிக்கொள்வதாகக் கூறியதுடன் காலதாமதங்களுமின்றி அதனைச் செய்துகாட்டினார் கலைஞர் கருணாநிதி.

இங்கு நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், தமிழகத்தின் அரசியல் கட்சிகள் தங்களுடைய அரசியல் நோக்கங்களுக்காக என்னதான் திருகுதாளங்கள் செய்தாலும் தமிழக மக்களின் உணர்வுகளாக அந்த மாணவர் சமூகத்தினூடாக வெளிக்கிளம்பிய அதிருப்திகளும், ஆத்திரங்களும் அப்பழுக்கற்றவை. உண்மையிலேயே ஈழத்தமிழர்கள்மீது வைத்திருக்கின்ற அன்பினதும், அக்கறையினதும் வெளிப்பாடுகள். அவை புறக்கணிக்கப்பட முடியாதவை.

கடந்த 30 வருட காலங்களாக அவலங்களைச் சுமந்து இன்று அவற்றில் இருந்து மீள்வதற்கு, ஒரு கௌரவமான அரசியல்தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு முயன்று கொண்டிருக்கின்ற ஈழத்தமிழர்களுக்கு தமிழக மாணவர்கள் ஊடாக வெளிப்பட்ட தமிழக மக்களின் அக்கறைகள் அவசியமானவை.

ஆனால் ஈழத்தமிழர்களின் எதிர்பார்ப்பிற்கு அவர்கள் வெளியிட்ட - வெளியிட்டுக் கொண்டிருக்கின்ற கருத்துக்கள் எந்தவகையில் காத்திரமானவை என்பதை நாம் அறிவுசார்ந்து சிந்திக்கவேண்டும். இன்று ஈழத் தமிழர்களுக்குத் தேவையானது எல்லாம் மீள்வாழ்வும் கௌரவமான அரசியல் தீர்வுமேயாகும். தமிழகத்தில் கூறப்படுவதுபோன்று தமிழீழம் என்பது நடைமுறையில் எந்தவகையிலும் ஏற்புடையதல்ல என்பது ஈழத்தமிழினம் எப்போதோ புரிந்துகொண்டு விட்டது.

இன்று ஒன்றுபட்ட இலங்கைக்குள் சம உரிமையுடன் வாழ்வதே எதிர்பார்ப்பாக இருக்கின்றது. அதேபோன்று யுத்த குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதோ, இலங்கை ஜனாதிபதியைக் குற்றவாளிக்கூண்டில் ஏற்றுவதோ சாத்தியமான ஒரு விடயமல்ல. இறைமையுள்ள ஒரு ஜனநாயக நாட்டின் தலைவரை சர்வதேச நீதிமன்றின் முன் குற்றவாளியாக நிறுத்த முடியாது என்று உலகச் சட்டம் கூறுகின்றது. அப்படியானால் சர்வதேச நாடுகள் விரும்பினாலும்கூட ஆட்சியில் இருக்கும்வரை இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்ள முடியாது. அதற்கு அவர் ஆட்சியதிகாரத்தை இழக்கும் வரை காத்திருக்கவேண்டும்.

தற்போதைய இலங்கை அரசியலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இருக்கின்ற ஆதரவு நிலைப்பாட்டைப் பார்க்கும்போது அது நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒன்று என்று அரசியல் புரிந்தவர்களுக்குத் தெரியும்.

யதார்த்தம் இவ்வாறு இருக்கையில் தமிழீழம் வேண்டும் என்று கூச்சலிடுவது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை குற்றவாளிக் கூண்டில் ஏற்றவேண்டும் என்று கோஷம் போடுவதும் ஒன்றுபட்ட இலங்கையில் சம உரிமைகளைப் பெற்று கௌரவமாக வாழ வேண்டும் என்று முயற்சித்துக் கொண்டிருக்கின்ற ஈழத்தமிழர்களின் எதிர்பார்ப்பிற்கு எந்தவகையிலும் உதவப்போவதில்லை. மாறாக இருக்கின்ற இடைவெளிகளையும் சந்தேகங்களையும் அதிகரிக்கவே செய்யும்.

எனவே ஈழத்தமிழர்கள் மீது அப்பளுக்கற்ற அன்பையும் ஆதரவையும் கரிசனையும் வைத்திருக்கின்ற தமிழக உறவுகள் ஈழத்தமிழர்களின் தற்போதைய நிலைமையையும் எதிர்பார்ப்புக்களையும் கருத்திற்கொண்டு அவற்றை வலுப்படுத்தும் தொனியிலும் விரைவுபடுத்தும் வகையிலும் தங்களுடைய கருத்துக்களையும் ஆதரவுக் கரங்களையும் வெளிப்படுத்த வேண்டும். மாறாக தமிழகத்தில் இருந்து தங்கள் அரசியலுக்காகவும்,சுய நலன்களுக்காகவும் கற்பனைக் கதைகளையும், உளுத்துப்போன பழைய உணர்ச்சி பூர்வக் கருத்துக்களையும் வெளியிடுபவர்களை நம்பித் தமிழக மக்கள் செயற்படுவார்களாயின் அது இன்றைய நிலையில் ஈழத்தமிழர்களுக்குச் செய்கின்ற துரோகமாகவே இருக்கும்.

*சிவன்*

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பொன்விழா ஆண்டில்

# ஒஸ்மானியாக் கல்லூரி

## துள்ளித் திரிந்த பள்ளியின் பசுமையான நினைவுகள்...




**ஒஸ்மானியாக்** கல்லூரியின் அத்திபாரக்கல் இட்டாலும் காலத்திற்குக் காலம் அரசியல் மாற்றங்களால் எவ்வளவோ தடங்கல்களும் இன்னல்களும் வந்தன.

அந்தச் சந்தர்ப்பத்தில் கம்பளை ஸாஹிராக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் அப்போதைய பிரதமர் திருமதி எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டார நாயக்காவின் நெருங்கிய நண்பருமாகிய மேன்மைமிக்க முஸ்லிம் தலைவர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களிடம் ஆலோசனைகள் பெறப்பட்டன. அவர்களின் தகுந்த ஆலோசனைகளின்மூலம், திட்டப்படி கட்டட வேலைகள் தங்குதடையின்றி ஆரம்பமாகின. யாழ். காங்கேசன்துறை வீதியில் அமைந்திருந்த வைத்திலிங்கம் கம்பனியினருடன் செய்த ஒப்பந்தத்தின் படி அந்நிறுவனத்தினர் கட்டடத்தை அமைத்தனர். பல இடையூறுகளையும் தடங்கல்களையும் விலக்கிக்கொண்டு "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக" கட்டடம் மேலெழத் தொடங்கியது. ஒஸ்மானியாக் கல்லூரிக்கு ஆரம்பத்தில் 'ஸாஹிராக் கல்லூரி' என்ற பெயரே இருந்துவந்தது. 1962ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திலேயே 06 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்களை ஸாஹிராக் கல்லூரியில் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

அக்காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களுக்கு கல்வி அமைச்சர் பதவியும் கிடைத்தது. ஆரம்பத்தில் கல்லூரியின் கட்டட வேலைகளுக்கு ஆலோசனை-களையும் உற்சாக மொழிகளையும் வழங்கிய அவருக்கு கல்வி அமைச்சர் பதவி கிடைத்ததும் கல்லூரி மீது இருந்த அக்கறை பன்படங்காகப் பெருகிறது. கல்லூரியை அபிவிருத்தி செய்வதில் பெரும் பங்கு வகித்தார். அவர் கல்லூரிக்காக செய்த உதவிகளை எவராலும் மறக்கவோ, மறைக்கவோ முடியாது.

1963 ஆம் ஆண்டு பிறந்தது.

கட்டடம் கல்லூரியாக மாறுவதற்கு ஆயத்தம் பூண்டது. அக்காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு அமைச்சர்கள் விஜயம் செய்வதை தவிர்த்துக் கொள்ளும் சூழ்நிலை நிலவியபோதும் கல்வி அமைச்சர் டாக்டர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் யாழ்ப்பாணம் ஸாஹிராக் கல்லூரியை ஆரம்பித்து வைப்பதற்காக யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வமாக விஜயம் மேற்கொண்டார்கள்.

1963 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் திகதி யாழ். முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு நன்னாள். அந்த நாள் அன்றுதான் டாக்டர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் ஸாஹிராக் கல்லூரி என்று நாமம் பூண்டிருந்த எமது கல்லூரியை உத்தியோக பூர்வமாகத் திறந்துவைத்தார். அவருடன் வர்த்தக அமைச்சராக பதவிவகித்த திரு.இலங்கரத்ன அவர்களும் வந்து திறப்புவிழாவைச் சிறப்பித்தார்கள்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட அரசியல் பிரமுகர்கள், பத்திரிகையாளர்கள் மத்தியில் திறப்புவிழா மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. அக்காலத்தில் யாழ்ப்பாணத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. அல்பிரட் தங்கராஜா துரையப்பாவும் இவ்விழாவில் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தார். இவர் கல்லூரி மீது நல்லெண்ணம் வைத்து அதன் வளர்ச்சிக்கு ஒரு உந்துசக்தியாக விளங்கினார். விழா வைபவத்தன்று இவரது தந்தை காலமாகிவிட்டபோதும்கூட கல்லூரியின் நலன் கருதி திறப்புவிழாவில் கலந்துகொண்டு விழாவை சிறப்புறச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

எமது கல்லூரிக்கு 'ஸாஹிராக் கல்லூரி' என்ற பெயரளவில் தீர்மானிக்கப்பட்டிருந்தும் அத்திறப்பு விழாவின்போது டாக்டர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் இஸ்லாத்தின் மூன்றாம் கலீபாவாகிய உஸ்மான் (ரலி) அவர்களை நினைவுபடுத்தி 'ஒஸ்மானியாக் கல்லூரி' என்ற நாமத்தை சூட்டினார்கள். அன்றிலிருந்து இன்றுவரை எமது கல்லூரி 'ஒஸ்மானியாக் கல்லூரி' என்ற பெயருடன் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

ஒஸ்மானியாக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதும் முதன்முதலில் ஜனாப் சீ.எம்.எ.ஜிப்ரி அவர்கள் அதிபர் பதவிவகித்தார்கள். அதிபர் உட்பட ஏழு ஆசிரியர்களும் நியமனம் பெற்றனர். திரு.ஆசாரியஸ் பெர்னாந்து, திரு.பொ.சிவஞானசுந்தரம், திரு. எஸ்.ஸ்ரீ.தர்ம நாதன், ஜனாப் எம்.யூ.ஏ.கையூம், ஜனாப் எம்.ஐ.எம்.ஷாபி, ஜனாப் எம்.ஸீ.சலீம் ஆகியோர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றனர். முதல் நாளிலேயே 150 மாணவர்கள்வரை சேர்த்துக் கொள்ளப் பட்டனர். சில மாதங்கள் சென்றபின் கல்லூரிக் கீதமும் தயாராகிவிட்டது. கவித்துவ புலமைமிக்க ஆசிரியர் திரு.ஆசாரியஸ் பெர்னாந்து அவர்கள் கல்லூரிக் கீதத்தை இதமாக இயற்றிக் கொடுத்தார்கள். இந்தியாவின் தேசிய கீத மெட்டிற்கு அமைவாக "வளர் கலை மாமதியோடிளந் தாரகை வானக மேலொளி மல்க" என்று அமைக்கப்பட்டிருந்தது.

அதன்பிறகு ஒஸ்மானியாக் கல்லூரி படிப்படியாக வளர்ந்தது. கல்லூரியின் விஸ்தரிப்பிற்காக அதன் சுற்று வட்டாரத்திலுள்ள காணிகளும் தென்னந்தோப்புக்களும் பயன்படுத்தப்பட்டன. அந்தவகையில் எனது தாயாரின் (பரீத் றஸீனா) தென்னந்தோப்புக் காணியும் வீடும்கூட கல்லூரியின் விஸ்தரிப்பிற்காகப் பயன்படுத்தப்பட்டன. நான் பிறந்து வளர்ந்த (10 வயது வரை) மண்ணில்தான் இன்று ஒஸ்மானியாக் கல்லூரி வீற்றிருக்கின்றது என்று நினைக்கும்போது என் மனதில் ஆனந்தம் பொங்கிவழிகின்றது. என் கல்லூரிக்குள் காலடி எடுத்து வைக்கும் தருணங்களிலெல்லாம் என் தாயாரின் அன்பு வதனமும் நிலாச்சோறு ஊட்டிய அந்த இனிய நினைவுகளுமே என் மனக்கண் முன் நிழலாடும்.

**முன்னாள் உயர்தர மாணவர் மன்றத் தலைவர்,**
**அல்ஹாஜ் M.F.M.இக்பால்**

(தொடரும்...)

---

**கல்கி வாரமலருக்காக பிரபல அரசியல் கட்டுரையாளர் ஞாநி எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி...**

# கண்ணிவெடி



**கம்போடியாவில்** சுமார் 30 வருடங்கள் அமெரிக்க, ரஷ்ய, சீன ஆயுத உதவியுடன் வெவ்வேறு இயக்கங்கள் யுத்தம் நடத்தியிருந்தன. சண்டையிடும் எதிரெதிர் அணிகள் இன்னொரு அணி தம்மை நெருங்கவிடாமல் தடுக்க மாறி மாறி நிலமெங்கும் கண்ணிவெடிகளைப் புதைத்திருக்கின்றன. சண்டை முடிந்தாலும், கண்ணிவெடிகளை அகற்றும் வேலைமுடிவதில்லை.

கண்ணிவெடிகள் எங்கெங்கே இருக்கின்றன என்று தெரியாமல் காலை வைத்து உறுப்புகளை இழந்து நடைப் பிணங்களாக வாழ்வோர் நிலை மிக பரிதாபகரமானது. கம்போர்டியாவில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இப்படி கை, கால் இழந்தவர்கள் உள்ளனர்.

கண்ணிவெடி விபத்தில் பாதிக்கப்படுவோருக்கான நியாயத்தை யாரிடமும் போய் கேட்கமுடியாது. கண்ணிவெடி விபத்தில் கை, கால் இழந்த சிறுவர்களுக்கு நீங்கள்தான் பொறுப்பு என்று எந்த தரப்பையும் தனியே அடையாளம் காட்ட முடியாது..

கம்போடியாவில் கண்ணிவெடியில் பாதிக்கப்பட்டவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் சிறுவர்கள்தான். சுமார் 2ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் கண்ணிவெடியால் பாதிக்கப்பட்டுள்ளன. இங்கே காட்டில் சுள்ளி பொறுக்கச் செல்பவர்களும், வியட்நாம் யுத்தத்தின் போதும் உள்ளூர் யுத்தத்தின் போதும் போடப்பட்ட குண்டுகளின் உலோகக் கவசங்களைப் பொறுக்கிக்கொண்டு வந்து விற்றுப்பிழைக்கச் செல்வோரும் கண்ணிவெடியாலும் இன்னும் வெடிக்காமல் இருக்கும் சில க்ளஸ்ட்டர் குண்டுகளாலும் உயிரையும் உறுப்புகளையும் இழக்கிறார்கள்.

பெருமளவில் கம்போடியாவில் கண்னிவெடிகளும் குண்டுகளும் வயல்களிலிருந்து நிலங்களிலிருந்து கடந்த பத்தாண்டுகளில் அகற்றப்பட்டாலும் இன்னும் சுமார் 60 இலட்சம் கண்ணி வெடிகள் இருப்பதாக மதிப்பிட்டிருக்கிறார்கள். கண்ணிவெடியை அகற்றுவது எளிதானதும் மலிவானதும் அல்ல. ஒரு கண்ணி வெடியைப் புதைக்க ஆகும் செலவு வெறும் மூன்று டொலர்தான். அகற்றுவதற்கு ஒரு வெடிக்கு சுமார் 1200 டொலர் செலவு ஆகிறது. வருடந்தோறும் சுமார் மூன்று கோடி டொலர் கண்ணி வெடி அகற்ற மட்டும் உலக நாடுகளின் நன்கொடைமூலம் செலவிடப்படுகிறது. இதே நிதி உதவி நீடித்தால், மொத்த கண்ணிவெடிகளையும் அகற்றி முடிக்க 15 முதல் 20 வருடம் ஆகும் என்கிறார்கள். அதுவரை அந்த நிலங்களில் விவசாயம் செய்யமுடியாது.

கம்போர்டியாவில் கண்ணிவெடி வைத்தவரே கண்ணிவெடிக்கு எதிராக இயக்கம் நடத்தி செயற்பட்டு வருகிறார். அவர் பெயர் அக்கிரா. ஆறு வயதில் அவர் பெற்றோர் கெமர் ரௌஜ் எனப்படும் இடதுசாரி தீவிரவாதப் போராளி அமைப்பால் கொல்லப் பட்டனர். அவரை அமைப்பே எடுத்து வளர்த்தது. பத்து வயதிலேயே அந்த அமைப்பின் போர் வீரராக்கப்பட்டார் ரே. பின்னர் 16 வயதில் எதிரிகளான வியட்நாம் இராணுவத்தால் சிறைபிடிக்கப்பட்டதும், அந்த இராணுவத்தின் படை வீரராக்கப்பட்டார். இப்படி குழந்தை சிப்பாயாக இருந்தது முதல் யுத்தம் முடியும்வரை ரே தானே ஆயிரக்கணக்கான கண்ணிவெடிகளைப் புதைத்திருக்கிறார். தொண்ணூறுகளின் இறுதியில் யுத்தம் ஓய்ந்ததும், ரே கண்ணிவெடிகளுக்கு எதிரானவராகவும் யுத்த எதிர்ப்பாளராகவும் மாறி இதுவரை 50 ஆயிரம் கண்ணிவெடிகளைத் த்தானே அகற்றியிருக்கிறார்.

எந்த நவீன உபகரணமும் இல்லாமல், வெறும் குச்சிகளை வைத்துக்கொண்டு வெடி இருக்கும் இடத்தைக் கண்டறிந்து அகற்றும் திறமையுடையவர் ரே. உலகம் முழுவதும் கண்ணி வெடி அகற்றலில் ஈடுபடும் அமைப்புகள் அவருக்கு இதற்கான நவீன பயிற்சி கொடுத்து தொடர்ந்து அவரைப் பயன்படுத்துகின்றன.

அக்கி ரே கண்ணிவெடி ஆபத்து பற்றி விளக்குவதற்கென்றே ஒரு தனி மியூசியத்தை சியாம் ரீப் நகரில் வைத்துள்ளார். அங்கே சென்று சுற்றிப்பார்த்தேன். அதில் சொல்லும் தகவல்கள் எல்லாம் பெரும் கவலை அளிக்கின்றன.

உலகம் முழுவதும் கண்ணி வெடிகளை இனி வைக்கக் கூடாது, முழுக்க நீக்கிவிட வேண்டும் என்று ஐ.நா மூலம் கனடா ஒட்டாவா நகரில் ஒப்பந்தம் 1997ல் போடப்பட்டது. இதை ஏற்றுக்கொண்டு 167 நாடுகள் கையெழுத்திட்டன. இவை தம்மிடம் உள்ள கண்ணி வெடிகளை எல்லாம் அழித்துவிட ஒப்புக்கொண்டன. பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, பல்வேறு ஐரோப்பிய நாடுகள், ஆஸ்திரேலியா, இன்னும் பல சிறு நாடுகள் இவை. கையெழுத்து போட மறுக்கும் நாடுகள் பட்டியல்: அமெரிக்கா, சீனா, ரஷ்யா, கியூபா, இஸ்ரேல், ஐக்கிய அரபு நாடு, பாகிஸ்தான், இந்தியா!

கம்போடியாவிலிருந்து திரும்பும் வழியெல்லாம் என் மனம் இலங்கையைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தது. அக்கி ரே போல அங்கிருந்து யாரேனும் வெளிப்பட்டு வருவார்களா? யாழ்ப்பாணமும், கிழக்கும், வன்னியும் இன்னமும் கண்ணிவெடிகளால் நிரம்பியிருக்கின்றன. குறிப்பாக வன்னியின் செழுமையான வயல்களில் வேளாண்மை செய்யவே முடியாதபடி அவற்றில் நாற்றுக்கு பதிலாக கண்ணிவெடிகளைப் புலிகளும் இராணுவமும் விதைத்து வைத்திருக்கிறார்கள்.

மண்ணில் விழுந்தால் மறுபடி விதையாக முளைப்போம் என்பது கண்ணிவெடிக்குப் பொருந்தாது. மண்ணில் நடப்போரை சவமாக ஆக்கும் விதை அது. மொத்தம் 640 கிராமங்கள் கண்ணிவெடிகளால் வீணாக்கப்பட்டு கிடக்கின்றன. முப்பது வருடங்களில் கண்ணிவெடிகளால் மட்டும் சுமார் 20 ஆயிரம் இராணுவத்தினரும், 12 ஆயிரம் புலிகளும் பாதிக்கப்பட்டதாக ஒரு கணக்கு சொல்கிறது. கடந்த 4 வருடங்களில் மட்டும் சுமார் 900 கோடி ரூபாய், கண்ணிவெடி அகற்ற செலவிடப்பட்டிருக்கிறது என்கிறார்கள். இன்னும் சுமார் 200 சதுர கிலோ மீற்றர் பகுதிதான் மிகுதி என்றும் 90 சதவிகித கண்ணிவெடிகளை அகற்றியாகிவிட்டது என்றும் சொல்வது நம்பத் தகுந்ததாக இல்லை என்று தொண்டு நிறுவனங்கள் சொல்கின்றன. சரியான கணக்குகள் எதற்கும் கிடையாது.

கம்போடியா பற்றி அறியும் எவரும் இலங்கைத் தமிழர்களை மறுபடியும் ஆயுதம் எடுத்து யுத்தம் நடத்தும்படி ஒருபோதும் தூண்டமாட்டார்கள். அப்படிச் செய்தால் அவர்களுடைய மனிதநேயத்தையும் இன உணர்வையும் நான் நிச்சயம் நம்பமாட்டேன். யுத்தம் எதற்கும் தீர்வல்ல. அது தீர்த்துக் கட்டுவது மனிதர்களின் வாழ்க்கையை மட்டும்தான்.




"அன்புக்குரிய ஜெருசலேம் நகரின் பெருமக்களே! ஜெருசலேம் ஒரு புனிதபூமி என்பதை உங்களைப் போலவே நானும் அறிவேன். ஒரு யுத்தத்தின் மூலம் அந்த மண்ணில் இரத்தம் சிந்தப்படுவதை நான் விரும்பவில்லை. நீங்களாக விரும்பி கோட்டையை ஒப்படைத்து விடும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

அப்படிச் செய்வீர்களானால், என் மொத்த சொத்தில் ஒரு பகுதியையும் நீங்கள் சாகுபடி செய்வதற்குத் தேவையான நிலத்தையும் நான் உங்களுக்கு அளித்துவிட்டு வந்த வழியே போய்விடுவேன். யுத்தம்தான் தீர்வு என்று நீங்கள் முடிவு செய்வீர்களானால், விளைவுகளுக்கான பொறுப்பு என்னுடையதல்ல என்பதை இப்போதே தெரிவித்துவிடுகிறேன்."

மிரட்டல் அல்ல. திமிரும் அல்ல. உண்மையிலேயே ஜெருசலேத்தில் இரத்தம் சிந்தக் கூடாது என்று சலாவுதீன் விரும்பி இருக்கிறார். அதேசமயம், ஜெருசலேத்தைக் கைப்பற்றியே தீருவது என்பதிலும் உறுதியாக இருந்திருக்கிறார். அதனால்தான் அப்படியொரு அறிவிப்பைச் செய்தார்.

ஜெருசலேம் மக்கள் யோசிக்கத் தொடங்கினார்கள். அவர்களது யோசனைப் பாதைக்கு நேரெதிரான பாதையில் சிலுவைப் போர் வீரர்களும் யோசிக்க ஆரம்பித்தார்கள்.

நம்பமுடியாத அளவுக்கு இரக்க சுபாவம், அன்பு, கனிவு பொறுமை, போரில் நாட்டமின்மை போன்ற குணங்களைக் கொண்ட மன்னர்கள் மிகவும் அபூர்வம். இத்தகையவர்களைச் சரித்திரத்துக்குள் நுழைந்து தேடினால் இரு கை விரல்களுக்குள் அடங்கிவிடும் எண்ணிக்கை, குறிப்பாக, மத்திய ஆசிய சுல்தான்களுள் இத்தகைய குணம் படைத்தவர்கள் மிக மிக சொற்பம். அந்தச் சொற்ப எண்ணிக்கைக்குள் அடங்குபவர்களில் சுல்தான் சலாவுதீன் முதன்மையானவர் மட்டுமல்ல; சற்று வித்தியாசமானவரும்கூட.

ஜெருசலேம் நகரை சலாவுதீனின் படைகள் சூழ்ந்துநின்றதும் பொதுமக்களுக்கு அவர்விடுத்த வேண்டுகோள் எத்தனை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததோ அதேயளவுக்கு முக்கியத்துவம் கொண்டது, அந்த அறிவிப்புக்கு பின்னால் நடந்த சம்பவங்களும்.

உண்மையில் ஜெருசலேம் மக்கள் பெரும்பாலும் அப்போது கிருத்தவர்கள் – ஒரு முழு நீள யுத்தத்துக்கு மனதளவில் தயாராக இல்லை. சலாவுதீனின் தொடர் வெற்றிகள் ஏற்படுத்தியிருந்த பயம் அதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

இத்தனை தூரம் இறங்கிவந்து அன்பாகப் பேசுகிற சுல்தானைப் பொருட்படுத்தாமல்விட்டால் பின்விளைவுகள் வேறுவிதமாக இருக்குமோ என்கிற யோசனையும் காரணமாயிருக்கலாம். பேச்சுவார்த்தை மூலம் ஒரு சமாதானத் தீர்வு சாத்தியமா என்று கண்டறியவே அவர்கள் விரும்பினார்கள்.

ஆனால் ஜெருசலேத்தை அப்போது ஆண்டுகொண்டிருந்த கிருத்தவ ஆட்சியாளர்கள் வேறு மாதிரி சிந்தித்தார்கள். முஸ்லிம் படை நகருக்கு வெளியே முற்றுகை இட்டிருக்கிறது. சரி. எத்தனை காலம் அவர்களால் தாக்குப்பிடிக்க முடியும்? நகருக்குள் போதுமான உணவு, மருந்து வசதிகள் அப்போது இருந்தன. பல மாதங்கள் வரையிலும் கூடச் சமாளித்துவிட முடியும். கோட்டைக் கதவுகளைத் திறக்காமலேயே ஆனவரை முஸ்லிம் வீரர்களைச் சோர்வு கொள்ளச் செய்வது. அதையும்மீறி யுத்தம் தொடங்குமானால் அப்போது பார்த்துக்கொள்ளலாம். தவிர, அதற்குள் ஐரோப்பாவிலிருந்து மேலும் சில படை உதவிகள் வந்துசேரலாம்.

ஆட்சியாளர்களின் இந்தத் திட்டம் சிலுவைப் போர் வீரர்களுக்கே பிடிக்கவில்லை என்பதுதான் இதில் முக்கியமானது. அவர்கள் தொடர் யுத்தங்களால் அப்போது மிகவும் சோர்ந்திருந்தார்கள். தவிர கோட்டைக்குள் சிறைப்பட்டிருப்பது போல அடைந்துகிடப்பதிலும் அவர்களுக்கு விருப்பமில்லை. நிச்சயமாகத் தாங்களே கதவுகளைத் திறந்து யுத்தத்தைத் தொடங்கினால், தோல்வியை மட்டுமே சந்திக்க நேரிடும் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள்.

ஆகவே, தங்கள் நிலையை அவர்கள் ஆட்சியாளர்களிடம் வெளிப்படையாகச் சொல்லிவிட்டார்கள். யுத்தம் தொடங்கினால் வெற்றி கிடைப்பது இம்முறை கஷ்டம். வீம்புக்காக முற்றுகையை அனுமதித்துக் கொண்டிருந்த அப்போதைய ஜெருசலேம் ஆட்சி மன்றத்துக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. மாதங்கள் கடந்தும் முற்றுகை முற்றுப்பெறாததை எண்ணிக் கொஞ்சம் கவலைப்படத் தொடங்கினார்கள். இப்படியே தாக்குப்பிடிப்பது சிரமம் என்று எப்போது புரிந்ததோ, அப்போது சுல்தான் சலாவுதீனுக்கு அமைதித் தூது அனுப்பினார்கள்.

சுல்தான் புன்னகை செய்தார். யுத்தம் வேண்டாம். அவ்வளவு தானே? அவர் முதலில் முன்வைத்த கோரிக்கையும் அதுதான். ஆகவே தம் சம்மதத்தைத் தெரிவித்ததோடு அல்லாமல், இன்னும் சில படிகள் இறங்கிவந்து ஜெருசலேம் வாசிகளுக்குச் சில சலுகைகள் அறிவித்தார்.

அந்த விநாடியிலிருந்து பாலஸ்தீன் முழுமையாக இஸ்லாமியப் பேரரசின் கட்டுப்பாட்டின் கீழ்வந்துவிடும். அதன்பின் ஜெருசலேத்தில் உள்ள மக்கள் அனைவரும் பேரரசின் குடிமக்களாக அங்கீகரிக்கப் படுவார்கள். உள்ளூர் கிருத்தவர்கள், பல ஐரோப்பிய தேசங்களிலிருந்து வந்து நிரந்தரமாகத் தங்கியிருக்கும் கிருத்தவர்கள் அனைவருக்குமே இது பொருந்தும். மத வித்தியாசம் பார்க்கப்படமாட்டாது. யூதர்கள் மற்றும் முஸ்லிம்களுடன் அவர்கள் சமமாக அங்கே வாழலாம். ஆனால், இந்த சலுகை இராணுவ வீரர்களுக்குப் பொருந்தாது. (அதாவது சிலுவைப் போர் வீரர்களுக்குப் பொருந்தாது)

அவர்கள் மட்டும் தம் குடும்பத்தினருடன் நாற்பது தினங்களுக்குள் ஜெருசலேத்தை விட்டுவெளியேறிவிட வேண்டும். உயிருககு உத்தரவாதம் உண்டு. நகரைவிட்டு வெளியேறும் சிலுவைப்போர் வீரர்கள் மீது தாக்குதல் தொடுக்கப்படமாட்டாது. ஆனால் அப்படி வெளியேறுவதற்குப் பிணையத் தொகையாக அவர்கள் தலைக்குப் பத்து தினார்கள் கட்டவேண்டும். வீரர்களின் குடும்பப் பெண்கள் தலைக்கு ஐந்து சிரிய தினார் செலுத்தினால்போதும். குழந்தைகள் என்றால் ஒரு தினார்.

இந்தப் பிணையத் தொகையைச் செலுத்தாதவர்கள், சுல்தானின் அடிமைகளாகத் தொடர்ந்து இருக்கவேண்டியிருக்கும் என்றும் உத்தரவிடப்பட்டது.

இதன்பிறகுதான் வியப்பூட்டும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. சுல்தான் சலாவுதீன், அரசாங்க ரீதியில் எடுக்கவேண்டிய நடவடிக்கையாக மேற்சொன்ன உத்தரவைப் பிறப்பித்துவிட்டார். ஆனால் உடனே அவருக்கு சிலுவைப்போர் வீரர்களின்மீது சற்றே இரக்கம் உண்டானது. உயிருக்கு பயந்திருக்கும் வீரர்கள். அவர்களிடம் கப்பம் வசூலிப்பது பாவமல்லவா என்று அவருக்குத் தோன்றிவிட்டது.



ஆகவே, பிணையக் கைதிகள் தான் என்றாலும் தமது சாம்ராஜ்ஜிய எல்லைக்குள் வசிப்பவர்கள் அல்லவா? ஆகவே அவர்களும் தம் குடிமக்கள்தான்.அவர்களது கஷ்டத்தைப் போக்குவதும் தன்னுடைய கடமையே என்று நினைத்தவர், கோட்டைக்குள் இருந்த அறுபதாயிரம் சிலுவைப் போர் வீரர்களுள் பத்தாயிரம் பேருக்கான பிணையத் தொகையைத் தானே தன்சொந்தப் பணத்தில் இருந்து கட்டிவிடுவதாக அறிவித்தார்! அத்துடன் இன்னும் ஏழாயிரம் வீரர்களுக்கான தொகையைத் தன் சகோதரர் சைபுத்தீன் என்பவர் அளிப்பார் என்றும் சொல்லிவிட்டார்.

சுல்தானே இப்படியொரு நடவடிக்கை மேற்கொள்வதைப் பார்த்துவிட்டு அவரது அமைச்சர் பெருமக்கள், தளபதிகள் சும்மா இருக்கமுடியுமா? ஒவ்வொருவரும் ஆளுக்குக் கொஞ்சம் பணம் போட்டு முடிந்தவரை சிலுவைப்போர் வீரர்களுக்கான பிணையத் தொகையைக் கட்ட ஆரம்பித்துவிட்டார்கள்.

(தொடரும்...)

புதுக்கோட்டை அருகே மனைவி மீது கொண்ட பற்றுதல் காரணமாக, அவரது மறைவுக்குப் பின் வீட்டின் ஒரு பகுதியை கோவிலாக்கி அதில் மனைவியின் சிலையை வைத்து வழிபட்டு வரும், 78 வயதான முதியவரின் பாசப்பிணைப்பு மெய்சிலிர்க்க வைக்கிறது. புதுக்கோட்டை அடுத்த உசிலங்குளம் பகுதியைச் சேர்ந்தவர் சுப்பையா, 78. பி.எஸ்.என்.எல்., நிறுவனத்தில் அதிகாரியாக பணியாற்றி ஓய்வுபெற்றுள்ளார்.

இவரது மனைவி செண்பகவல்லி. இவர்கள், பத்து குழந்தைகளை (ஆண்-5, பெண்-5) பெற்றெடுத்தனர். இவர்களில் ஒரு ஆண், ஒரு பெண் குழந்தை பருவத்திலேயே நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டனர்.

மிகுதியாக உள்ள அனைவருக்கும் திருமணமாகிவிட்டது.

பிள்ளைகளில் மூத்தமகன் மகேந்திரவர்மன், இளைய மகன் கணேசன் ஆகியோர் மட்டுமே உசிலங்குளத்தில் உள்ள தந்தை சுப்பையா வீட்டில் அவருடன் வசித்துவருகின்றனர். திருமணத்துக்குப்பின், 48 ஆண்டு வரை, இணைபிரியா தம்பதியராக சுப்பையா, செண்பகவல்லி வாழ்க்கை நடத்திவந்தனர். சிறுநீரகக் கோளாறு காரணமாக நோய்வாய்ப்பட்ட செண்பகவல்லி, 2006 செப்.,7இல் மரணமடைந்தார்.

மனைவியின் பிரிவைத் தாங்க முடியாமல் மனம் வருந்திய சுப்பையா அதிலிருந்து மீள்வதற்காக இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாச நூல்களை படிப்பது வழக்கம். இராமாயணத்தில் சீதையின் உருவப்பொம்மையை வைத்து ராமன் அஸ்வமேத யாகம் நடத்திய வரலாற்றுத் தகவல் சுப்பையா நினைவுக்கு வந்தது.

# கூடி வாழ்ந்த தெய்வம்!



மனைவியின் மீது கொண்ட பாசத்தால், பொம்மையை ராமன் அஸ்வமேத யாகம் நடத்தியது போல, தன்னுடைய அன்பு மனைவிக்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற உயரிய எண்ணம் உருவானது.

ஆரம்பத்தில் மனைவியின் படத்தை வைத்து வணங்கி வந்த சுப்பையா, நாளடைவில் அவருக்கு சிலை வடிக்க முடிவு செய்தார். இதற்காக திருச்சியில் உள்ள ஒரு பாத்திரக்கடை உரிமையாளரை (மங்கள் அன்ட் மங்கள்) தொடர்புகொண்டு தன் விருப்பத்தை தெரிவித்துள்ளார். அவரது ஏற்பாட்டில் கும்பகோணத்தைச் சேர்ந்த சிற்பி ஒருவரிடம் ஐம்பொன்னால் ஆன சிலை வடிவமைக்கப்பட்டது. பின்னர் சிலையை வைத்து வழிபடுவதற்காக வீட்டின் ஒரு பகுதி கோவிலாக மாற்றப்பட்டு, அதில் இரண்டு அடி உயரத்தில் பீடம் அமைக்கப்பட்டு அதன்மீது மூன்றரை அடி உயரம் கொண்ட சிலை நிறுவப்பட்டுள்ளது. கோவில் மற்றும் சிலைக்காக அவர் மூன்று இலட்சம் ரூபாய் செலவிட்டுள்ளார்.

மனைவிக்கு ஐம்பொன் சிலையுடன் கூடிய கோவில் எழுப்பிய மகிழ்ச்சியில் சுப்பையா நாள்தோறும் காலை, 6 மணிக்குள் எழுந்து குளித்துவிட்டு. விபூதி பூசியபின் கோவிலுக்கு சென்று மனைவியின் சிலைக்கு விளக்கேற்றியும், சூடம் காண்பித்தும் வழிபடுவதை வழக்கமாக கொண்டுள்ளார். தனக்கும் சரி, பிள்ளைகளுக்கும் சரி, ஏதாவது காரியங்கள் கைகூட வேண்டும் என்பதற்காக மனைவின் சிலை முன்நின்று, வேண்டுவதையும் கணவர் சுப்பையா வழக்கமாக கொண்டுள்ளார். மனைவியின் பிறந்தநாள் மற்றும் நினைவு(திதி) நாள் அன்று அன்னதானம் வழங்கி வருகிறார். அம்மா மீதான அன்புகாரணமாக, அப்பா நடத்தும் நிகழ்ச்சிகளில் அவரது பெண் குழந்தைகள் குடும்பத்துடன் பங்கேற்றுவருகின்றனர். ஆரம்பத்தில் தவிர்த்த ஆண் பிள்ளைகள், தற்போது ஆதரவு தெரிவிப்பதாக சுப்பையா மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது- திருமணத்துக்கு பின், 48 ஆண்டு வரை, நானும் என் மனைவி செண்பகவல்லியும், இணைபிரியா தம்பதியினராக வாழ்ந்துவந்தோம். பத்துக் குழந்தைகளை பெற்றெடுத்தோம். இரண்டு குழந்தைகள் இறந்துவிட்டன. என் மனைவி செண்பகவல்லி நோய்வாய்ப்பட்டு, 2006ம் ஆண்டு இறந்துவிட்டார். மனைவியின் மரணம் என்னை நிலைகுலைய செய்தது. அவருக்கு ஏதாவது செய்தாகவேண்டும் என, எண்ணினேன். இராம பக்தன் என்பதால் அவரைப்போன்று மனைவிக்கு சிலை வடித்து வழிபட முடிவுசெய்தேன். வீட்டின் ஒரு பகுதியை கோவிலாக்கி அதில் மூன்றடி உயரம் உள்ள மனைவி செண்பகவல்லியின் ஐம்பொன் சிலையை வைத்து வணங்கிவருகிறேன். என் வேண்டுதல்களை அவர் நிறைவேற்றிவருகிறார். இவ்வாறு கண்கலங்கக் கூறினார்.

மனைவிக்கு ஐம்பொன் சிலையுடன் கோவில் எழுப்பி வழிபட்டுவரும், 78 வயதான முதியவரின் பாசப்பணிவிடைகள் பார்ப்பவர்களை மெய்சிலிர்க்க வைக்கிறது.

# வட மாகாணத் தேர்தல் இன்னுமொரு ஈழப் போர்

## தெற்கின் அச்சமும் வடக்கின் சந்தேகமும்

அலசுவது மதியூகி

**வடக்கு** மாகாண சபைக்கான தேர்தல் செப்டெம்பர் மாதம் நடைபெறுமென அரசாங்கம் உறுதியாகத் தெரிவித்துள்ளது. வட மாகாண சபைக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களை தெரிவுசெய்யும் பணிகளையும் அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

அரசாங்கத்துடன் மத்திய அரசாங்கத்தில் பங்காளிக் கட்சியாக இருக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைப் பொறுத்தவரை வட மாகாண சபைத் தேர்தலில் அரசுடன் இணைந்து போட்டியிடுவதா? அல்லது தனித்துப் போட்டியிடுவதா? என்பது குறித்து இதுவரை முடிவு செய்யவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி தனித்தே போட்டியிடப் போவதாக தனது ஆதர வாளர்கள் மத்தியில் கூறிவருகின்றது. எதிர்க்கட்சித் தலைவர் அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் பங்குகொள்வதும், காணி அபகரிப்பு, அரசியல் தீர்வு தொடர்பில் தீவிரமான கருத்துக்களையும் கூறிவருகின்றார்.

தமிழரசுக் கட்சி தேர்தலுக்கு தமது ஆதரவாளர்களை தயார்ப்படுத்தி வருகின்றது. கூட்டமைப்பாக போட்டி யிட்டாலும் கூடுதல் உறுப்பினர்களை தமிழரசுக் கட்சியே பெறவேண்டும் என்ற முயற்சியில் தமிழரசுக் கட்சி இறங்கியுள்ளது.

கூட்டுப்பொறுப்பை புறம் தள்ளி தமிழரசுக் கட்சி செயற்படுகின்றபோதும் கூட்டமைப்பிலுள்ள ஏனைய கட்சிகள் கூட்டமைப்பின் பெயரில் போட்டியிடுவது என்ற முடிவோடு ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வட மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்போடு போட்டியிட்டு மாகாண சபைக்குள் நுழைந்துவிட வேண்டுமென்பதில் ஆனந்தசங்கரி, சித்தார்த்தன் போன்றவர் கள் உறுதியாக உள்ளனர்.

ஜே.வி.பி போன்ற தென்னிலங்கை கட்சிகளும் போட்டியிடுவதற்கான சாதக பாதகங்களை ஆராய்ந்துவருகின்றன.

தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர் சுயாதீனமான கண்காணிப்பு ஏற்பாடுகள், பொலிஸ் ஆணைக்குழு போன்றவை ஏற்படுத்தப்பட வேண்டுமென எதிர்க்கட்சி கள் கோரிக்கை விடுத்துவருகின்றன.

மறுபக்கத்தில் அமைச்சர் ரிஷாட் தலைமையிலான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் வட மாகாணசபைத் தேர்தலை, வடக்கிலிலிருந்து புலிகளால் விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்கள் முழுமை யாக வடக்கில் மீள்குடியேற்றம் செய்யப்படும்வரை நடத்தக் கூடாது என்று கூறியுள்ளது.

இப்போது வடக்கில் குறிப்பிடத்தக்களவு முஸ்லிம்கள் மீள்குடியேறியுள்ள நிலையில் வட மாகாண சபைத் தேர்தலை நடத்தக்கூடாது என்று கூறும் அக்கட்சி, வடக்கில் முஸ்லிம்கள் மீள் குடியேறு வதற்கு முன்னரே வடக்கிற்கான பாராளு மன்றத் தேர்தல், வடக்கின் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் எல்லாம் போட்டியிட்டவர்கள் மாகாண சபைத் தேர்தலை மட்டும் நடத்தக் கூடாது என்று கோரிக்கை விடுப்பது உள் நோக்கத்துடனான முடிவாகவே உள்ளது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை இப்போது நடத்தக்கூடாது என்று தென் இலங்கையிலுள்ள இரண்டு கட்சிகள் கடும்போக்காக கூறியுள்ளன. தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் மற்றும் அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமை யிலான தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகளே எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

வட மாகாண சபைத் தேர்தலை நடத்தக்கூடாது என்று இக்கட்சிகள் கூறுவதற்கு கூறுகின்ற காரணங்களை பார்க்கின்றபோது இக்கட்சிகள் பெரும் பான்மை சிங்கள மக்களிடம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினை தொடர்பில் எந்தளவுக்கு தவறான கருத்துக்களை வளர்த்து வந்திருக்கின்றன என்பதை அப்பட்டமாக தெளிவுபடுத்துகின்றது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை தற்போது நடத்தினால் அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயம் வெற்றி பெறுமாம். அப்படி வெற்றிபெற்றதும் மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்களை, உரிமைகளை கேட்குமாம். பொலிஸ் காணி அதிகாரங்களை கேட்குமாம், அதை வழங்கினால் வடக்கு மாகாண சபையை கூட்டமைப்பு தனி இராஜ்ஜியமாக நடத்துமாம். அதிலிருந்து தொடங்கி தனி நாட்டுக்கான போராட்டத்தை தமிழர்கள் ஆரம்பிப்பார்களாம். இப்படியெல்லாம் இந்த இரு கட்சிகளும் தமது பயத்தை வெளிப்படுத்தியுள்ளன.

தமிழரசுக் கட்சி ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ஆனால் தமிழர்களுக்கு எந்த அதிகாரங்களும் கிடைத்துவிடக்கூடாது. அவர்கள் தமக்கான பிரச்சினைகளை அவர்களே தீர்த்துக் கொள்ளக்கூடாது என்பதில் இவர்களைப் போன்றவர்கள் எவ்வளவு தீவிரமாக உள்ளார்கள் என்பதை புரிந்து கொள்ள முடிகின்றது.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகள் தீராப்பிரச்சினையாக இருக்கவேண்டுமென விரும்பும் தமிழ் இனவாதிகளைப் போல் தென் இலங்கையின் இனவாதிகள் விரும்புகின்றார்கள்.

சகோதரத்துவத்தையும், ஐக்கிய வாழ்வையும் விரும்பும் இந்நாட்டின் பெரும்பான்மை சிங்கள மக்களிடையே இவ்வாறான தீயஎண்ணம் கொண்ட இனவாதிகளும் இருக்கின்றார்கள் என்பது புலனாகின்றது. இவர்களைப் போன்றவர் களாலேயே ஜனாதிபதிகூறும் ஒரே நாடு, ஒரே கொடி என்ற கோஷமும், ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வு என்ற விருப்பமும் நடைமுறைக்கு சாத்தியப்படாமல் போய்க்கொண்டிருக்கின்றது.

வடக்கு மாகாணத்தின் தேர்தல் முடிவுகள் குறித்து எழுகின்ற பயமும், அச்சமும் தீரப் போவதில்லை. அதற்குக் காரணம் யுத்தம் முடிவுக்குவந்து நான்கு ஆண்டுகளாகின்ற போதும் இன்னும் வடக்கில் திருப்தியான மீள் குடியேற்றமோ, அமைதியோ, அச்சமற்ற சூழலோ உருவாக்கப்படவில்லை.

இப்போது அரசு மீது தமிழ் மக்களின் ஒட்டு மொத்த வெறுப்பையும் ஏற்படுத்துகின்ற வித மான காணி அபகரிப்புக்கள். யாழ்ப்பாணத்தில் தாக்குதல்கள், தீ வைப்புக்கள் சம்பவங்கள் நடைபெறுகின்றபோது அதைத் தடுத்திருக்க வேண்டியவர்கள் அல்லது அதனோடு தொடர்புடைய குற்றவாளிகளை சட்டத்தின் முன்நிறுத்த வேண்டியவர்கள் பொறுப்பற்ற விதத்தில் யார் ஆயுதக் குழுக்களாக இன்னும் வடக்கில் இருக்கின்றார்கள் என்று எமக்கு தெரியவில்லை என்று கூறுவது மாதிரியான செயற்பாடுகளை அவதானிக்கின்றபோது தமிழ் மக்களுக்கு அதிருப்திதான் ஏற்படும்.

இது மாதிரியான விரும்பத்தகாத சூழ் நிலையே தொடர்ந்தால் தேர்தல் முடிவுகளில் அதன் பிரதிபலிப்புக்களைத்தான் அறுவடை செய்யவேண்டியிருக்கும். அது தவிர்க்கப்பட முடியாததுமாகும். இவ்வாறான நிலைமை யானது அரசின் அபிவிருத்திப் பணிகளையும், ஆக்கபூர்வமான கட்டுமானங்களையும் வலிமையற்றதாக்கிவிடும்.

கடந்த காலத்திலும் இது மாதிரியான தவறுகளே தமிழ் மக்களுக்கு தென் இலங்கை அரசுகள் மீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தி, எதிர்ப்பு மனோநிலையை தோற்றுவித்திருந்தது.

அந்த படிப்பினை களிலிருந்து நாம் முன்னோக்கி செயற்பட்டால் வடக்குத் தேர்தல் முடிவ் களையிட்டு அச்சம் கொள்ளவோ, பயந்து சாகவோ அவசியம் இல்லை. தவறுகளை திருத்தி பாதகமான சூழலையும் சாதகமாக மாற்றிக் கொள்ள முயற்சிக்காமல் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வே வழங்கக்கூடாது, அவர்களுக்கு தனியான மாகாண நிர்வாகம் செல்லவே கூடாது என்று முட்டாள்தனமாக சிந்திப்பதால் எக்காலத்திலும் பயனேது மில்லை என்பதை இவர்கள் சிந்திக்க வேண்டும்.

அரசியல் பிரச்சினைக்கு தீர்வு, மனித உரிமைகளுக் கான உத்தரவாதம், பொறுப்புக் கூறும் தன்மை இவை நம்மத்தியில் அருகிப் போனதால் அல்லது இல்லாமலே போனதாலேயே இன்று சர்வதேச தளத்தில் நமது தாய்நாடு தனிமைப்பட்டு, பலவாறான குற்றச்சாட்டுக்களை சுமந்து நாதரவாக இருக்கின்றது.

பெரும்பான்மை மக்களிடையே இருக்கும் இதுபோன்ற இனவாதிகளைப் போலவே தமிழ் மக்களின் அரசியல் தளத்தில் கூட்டமைப் பும் செயற்படுகின்றது. அதை தமிழ் இனவாத சக்தியாகவே தென்னிலங்கை மக்கள் கருதுகின்றார்கள்.

தமிழ் மக்களுக்கு தம்மைத் தாமே ஆளுகின்ற தனித்துவம் மிகுந்த அதிகாரங்கள் வேண்டும், இலங்கை இராணுவம் தமிழர்கள் வாழும் பகுதிகளிலிருந்து முற்றாக வெளி யேற வேண்டும், இலங்கையின் மத்திய அரசு வடக்கு, கிழக்கு மாகாணத்திற்குள் எந்தவகையிலும் தலையீடு செய்யக் கூடாது, கூடவே தனியான பொலிஸ், காணி அதிகாரங்கள் வேண்டும் என்று கோருகின்றனர்.

இந்த கோரிக்கைகள் தமிழ் மக்களுக்கு கேட்பதற்கு நன்றாகவும், புல்லரிப்புத் தருவதாகவும் இருக்கலாம். ஆனால் மத்தியில் அரசாங்கத்தை தீர்மானிக்கின்ற சிங்கள மக்களுக்கு சந்தேகங்களையே ஏற்படுத்தும்.

ஏற்கனெவே ஆயுதங்களை ஏந்தி தமிழ் இயக்கங்கள் நடத்திய போராட்டங்கள் சிங்களப் படைகளை மட்டுமல்லாது, அப்பாவி சிங்கள மக்களையும், சகோதர முஸ்லிம் களையும் மட்டுமல்லாது அப்பாவி தமிழ் மக்களையும் கொலை செய்ததையும், வன்முறையாக உருவெடுத்து பின்னர் பயங்கரவாதமாக வளர்ச்சியடைந்து ஒவ்வொரு விடியலையும் கொலையுடனும், குருதியுடனும் விடியச் செய்ய அதே தரப்பிடம் சட்டரீதியாகவேனும் ஆயுதங்கள் வழங்கப்படலாமா? என்ற கேள்வி எழுவதை எப்படி தவறென்று கூறுவது.

பயங்கரவாதத்தின் பிடியில் சிக்கியிருந்த நாட்டையும், ஏன் தமிழ் மக்களையும் மீட்ட படையினரை முற்றாக அந்த இடங் களைவிட்டே அப்புறப்படுத்த வேண்டும் என்று கூறுவதை எந்த அரசு ஏற்றுக் கொள்ளும். சும்மாவே பகையை வளர்க்கும் கூட்டமைப்பினர் படையினரே இல்லாத தேசத்தில் மீண்டுமொரு தடவை பயங்கர வாதத்தை வளர்த்துவிடமாட்டார்கள் என்பதற்கு யாரால் உத்தரவாதம் தரமுடியும் என்ற கேள்வியும் அரசிடமும், சிங்கள மக்களிடமும் உண்டு.

கூட்டமைப்பைப் பொறுத்தவரை தமது அரசியல் எதிரிகளை கொலை செய்யவும், தமக்கு வாக்குகளை திரட்டித் தரவும், ஆயுதம் தாங்கிய அணி ஒன்று இருப்பதை விரும்புகின்றவர்கள். அப்படியான அரசியலின் சுகத்தை அனுபவித்தவர்கள் கூட்டமைப்பினர். இந்த வரலாறுகள் சிங்கள மக்களுக்கும் நன்றாகத் தெரியும்.

இந்த பின்னணியில் இவர்கள் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு எதிராகவும், ஐக்கியத் துக்கு எதிராகவும், நாட்டின் பாதுகாப்புக்கு எதிராகவும் எதைச் செய்தாலும் அதைக் கண்டுகொள்ளாமல் மத்திய அரசு இருக்கவும் வேண்டும் என்ற கோரிக்கையை சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்வார்களா?

கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் வாக்குகளை சூறையாடுவதற்காக முன் வைக்கின்ற இவ்வாறான கோரிக்கைகள் தான் தென்னிலங்கை இனவாதிகளை தூண்டிவிட்டுள்ளது. அரசையும் அச்சம் கொள்ளச் செய்துள்ளது.

அரசாங்கம் வட மாகாண சபைத் தேர்தலை நியாயமாக நடத்தாது, அது மட்டுமல்லாமல் சர்வதேசத்தை ஏமாற்றித் தப்பித்துக் கொள்ள தேர்தலை நடத்தப் போவதாக கூறுகின்றது என்றும் காணி அதிகாரத்தை வழங்கவேண்டியிருக்கும் என்பதாலேயே இப்போதே காணி அபகரிப்பில் ஈடுபட்டுள்ளது என்றவாறான குற்றச்சாட்டுக்களை கூட்டமைப்பு அரசு மீது சுமத்துவதோடு தனது தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கியுள்ளது.

இவ்வாறான குற்றச்சாட்டுக்களும், எதிர்ப்புக்களும் தென்னிலங்கையில் அரசியலின் ஸ்திரத் தன்மைக்கு உதவும் என்றும் அந்த எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்கும் ஊட்டச்சத்தாக சிங்கள மக்களின் வாக்குகள் கிடைக்கும் என்ற அதீத இராஜதந்திரங்களும் இங்கே அரங்கேறுகின்றதோ என்ற சந்தேகங்களும் எழாமலில்லை.

**அரசாங்கம் வட மாகாண சபைத் தேர்தலை நியாயமாக நடத்தாது, அது மட்டுமல்லாமல் சர்வதேசத்தை ஏமாற்றித் தப்பித்துக்கொள்ள தேர்தலை நடத்தப்போவதாக கூறுகின்றது என்றும் காணி அதிகாரத்தை வழங்க வேண்டியிருக்கும் என்பதாலேயே இப்போதே காணி அபகரிப்பில் ஈடுபட்டுள்ளது என்றவாறான குற்றச்சாட்டுக்களை கூட்டமைப்பு அரசு மீது சுமத்துவதோடு தனது தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கியுள்ளது. இவ்வாறான குற்றச்சாட்டுக்களும், எதிர்ப்புக்களும் தென்னிலங்கையில் அரசியலின் ஸ்திரத் தன்மைக்கு உதவும் என்றும் அந்த எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்கும் ஊட்டச்சத்தாக சிங்கள மக்களின் வாக்குகள் கிடைக்கும் என்ற அதீத இராஜதந்திரங்களும் இங்கே அரங்கேறுகின்றதோ என்ற சந்தேகங்களும் எழாமலில்லை.**

# சீன - இந்திய இராணுவ முறுகல்



தொகுப்பு – வேணுகிருஷ்ணா

## சீன அத்துமீறலுக்கு இந்தியா நடவடிக்கை எடுக்கும்

இந்திய எல்லைப் பகுதியில், சீன இராணுவம் அத்துமீறி நுழைந்த பிரச்சினைக்குத் தீர்வுகாண மத்திய அரசு நடவடிக்கை எடுத்துவருவதாக, இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.ஆண்டனி தெரிவித்துள்ளார். கர்நாடகாவில், சட்ட மன்றத் தேர்தலுக்கான பிரசாரத்தில் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையை வெளியிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்திய எல்லைப் பகுதிக்குள் சீன இராணுவம் கூடாரங்களை அமைத்து ஆக்கிரமித்துள்ள விவகாரம் தொடர்பாக மூன்றாவது கூட்டம் நடைபெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. இராணுவ பிரிகேடியர்கள் மட்டத்திலான இரண்டாவது சந்திப்பிலும் உடன்பாடு எட்டப்படவில்லை. ஆனால் சீனத்தரப்பில் தாங்கள் வழக்கமான் ரோந்து பணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும், இந்திய எல்லைக்குள் ஒருபோதும் சீன இராணுவம் நுழையவில்லை எனவும் சொல்லப்படுகிறது.

இதனால் பதற்றப்பட தேவையில்லை என்றும், எல்லைக்கோடு வரையறுக்கப்படுவதில் ஏற்படும் பிரச்சினைகள்தான் இவை என்று இந்திய அதிகாரிகள் கூறுகின்றனர். கடந்த ஏப்ரல் 15ஆம் திகதியிலிருந்து சீன இராணுவம் இந்திய எல்லைக்குள் ஊடுருவி முகாமிட்டுள்ளது. ஜம்முவிற்கு இரண்டு நாள் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய இராணுவ தலைமை தளபதி பிக்ரம் சிங், அம்மாநில ஆளுநரையும், முதலமைச்சரையும் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

இந்நிலையில் ஏப்ரல் மாத இறுதியில் இந்தியாவும், சீனாவும் இணைந்து மேற்கொள்ளவுள்ள இராணுவப் போர் பயிற்சிக்கான திகதியை முடிவுசெய்ய இந்திய இராணுவ அதிகாரிகள் சீனா சென்றுள்ளனர். தற்போது ஊடுருவல் நடைபெற்றதாக சொல்லப்படும் டெப்சாங் என்னும் பகுதியில் இந்திய அரசு வீதிகள் அமைக்க திட்டமிடும்போதெல்லாம் அதற்கு சீனா எதிர்ப்பு தெரிவித்துவருகிறது.

## இந்திய சீனப்போரும் எல்லைப் பிரச்சினையும்

சீனா, இந்தியா மீது தாக்குதல் தொடுத்து 51 ஆண்டுகள் நிறைவடைகின்றன. ஒரு மாதமே நடைபெற்ற இந்தப் போரில் இந்தியா பெரும் நிலப்பகுதியை சீனாவிடம் இழந்தது. இப்போர் இந்தியாவுக்கு பெரும் அவமானத்தை ஏற்படுத்தியதோடு, ஜம்மு காஷ்மீர் பகுதியில் இருந்த அக்சாய் சின் பகுதிமுழுவதையும் அது இழந்தது.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே இரண்டு இடங்களில் எல்லைப் பிரச்சினை இருந்துவருகிறது. ஒன்று ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் லடாக் பகுதியில் திபெத்தை (சீனா) ஒட்டி இருக்கும் அக்சாய் சின். மற்றொன்று அருணாசலப் பிரதேசம். அக்சாய் சின் கடல் மட்டத்தில் இருந்து 4,800 மீற்றர் உயரத்தில் இருக்கிறது. சில இடங்களில் இந்த உயரம் 5,500 மீற்றர்வரை இருக்கிறது. பெரும்பாலும் பனிப்பாறைகள் எப்போதும் உறைந்து காணப்படுகின்றன. சோடியம் க்ளோரைட் நிறைந்த ஏரிகள் அதிகமாக உள்ளன.

அக்சாய் சின் 1962 முதல் சீனாவின் வசம் இருந்துவருகிறது. ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் 20 சதவிகித நிலப்பரப்பு இது. அக்சாய் சின்னில் 38,000 சதுர கிலோமீற்றர் பகுதியை சீனா கைப்பற்றியிருக்கிறது. இது போக, பாகிஸ்தான் கைப்பற்றி வைத்துள்ள ஜம்மு - காஷ்மீர் பகுதியில் இருந்து 5,180 சதுர கிலோமீற்றர் இடத்தை 1963ம் ஆண்டு சீனா பெற்றுக் கொண்டுள்ளது. ஜம்மு காஷ்மீர் மன்னர் ஹரிசிங் 1947 ஒக்டோபர் 26 அன்று தனது சமஸ்தானத்தை எவ்வித நிபந்தனையும் இன்றி முழுமையாக இந்தியாவுடன் இணைப்பதாகக் கையெழுத்திட்டார். அவர் கொடுத்த ஜம்மு காஷ்மீரில் இன்று இந்தியாவசம் வெறும் 45 சதவிகிதம் மட்டுமே இருக்கிறது. மீதி பகுதிகள் பாகிஸ்தான் மற்றும் சீனாவசம் இருந்துவருகின்றன. இந்தியா இழந்த பகுதிகள் அனைத்தையும் மீட்டிட வேண்டும் என 1994ம் வருடம் இந்திய நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் பலனில்லை. பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் சமீபத்தில் அளித்துள்ள தீர்ப்பில் கில்கித் மற்றும் பால்டிஸ்தான்(பாக் ஆக்கிரமித்துள்ள ஜம்மு-காஷ்மீர்) பகுதிகள் பாகிஸ்தானுக்கு சொந்தமானதல்ல. அவை ஜம்மு காஷ்மீருக்குச் சொந்தமானவை என்று குறிப்பிட்டுள்ளது. ஆனால் இந்திய மத்திய அரசு அதை மறந்துவிட்டது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இமயமலைத் தொடரில் மொத்தம் 4,500 கிலோமீற்றருக்கு எல்லைகள் இருக்கின்றன. அவற்றில் 3,268 கிலோமீற்றர் எல்லைப் பகுதி பிரச்சினைக்குரியதாக இருந்துவருகிறது.

இந்தியா திபெத் (சீனாவுக்கும்) இடையே மக்மோஹன் எல்லைக்கோடு 890 கிலோமீற்றருக்கு செல்கிறது. சர் ஹென்றி மக்மோஹன் பிரிட்டிஷ் இந்திய அரசில் வெளிவிவகாரத்துறை செயலாளராக இருந்தவர். திபெத் அதிகாரிகளுடன் 1914ல் இவர் உடன்படிக்கை செய்துகொண்டு, இந்திய திபெத் (சீன) எல்லைக்கோட்டை வரையறுத்தனர். மக்மோஹன் எல்லைக் கோடு முழுக்க முழுக்க இமயமலைப் பிரதேசத்தில் செல்கிறது. இந்தியா இந்தக் கோட்டைச் சட்டபூர்வமான எல்லைக் கோடாகக் கருதுகிறது. ஆனால் சீனா தொடக்கம் முதலே இதனை அங்கீகரிக்கவில்லை. திபெத் சீனாவின் ஒரு பகுதி என்பதால் திபெத் தன்னிச்சையாகச் செய்துகொண்ட உடன்படிக்கை செல்லாது என்று காரணம் கூறுகிறது.

இந்திய நாட்டின் வடகிழக்கே எல்லைப் பகுதியில் இருக்கும் அருணாசலப் பிரதேசத்திலும் (சுமார் 90,000 ச.கி.மீ.) சீனா உரிமை கோரிவருகிறது. குறிப்பாக, தவாங் மாவட்டத்தைக் குறிவைத்துள்ளது. சமீபத்தில் நமது நாட்டில் இருந்து சில ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பயிற்சிக்காக சீனா சென்றபோது அந்நாடு அருணாசலப் பிரதேசத்தைச் சார்ந்த அதிகாரி ஒருவருக்கு மட்டும் விசா வழங்க மறுத்துவிட்டது. அருணாசலப் பிரதேசம் சீனாவின் ஒரு பகுதிதானே அங்கிருந்து வருபவருக்கு எதற்கு விசா என்றும் பதிலளித்தது.

1950ல் சூ என் லாய் தலைமையில் சீனாவில் ஆட்சி அமைந்தது. அப்போது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயலாளராக மாவோ சே துங் இருந்தார். சீனாவில் ஆட்சியைக் கைப்பற்றிய கம்யூனிஸ்டுகள் சிறிதுகூட தாமதம் செய்யாமல் சுதந்தர நாடான திபெத்தைக் கைப்பற்றி சீனாவுடன் இணைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். 1950ல் தொடங்கிய சீன ஆக்கிரமிப்பு 1959ல் நிறைவுற்றது. திபெத்தில் இருந்து தப்பிவந்த தலாய் லாமாவுக்கு இந்தியா அடைக்கலம் கொடுத்தது. திபெத் சீனாவின் ஒரு பகுதி என்பதை ஏற்றுக்கொள்வதாக நேரு அறிவித்தார். ஆனால் மக்மோஹன் எல்லைக் கோட்டை இன்று வரை சீனா ஏற்றுக்கொள்ளாமல் மறுத்துவருகிறது.

## நேருவை விமர்சிப்போர்

உலகப் பிரச்னைகளைப் பற்றி பேசி வந்த பிரதமர் நேருவுக்கு உள்நாட்டுப் பிரச்சினையைப் பற்றியும் அண்டை நாடுகள் என்ன செய்துகொண்டிருக்கின்றன என்பது பற்றியும் மட்டும் சிந்திக்க நேரம் இல்லாமல் போய்விட்டது. அதனுடைய விளைவு இன்று வரை ஜம்மு - காஷ்மீரில், சீனா இரண்டிலும் சிக்கல்கள் தொடர்கின்றன.

ஜெனரல் ரோபர்ட் லோக்ஹர்ட் என்பவர் சுதந்தர இந்தியாவின் முதல் இராணுவத் தலைமைத் தளபதியாக பதவியில் இருந்தார். இந்திய கடற்படையை வலுப்படுத்தத் தேவையான திட்ட அறிக்கையை தயாரித்து நேருவிடம் எடுத்துச் சென்றபோது, அகிம்சையைப் பின்பற்றும் நமக்கு எதிரிகள் யாரும் இல்லை என்று கூறிவிட்டார் நேரு. மேலும், 2,80,000 பேர் இருந்த இராணுவத்தை, 1,50,000 ஆகக் குறைத்துவிடும்படியும் உத்தரவிட்டார். நல்லவேளையாக பாகிஸ் தான் செய்த தவறால் இந்திய ராணுவம் பிழைத்தது. 1947 ஒக்டோபர் மாதத்தின் மத்தியில் ஜம்மு - காஷ்மீர் மீது பாகிஸ்தான் தாக்குதல் தொடுத்தது. அப்போதுதான் நேருவுக்கு இராணுவத்தின் அவசியம் புரிந்தது.

இந்திய - பாகிஸ்தான் இரு நாட்டுப் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துச் சென்றவர் நேரு. செல்வாக்கு அற்ற ஷேக் அப்துல்லாவை அம்மாநில முதல்வர் ஆக்கியது. அரசியல் சாசன சட்டத்தில் ஜம்மு - காஷ்மீருக்காக 370வது பிரிவை உருவாக்கியது என்று பல தவறுகளை இவர் செய்தார் என சில விமர்சகர்கள் கூறுவர். இவருடைய தவறான அணுகுமுறையின் காரணமாகத்தான் சீனப் போரில் இந்தியா தோல்வியடைந்தது என்றும் அவர்கள் கூறுவர்.

## தோல்விக்கான காரணங்களை மறைக்கும் இந்தியா

சீனாவுடனான போர் முடிந்து 50 வருடங்கள் கடந்த பின்பும் அதிகாரபூர்வமான வெளியீடுகள் எதையும் இந்திய அரசு வெளியிட்டதில்லை. அப்போரில் ஏற்பட்ட தோல்விக்கான காரணங்களை ஆராய்ந்து லெ.ஃப்டினன்ட் ஜெனரல் ஆண்டர்சன் ப்ரூக்ஸ், பிரிகேடியர் பிரேம் பகத் ஆகியோர் 1963ல் தயாரித்த அறிக்கை இன்றுவரை இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளது. சீனப்போர் நடப்பதற்கு 12 வருடங்களுக்கு முன்பாக அதாவது 1950ல் ஹிம்மத் சிங் என்பவர் திபெத்தை எவ்வாறு சீனா ஆக்கிரமித்துவருகிறது என்பது பற்றி விரிவானதொரு அறிக்கை தயாரித்து மத்திய அரசிடம் அளித்துள்ளார். அது காணாமல் போய்விட்டதாம்.

இந்திய சீனப் போரின்போது பல முடிவுகளை எடுத்த வி.கே.கிருஷ்ண மேனன், பி.என். முல்லிக், ஜெனரல் பி.என்.தாப்பர், லெ.ஃப்டினன்ட் ஜெனரல் பி.எம்.கவுல், இவர்களுக்கு பக்கபலமாக இருந்த பிரதமர் ஜவஹர்லால் நேரு ஆகியோர்களே தோல்விக்கு முக்கிய காரணமாவார்கள் என்றும் விமர்சனம் உண்டு

மிகச் சிறந்த அறிவாளி என்றபோதும் வி.கே.கிருஷ்ணமேனன் நேருமீது குருட்டுத்தனமான நம்பிக்கை கொண்டிருந்தார். 1957ல் இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சரானார். இராணுவத்தை பலவீனப்படுத்தியதில் அதிக பங்கு இவருக்குண்டு. சீனா எந்தக் காலத்திலும் இந்தியாவைத் தாக்காது என்று உறுதியாக நம்பியவர் இவர். இந்திய இராணுவத்தின் தேவைக்காக ஜீப் வாங்கப்பட்டதில் நடைபெற்ற ஊழலுக்கு பெரும் காரணமாக இருந்தவர். இந்தியாவுக்கான தூதுவராக இங்கிலாந்தில் இருந்துவந்த கிருஷ்ணமேனன் இதன் காரணமாக பதவிவிலகினார். ஆனால் அவரை தனது மந்திரி சபையில் சேர்த்துக் கொண்டதுடன் அவருக்கு பாதுகாப்புத் துறையையும் வழங்கினார் நேரு.

நாட்டின் வடகிழக்குப் பகுதியில் ஏற்பட்ட பெரும் பின்னடைவுக்கு ஜெனரல் பி.எம். கவுல் கடைப்பிடித்த அணுகுமுறைகளே காரணம் என்று பல இராணுவ நிபுணர்கள் கருதுகிறார்கள். உயர்ந்த மலைப்பகுதிகளில் எப்படி போரை நடத்துவது என்கிற யுத்தத் தந்திரம் சிறிதுகூட தெரியாதவர் இவர். முன் அனுபவமும் கிடையாது. 1959 முதல் 1962 வரை இந்திய இராணுவத்திலும் பாதுகாப்பு அமைச்சகத்திலும் எடுக்கப்பட்ட முடிவுகள் அனைத்தும் ஆழ்ந்த ஆலோசனை செய்து எடுக்கப்படாமல் அவசர கதியில் எடுக்கப்பட்டன எனவும் இராணுவ நிபுணர்கள் கருதுகிறார்கள்.

பி.என்.முல்லிக் இந்திய சீனப் போர் நடைபெற்றுவந்த நேரத்தில் ஜெனரல் ஆக இருந்தவர். கிருஷ்ணமேனன் சொல்வதைத் தட்டாமல் அப்படியே பின்பற்றியவர். வடகிழக்கு எல்லைப் பகுதிகளில், போர் முனையில் இருந்து வந்த இளம் இராணுவ அதிகாரிகள் கூறிய யதார்த்த நிலைமைகளைக் கேட்காமல் ஒதுக்கித் தள்ளியவர்.

## சீனர்களை வெளியில் தூக்கி எறியும்படி நேருவின் உத்தரவு

எல்லையில் என்ன நடக்கிறது என்றே நமது பிரதமர் உட்பட பலருக்கும் தெரியாமல் இருந்துவந்தது. 1962 ஒக்டோபர் 12 அன்று புதுடில்லி பாலம் விமான நிலையத்தில் இருந்து கொழும்பு செல்வதற்காகப் புறப்பட்ட பிரதமர் நேருவிடம் பத்திரிக்கையாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளித்த நேரு. சீனர்களை வெளியில் தூக்கி எறியும்படி இந்திய இராணுவத்துக்கு உத்தரவு இட்டுள்ளதாகக் கூறினார். அதை நிறைவேற்றுவது எப்போது என்பதை இராணுவத்தினர் முடிவுக்கே விட்டுவிட்டதாகவும் தெரிவித்தார். இந்தியப் பிரதமரின் இந்த அறிவிப்பு வெளியாகி சரியாக எட்டாவது நாள் சீனா, இந்திய எல்லைப் பகுதி நெடுகிலும் தனது தாக்குதலைத் தொடங்கியது. சீனர்களை எங்கு தூக்கி எறிவது என்று போர்முனையில் இருந்து வந்த இந்திய இராணுவ வீரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தெரியவில்லை. ஏனெனில் இந்தியச் சீன எல்லைப் பகுதி எது என்பதே தெரியாமல்தான் இந்திய இராணுவம் அங்கு இருந்துவந்தது. ஒரு மாதம் நடைபெற்ற




புலிகளின் வீழ்ச்சி! இறுதி நாட்கள்...

**புலிகளின் வீழ்ச்சித் தொடர் தவிர்க்கமுடியாத காரணத்தினால் இந்தவாரம் இடம்பெறவில்லை என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.**



# புலிகளின் வதை முகாமில்

வதை 59

மணியம்

புலிகளின் இந்த வதை முகாமில் அவர்களுக்கு எதிரான இயக்கங்களான புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ உட்பட பல்வேறு மாற்று இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அடைக்கப்பட்டிருந்தனர். அதுமாத்திரமின்றி புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 'குற்ற மிழைத்தவர்கள்' பலரும்கூட இங்கு விசாரணைக் கைதிகளாக இருந்தனர். இவர்கள் தவிர தனிப்பட்ட குற்றச்செயல்களான கொலை, களவு போன்றவற்றில் ஈடுபட்டவர்களும் இருந்தனர். எல்லாவிதமான கைதிகளையும் கொண்ட ஒரு சாம்பாராக இந்தச் சிறை இருந்தது.

புலி இயக்கத்தைச் சேர்ந்தவர்களைத் தவிர ஏனைய கைதிகள் எப்பொழுதும் ஓர் அச்சமான சூழ்நிலையிலேயே இருந்தனர். ஆனால் புலி இயக்கத்தைச் சேர்ந்த கைதிகள் மிகவும் சாதாரணமாக, ஒரு சந்தோசமான மனநிலையிலேயே இருப்பது போலத் தோன்றியது. அவர்கள் எதற்காகவும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. தமக்கு மேலேயுள்ள, தம்மை விசாரணை செய்யும் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்களைக்கூட அவர்கள் பெரிதாகச் சட்டை செய்ததாகத் தெரியவில்லை. அவர்களில் வயதில் குறைந்த ஒருவன், தனது சக போராளி ஒருவனை ஏதோ கோபதாபத்தில் தனது கையிலிருந்த 'கிரனைட்'டை வீசிக் கொலை செய்த குற்றத்தில் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தான். அவன்கூட எந்தநேரமும் சிரிப்பும் கும்மாளமுமாகத்தான் இருந்தான்.

சாதாரண கிராமப்புறங்களைச் சேர்ந்த இந்தப் புலி உறுப்பினர்கள் எவ்வாறு இவ்வாறான ஒரு மன நிலைக்கு வளர்த்து எடுக்கப்பட்டார்கள் என, நான் பல தடவைகள் ஆச்சரியப்பட்டதுண்டு. எல்லாமே புலிகள் அவர்களுக்கு வழங்கும் குரூரமான பயிற்சிகள்தான் காரணம் என்பதைப் போகப்போகப் புரிந்துகொண்டேன். நான் வெளியில் இருந்த காலத்தில் இந்த மாதிரியான சில சம்பவங்களைக் கேள்விப்பட்டிருந்தேன். எமது அயல் கிராமத்தைச் சேர்ந்த புலி உறுப்பினன் ஒருவனைக் கொண்டே, வவுனிக்குளத்தில் இருந்த அவனது தகப்பனாரின் சொந்தச் சகோதரரை (அவனது சிறிய தகப்பன்) புலிகள் சுடுவித்துப் படுகொலை செய்ததை நான் அறிவேன்.

அதேபோல இந்திய அமைதிப் படை இலங்கையில் நிலை கொண்டிருந்த காலத்தில், எனது நெருங்கிய உறவினரான ஒரு பையன் புலிகள் இயக்கத்தில் இணைந்துகொண்டான். அவனுக்கும் அவனையொத்த புதிதாக இணைந்தவர்களுக்கும் முதலில் கொடுத்த வேலை, பளை வைத்திய சாலைக்கு அருகாமையில் கண்டி வீதியில் வந்துகொண்டிருந்த ஒரு பஸ்ஸை நிறுத்தி, அதிலிருந்த பிரயாணிகளை இறக்கிவிட்டு அந்த பஸ்ஸுக்கு பெற்றோல் ஊற்றித் தீயிட்டுக் கொளுத்தியதுதான். அதற்கான காரணம், அந்த பஸ் இந்தியாவில் செய்யப்பட்ட 'அசோக் லேலண்ட்' பஸ் என்பதுவே.

இந்தச் சம்பவத்துடன் அந்தப் பையன் இயக்கத்தைவிட்டு சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவந்துவிட்டான். அதில் சுவாரசியம் என்னவென்றால், அந்த பஸ்சை அவர்கள் கொளுத்தும்போது, இயக்கம் தமக்கு வழங்கியிருந்த இந்தியத் தயாரிப்பான 'கிப்ஸ்' ரக சாரத்தையே அவர்கள் எல்லோரும் அணிந்திருந்தது என்று அவன் சொன்னதுதான்!

அங்கு சிறை வைக்கப்பட்டிருந்த கைதிகளில் முக்கியமானவர்களில் ஒருவர், புலிகளின் வவுனியா பொறுப்பாளராக இருந்தவர். (திலீபன் என்ற பெயர் என ஞாபகம்) இரண்டு சிங்களக் கைதிகளும், விடத்தல்தீவைச் சேர்ந்த ஒரு முஸ்லீம் கைதியும்கூட இருந்தனர். இந்த சிங்களக் கைதிகளில் ஒருவர் வயோதிபர். அவர் ஒருவருடனும் கதைக்காமல் எப்பொழுதும் அச்சத்துடனேயே இருந்தார். மற்றவர் சற்று இளமையானவர். அவர் பெயர் பண்டா. அவர் எல்லோருடனும் சகஜமாகப் பழகினார். தான் ஜே.வி.பி உறுப்பினர் எனச் சொன்னார். அவர்கள் இருவரும் வவுனியாவுக்கு அருகிலுள்ள மடுக்கந்த என்னும் சிங்களக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். காட்டில் தடி வெட்டுவதற்காகச் சென்ற பொழுது, அங்கு வேவு பார்ப்பதற்காகப் (றெக்கி எடுப்பதற்காக) பதுங்கியிருந்த புலிகளிடம் அகப்பட்டுக் கொண்டனர். அவர்களை விட்டுவிட்டால் இராணுவத்துக்குத் தகவல் போய்விடும் என்பதற்காக, புலிகள் அவர்களைப் பிடித்துவந்து இங்கு அடைத்து வைத்திருந்தனர்.

அவர்களை உயிருடன் பிடித்து வந்தது ஓரளவுக்குப் பரவாயில்லை. ஏனெனில் இப்படியானவர்களைப் புலிகள் சந்திக்க நேரிட்டால், கொலை செய்துவிடுவதுதான் வழமை. பிற்காலத்தில் நான் புலிகளின் சிறையில் கேள்விப்பட்ட ஒரு தகவல் என்னை அதிர்ச்சியில் உறைய வைத்தது. புலி உறுப்பினர்களில் சிலர் வேவு பார்ப்பதற்காக நெடுங்கேணிக்கு அப்பால் உள்ள மணலாறுப் பகுதிக்குப் போயிருக்கிறார்கள். அங்குள்ள இராணுவ முகாமொன்றுக்கு அருகிலுள்ள காட்டில் அவர்கள் பதுங்கி இருக்கும்போது, சில சிங்களக் கிராமவாசிகள் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என விறகு பொறுக்குவதற்காக அங்கு வந்திருக்கிறார்கள். புலிகள் பதுங்கி இருப்பதைக் கண்டதும் அவர்கள் ஓட முற்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் புலிகள் அவர்களை ஓடவிடவில்லை. சுற்றிவளைத்து எல்லோரையும் பிடித்துவிட்டனர். அவர்களை விட்டால் இராணுவத்துக்குத் தகவல் போய்விடும். அவர்களைத் தமது பகுதிக்குக் கொண்டு வந்து தடுத்து வைக்கவும் புலிகள் எண்ணவில்லை. எனவே அவர்களை அனைவரையும் கொன்றுவிடுவது என புலிகள் முடிவுசெய்துவிட்டனர். ஆனால் அவர்களைச் சுட்டுக் கொன்றால், இராணுவத்துக்கு சூட்டுச் சத்தம் கேட்டுவிடும். எனவே அவ்வளவு பேரையும் கத்தியால் வெட்டியே புலிகள் கொலை செய்திருக்கிறாகள்! எனக்கு இந்த சம்பவத்தை சொன்ன புலி உறுப்பினன், அந்த இடத்தில் இதைத்தவிர தமக்கு வேறு வழி இருக்கவில்லை எனச் சர்வசாதாரணமாகச் சொன்னான். என்னே மகா கொடுமை!

வேறு ஒருநாள் திடீரென 3 சிங்களவர்களை தலையில் காயங்களுடன் அங்கு கொண்டு வந்தார்கள். பின்னர் விசாரித்துப் பார்த்ததில், அவர்கள் முதலில் இந்தச் சிறையில் இருந்து விசாரணை முடிவுற்ற பின்னர் நாவற்குழி – கோவிலாக்கண்டியில் உள்ள புலிகளின் திறந்தவெளிச் சிறைச்சாலைக்கு (பண்டிதர் நன்னடத்தை முகாம்) அனுப்பப்பட்டதாகவும், அவர்கள் அங்குள்ள கடல் ஏரியைத் தாண்டி பூநகரியில் உள்ள இராணுவ முகாமை நோக்கி தப்பி ஓட முற்பட்டபோது கைதுசெய்யப்பட்டதாகவும் தெரியவந்தது. சும்மாவே புலிகளிடம் அகப்பட்டவர்களுக்கு மறு வாழ்வு கிடையாது. அப்படியிருக்க தப்பியோட முயன்றவர்கள் என்றால் சொல்லவா வேண்டும்?

அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த முஸ்லீம் இளைஞனைப் பொறுத்தவரையில், வவுனியாவிலிருந்து பொருட்களை வாங்கிவந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் விற்கும் போர்வையில் இராணுவத்துக்காக உளவு பார்த்தவன் என்பதுதான் அவன் மீதான குற்றச்சாட்டு. அதற்காக அவனைத் தினசரி பெரிய சங்கிலி (சின்னச் சங்கிலி என்றும் ஒருவன் உண்டு) என்ற விசாரணையாளன் அடித்துத் துவைத்துக் கொண்டிருந்தான். ஆனால் அந்த முஸ்லீம் இளைஞனோ அவர்களது குற்றச்சாட்டை கடைசிவரை மறுத்த வண்ணமே இருந்தான். எவ்வளவோ அடிஅடித்தும் அவன் அழவில்லை. சிறையில் உள்ளவர்களிடம் அதிகம் கதைப்பதும் இல்லை. அவனது உடம்பு இரும்பால் ஆனதா என சிறையில் இருந்தவர்கள் அதிசயித்த வண்ணம் இருந்தனர்.

இலங்கைக் கடற்படையில் பணியாற்றிய வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒருவரும் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தார். ஆனால் அவர் புலிகள் இயக்கத்தின் தலைமையிலுள்ள பெரும்பாலானவர்கள் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களாகையால் தன்னை விட்டுவிடுவார்கள் என்ற நம்பிக்கையுடன் இருந்தார். இன்னொருவர் மில்க்வைற் சோப் நிறுவனத்தின் உரிமையாளர் கனகராசாவினதும், அவரது மைத்துனர் அண்ணா கோப்பி தொழிலக உரிமையாளர் நடராசாவினதும் நெருங்கிய உறவினரான இனுவிலைச் சேர்ந்த ஒருவராவார். அவரது மோட்டார் சைக்கிளை புலி உறுப்பினன் ஒருவனுக்கு இரவல் கொடுக்கவில்லை என்பதற்காக, பொய்க்குற்றச்சாட்டின் பேரில் அவரைக் கைதுசெய்திருந்தனர். அவருக்கு அங்கு செய்த சித்திரவதைகளின் காரணமாக அவர் மனோ–ரீதியாகப் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தார். இதேபோல, சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த குமாரசாமி என்ற கிராமசேவையாளர் தனது உழவு இயந்திரத்தைப் புலிகளின் தேவைக்குக் கொடுக்கவில்லை என்பதற்காகக் கைதுசெய்யப்பட்டு கொண்டு வரப்பட்டிருந்தார்.

ஒருமுறை வெளியிலிருந்து வந்த புலிகளின் புலனாய்வாளன் ஒருவன் என்னை விசாரணை செய்தான். அப்பொழுது அவன் மில்க்வைற் சவர்க்காரத் தொழிற்சாலையில் என்.எல்.எப்.ரி இயக்கத்துக்கு ஏதாவது பங்குகள் இருக்கின்றதா எனத் துருவித்துருவிக் கேட்டான். மில்க்வைற் தொழிற்சாலையில் எமது கட்சித் தொழிற்சங்கமே செயற்பட்டு வந்ததும், அங்கு அத்தொழிலாளர்களுக்கு சம்பளமும் இதர வசதிகளும் குறைவு என்றபடியால் அவர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்ததும், வேலை நிறுத்தம் செய்த அவ்வளவு பேரையும் முதலாளி வேலைநீக்கம் செய்ததும் நான் அறிந்த விடயங்கள். தொழிலாளர்களுக்கான தொழில் நீதிமன்ற வழக்கில், எமது தொழிற்சங்கம் தொழிலாளர் பக்கமும், தமிழரசுக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான சட்டத்தரணி மு.ஆலால சுந்தரம் முதலாளியின் பக்கமும் வாதிட்டதையும் நான் அறிவேன்.

மில்க்வைற் முதலாளியுடன் எமக்கு தொழிலாளர் நலன் சம்பந்தமாக மோதல் இருந்தாலும், பிற்காலத்தில் முதலாளி கனகராசா யாழ். பல்கலைக் கழகத்துக்கு முன்னால் உள்ள எனது கடைக்கு சில நேரங்களில் வந்து, தனது 'மில்க்வைற் செய்தி' என்ற பத்திரிகையைத் தந்து அளவளாவிவிட்டுச் செல்வதும் உண்டு. ஆனால் நான் அறிந்தவரையில் என்.எல்.எப்.ரி இயக்கத்துக்கும் மில்க்வைற் தொழிலகத்துக்கும் எந்தவிதமான தொடர்பும் இருக்கவில்லை. ஆனால் விடயமென்னவென்றால், கனகராசாவின் இனுவிலைச் சேர்ந்த பெறாமகன் ஒருவர் என்.எல்.எப்.ரி இயக்கத்தில் இணைந்திருந்தார். எனவே அவரை வைத்து மில்க்வைற் தொழிற்சாலைக்கும் என்.எல்.எப்.ரி இயக்கத்துக்கும் ஒரு முடிச்சுப் போட்டு, அந்தத் தொழிலகத்தைக் கையகப்படுத்தலாமோ என, சில புலி 'மூளைகள்' யோசித்திருக்கின்றன.

இதேபோல யாழ்ப்பாணத்தில் மணிக்கூட்டு வீதியில் பிரபலமாக இயங்கிவந்த ஆர்.ஜீ ஸ்ரோர்ஸ் என்ற வியாபாரத்தலத்தின் உரிமையாளரின் உறவினர் ஒருவர் என்.எல்.எப்.ரி இயக்கத்தில் இணைந்து செயற்பட்டார். எனவே அந்த வியாபாரத்தலத்திலும் என்.எல்எப்ரி இயக்கத்தின் முதலீடுகள் இருக்கின்றனவா என என்னைத் துருவினர்.


அதுமட்டுமின்றி, யாழ்ப்பாணத்தில் மிகப்பிரபலமான றேடியோ நிறுவனமான 'றேடியோஸ் பதி' என்ற வர்த்தக ஸ்தாபனத்திலும் என்.எல்.எப்.ரி இயக்கத்துக்கு பங்குகள் உண்டா என என்னை விசாரித்தனர். அதற்குக் காரணம் றேடியோஸ் பதி உரிமையாளர் பூபதியின் சகோதரரான எழுத்தாளர் சசி. கிருஸ்ணமூர்த்தி, என்.எல்.எப்.ரியின் ஸ்தாபகர் தோழர் விசுவானந்ததேவன் பேராதனை பல்கலைக்கழகத்தில் கல்விகற்ற காலத்தில் அங்கு பட்டப்படிப்பை மேற்கொண்டதுடன், எமது கட்சியுடனும், என்.எல்.எப்.ரி இயக்கத்துடனும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்ததுமாகும். (சிறந்த திரைப்பட விமர்சகரான தோழர் சசி. கிருஸ்ணமூர்த்தி பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் செயலாளராகவும் பணியாற்றியவர். அவர் விடுமுறைக்காக யாழ்ப்பாணம் வந்துவிட்டு 'லயன் எயர்' விமானத்தில் கொழும்புக்குப் பயணித்துக் கொண்டிருக்கையில், புலிகள் பூநகரியில் வைத்து அந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதால் உயிரிழந்தவர். அந்த விமானத்தில் அவருடன் நானும் கொழும்புக்குப் பயணிக்க இருந்தும், விமானச்சீட்டுக் கிடைக்காததால் தப்பிப் பிழைத்தேன்)

இந்த நிறுவனங்களில் எல்லாம் என்.எல்.எப்.ரியின் பங்குகள் இருக்கின்றனவா எனப் புலிகள் விசாரித்ததிற்குக் காரணம், இலாபத்தில் இயங்கிய இந்த நிறுவனங்களைத் தாம் எடுத்துக் கொள்வதற்காகவே. அதுமட்டுமல்லாமல், என்.எல்.எப்.ரி இயக்கம் 'ஹற்றன் நஸனல் வங்கி'யில் நடாத்திய ஒரு கொள்ளையில் பல இலட்சம் ரூபா பணத்தையும், பெருந்தொகையான தங்க நகைகளையும் கைப்பற்றியிருந்தனர். அந்தப் பணம் எங்கெங்கே, யார் யாரிடம் இருக்கின்றது என்பதை அறிவதில் புலிகள் மிகவும் தீவிரமாக இருந்தனர். என்.எல். எப்.ரியைச் சேர்ந்த சிலர் இந்த வர்த்தக நிறுவனங்களுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புகொண்டிருந்த காரணத்தால், வங்கியில் கொள்ளையிடப்பட்ட பணம் இந்த நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டிருப்பதாக ஒரு பொய்க்கதையை உருவாக்கி, அந்த நிறுவனங்களைக் கையகப்படுத்துவதே புலிகளின் நோக்கமாக இருந்தது. ஆனால் அதில் துளியும் உண்மையில்லாததால் அவர்களது நோக்கம் ஈடேறவில்லை.

அந்த ஹற்றன் நஸனல் வங்கிக் கொள்ளைப் பணமும் நகைகளும்தான், என்.எல்எப்.ரி இயக்கத்தில் வேறு நோக்கங்களுடன் இணைந்திருந்த சிலரின் உள்ளார்ந்த ஆசைகளைத் தூண்டியது என்பதும், அந்த இயக்கத்துக்குள் பிளவு ஏற்பட அதுவும் ஒரு முக்கிய காரணம் என்பதும், என்.எல்.எப்.ரி இயக்கத்தின் ஸ்தாபகத் தலைவர் தோழர் வி.விசுவானந்ததேவன் என்னிடம் நேர்மையுடன் ஏற்றுக் கொண்ட ஒரு விடயமாகும். கம்யூனிஸ்ட்டுகளைப் பொறுத்தவரை, கொள்ளை என்பதை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்வதில்லை என்ற எமது தெளிவான அடிப்படை நிலைப்பாட்டை தாம் மீறிவிட்டோம் என்பதை, தோழர் விசுவானந்ததேவன் பின்னர் சுய விமர்சன ரீதியில் ஏற்றுக்கொண்டார்.

இறுதியில் அந்தப் பணத்தின் ஒருபகுதி ஒரு சில புல்லுருவிகளின் கைகளில் சிக்கி, அது அவர்களின் சொந்த வாழ்க்கைக்கு பயன்படுத்தப்பட்டதுடன், அவர்கள் இன்று சில புலம்பெயர் நாடுகளில் புலி விசுவாசிகளாகவும் மாறி, என்.எல்.எப்.ரி இயக்கத்தின் இலட்சியங்களுக்குத் துரோகமிழைத்தவர்களாக மாறிவாழ்கின்றனர் என்பதையும் இங்கு குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும்.

[தொடரும்...]



# பாப்பா முரசு

இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

## வாரம் ஒரு திருக்குறள்



பொறையுடைமை

**திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து**
**அறனல்ல செய்யாமை நன்று.**

தகுதி அல்லாதவைகளைத் தனக்குப் பிறர் செய்த போதிலும், அதனால், அவருக்கு வரும் துன்பத்திற்காக நொந்து, அறம் அல்லாதவைகளைச் செய்யாதிருத்தல் நல்லது.

குறள்:157

## பறக்கும் குதிரை!

பெர்ஷியாவின் சுல்தான் எப்போதும் விந்தையான பொருள்களைக் கண்டால், அவற்றைத் தாம் அடைய விரும்புவார். ஒருநாள் ஓர் இளவரசன் மாயக் குதிரை ஒன்றில் ஏறி அரண்மனை உப்பரிகை மேல் பறந்து கொண்டிருந்தான்.

"இந்த அற்புதமான குதிரையின் விலை என்ன?" என்று கேட்டார் சுல்தான்.

அந்த இளவரசன், "இளவரசியைக் கை பிடிப்பது!" என்று கூறினான். சுல்தானும் ஒத்துக்கொண்டார்.

"ஆனால், என்னுடைய மகன் முதலில் இந்தக் குதிரை மீது அமர்ந்து பறப்பதை நான் பார்க்க விரும்புகிறேன்!" என்று சுல்தான் கூறினார்.

சுல்தானின் மகன் அந்தக் குதிரை மீது அமர்ந்ததும், அது பறந்து சென்று எல்லாருடைய பார்வையிலிருந்தும் மறைந்து விட்டது. சுல்தானின் மகன் திரும்பி வராததால் சுல்தானும், அமைச்சர்களும் கவலை கொண்டனர். அவர்கள் இளவரசனைக் குற்றம் சாட்டிச் சிறையில் அடைத்தனர்.

சுல்தானின் மகன் காற்றில் மேலே மேலே கொண்டு செல்லப் பட்டான். அவனால் அந்த மாய குதிரையைக் கட்டுப்படுத்த இயலவில்லை. அவன் அந்தக் குதிரையை வலப்பக்கம் இழுத்தான், இடப்பக்கம் இழுத்தான். ஆனால், எந்த மாற்றமும் ஏற்படவில்லை.



பல நாட்கள் பயணம் செய்த பிறகு அவன் தன் இருப்பிடத்திற்குத் திரும்பினான். அரண்மனையில் எல்லாரும் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர். அவன் திரும்பி வந்ததால் அந்த இளவரசனும் விடுவிக்கப்பட்டான். ஆனால், அந்த இளவரசன் அவர்கள் தன்னை அவமானப்படுத்தி விட்டனர். ஆதலால் அவர்களை பழிவாங்கவேண்டும் எனச் சபதமிட்டான்.

சுல்தானின் அரண்மனையில் இளவரசிக்கு திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இளவரசியைக் குணப்படுத்துபவர்களுக்குச் சிறந்த வெகுமதி அளிக்கப்படும் என்று சுல்தான் உறுதியளித்தார். இளவரசன் மருத்துவன் போன்று மாறுவேடம் அணிந்து சுல்தானின் அரண்மனையை அடைந்தான்.

"முதலில் மந்திரக் குதிரையையும், இளவரசியையும் என்னிடம் அழைத்துவாருங்கள்!" எனக் கூறினான். மந்திரக் குதிரையும், இளவரசியும் வந்த பின்பு தன் மந்திரசக்தியைப் பயன்படுத்தி, இளவரசியைக் குணப்படுத்திவிட்டான். அதே நேரத்தில் அவளை இழுத்துத் தன்னுடைய மாயக்குதிரை மீது அமர்த்திக்கொண்டு பறந்து சென்றுவிட்டான். ஒருவராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. தனக்கு சொந்தமான பொருளை தானே அடைந்தான்.

## வெள்ளைச் சிங்கம்



முதன் முதலில் தென் ஆப்பிரிக்க நாட்டில்தான் வெள்ளைச் சிங்கங்கள் இருப்பது வெளியுலகிற்குத் தெரியவந்தது. அங்குள்ள டிம்பாவதி பகுதியில் வெள்ளைச் சிங்கம் இருப்பதை உறுதிசெய்தனர். ஆனால் உண்மையில் அவை வெள்ளை நிறம் அல்ல. பிறவிக் கோளாறு காரணமாக இப்படி இவை பிறந்திருக்கலாம் என்று கருதினார்கள்.

ஆனால் உண்மையில் வெள்ளைச் சிங்கங்கள் இருப்பது 1975ஆம் ஆண்டு உறுதி செய்யப்பட்டது. இதேபோல் இந்தியாவிலும் வெள்ளைச் சிங்கம் இருப்பது கண்டறியப்பட்டது. அவற்றுக்கு வெள்ளைச் சிங்கம் என்று பொதுவான பெயர் இருந்தாலும்கூட அவற்றின் மீது மெல்லிய சாம்பல் நிறம் இருக்கிறது. இந்த வெள்ளைச் சிங்கங்களைப் பிடித்து வளர்ப்பது சிரமமாக இருந்தது.

இதனால் மிருகக்காட்சி சாலையில் இவற்றை வளர்க்க முடியாமல் இருந்தது. ஆனால் கடந்த 5 ஆண்டுகளாக வெள்ளைச் சிங்கங்களை மிருகக்காட்சி சாலையில் இனப் பெருக்கம் செய்வதில் வெற்றி கிடைத்துவிட்டது. அண்மையில் ஜெர்மனியின் நூரம்பெர்க் நகரில் ஒரு பெண் வெள்ளைச் சிங்கம் குட்டியொன்றை ஈன்றெடுத்தது.

## குறள் பாட்டு

புலால் மறுத்தல்

*"பொருள்ஆட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு."*

பொருளை மேலாய்க் கருதியே போற்றிக் காக்கத் தெரியாதோர் பொருளை வைத்து வாழ்ந்திட முடியாமல் இழந்து போவார்கள்.

இன்னொரு உயிரின் உடலினைச் சுவைத்துத் தின்று மகிழ்பவர் அருளை ஆட்சி செய்திட முடியாமல் இழந்து போவார்கள்.

## அன்பு மொழிகள்

1. இசைக்கு மொழியில்லை என்பதைப் போல அன்புக்கும் மொழி தேவையில்லை! – அன்னை தெரசா
2. அன்பு செலுத்துபவர்களைத் தவிர வேறு யாரையும் வாழ்பவராகக் கருத முடியாது! – விவேகானந்தர்
3. பயன் கருதி அன்பு காட்டுவதைவிட, காட்டாமல் இருப்பதே மேல்! – செனகல்
4. அன்பான செயல் மருந்து மட்டுமல்ல, நல்ல வாழ்த்தும்கூட! – கதே
5. அன்பின் தன்மைக்கேற்பவே, செயல்களும் இருக்கும்! – சோக்ரடீஸ்
6. அன்பும் மரியாதையும் கொண்டிருப்பவன் இந்த உலகில் எதையும் சாதித்துவிடுவான்! – ரிக்டர்
7. அன்புதான் உலக மகா சக்தி! – புத்தர்
8. தூய அன்பு அச்சத்தைத் துரத்திவிடும்! – பைபிள்

## திசைமாறிய குருவி



அமெரிக்கா, கனடா நாடுகளில் மஞ்சள் நிற ரொபின் குருவியை அதிகளவில் பார்க்கமுடியும். தற்போது இப்பறவையை இங்கிலாந்து மக்கள் தங்களது நாட்டின் பெரும்பாலான இடங்களில் பார்க்கமுடியும். அவர்களி பெரும்பாலானோர் இந்தக் குருவி நமது நாட்டிற்கு எப்படி வந்தது என்று புரியாமல் குழம்பினார்கள். வடஅமெரிக்காவில் கடந்த சில மாதங்களாக வீசிய சூறாவளிக் காற்றில் இந்தப் பறவை, அட்லாண்டிக் கடலையும் தாண்டி வந்திருப்பது தெரிந்தது. காற்றின் போக்கிலேயே இங்கிலாந்து வந்துசேர்ந்த மஞ்சள் வயிற்று ரொபின் குருவிகள் தற்போது தங்களின் புதிய இடத்தில் எந்தவித ஆபத்துமின்றி வாழ்கின்றன.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 14.05.2013

**வர்ணம் தீட்டும் போட்டி இல.990**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 988**

பரிசுக்குரியவர்:
க.கரீசன், 71/3, ஸ்டேசன் றோட்,
யாழ்ப்பாணம்.

பாராட்டுக்குரியவர்கள்

01. மா. சபீனா, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
02. இ.மாளவிகா, உருத்திரபுரம், கிளிநொச்சி.
03. எம்.சைந்தன், இணுவில் மேற்கு.
04. சி.குந்தவை, பிரதான வீதி, நீர்கொழும்பு.
05. வி.அஷ்மிகா, மாசார், பளை.
07. மு.தர்மிகா, பேராதனை, கண்டி.
08. அ.அபிஷா, தர்ஹாநகர்.

## சமூக சேவகி ஹரியட் டப்மேன்

**இந்த** முறையில் (பாதாள ரயில்பாதை) பாதாளமும் கிடையாது. ரயிலும் கிடையாது. ரயில் சம்பந்தப்பட்ட வார்த்தைகள் இந்த ஆபத்தான பணியில் ஈடுபட்டவர்களால் பயன்படுத்தப்பட்டன. ஸ்டேசன் என்பது ஓர் இடம். ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு அடிமைகள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். சரக்கு அல்லது பயணிகள் என்றால் அடிமைகள் என்று பொருள். 'கெண்டக்டர்' என்பவர் ஒரு ஸ்டேசனிலிருந்து (இடத்தில் இருந்து) இன்னொரு இடத்திற்கு அழைத்துச் செல்லப்படுபவர். ரயில் போகும் 'ரூட்' என்பது அந்த அடிமைகளை அழைத்துச் செல்லும் வழி. இறுதியில் சென்றடையும் ஸ்டேசன் என்பது அவர்களை அடிமைகளாக நடத்தாத கனடா போன்ற நாடுகளும் அமெரிக்காவில் வடக்குப் பகுதியில் உள்ள சில இடங்களும்தான்.

இந்த ஆபத்தான பணியை மனிதநேயமிக்க அமெரிக்கர்கள் பலரும் கறுப்பர்களும் செயற்படுத்தி வந்தனர். வழியில் இந்த அடிமைகள் இரவுநேரங்களில் இரகசியமாக அழைத்துச் செல்லப்படு வார்கள்.

இந்தப் பணியில்தான் ஹரியட் டப்மேன் ஈடுபட்டு வந்தார். அடிமைகளை அழைத்துச் செல்லும்போது பிடிபட்டால் அழைத்துச் சென்றவர்களுக்கும் உடன் சென்ற அடிமைகளுக்கும் கடுமையான தண்டனைகள் கிடைக்கும்.

ஹரியட் டப்மேன் தன்னுடைய வாழ்நாளில் பத்தொன்பது முறை இதுபோன்று அடிமைகளை அழைத்துச் சென்று அவர்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கச் செய்த போதும் ஒருமுறைகூட மாட்டிக் கொண்டதில்லை.



இத்தனைக்கும் இவரைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு நாற்பதாயிரம் டொலர் வெகுமதி அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட தருணம் அது.

ஹரியட் டப்மேன், அமெரிக்காவில் 1861 முதல் 1865 வரை நடைபெற்ற உள்நாட்டுப் போரின்போது அமெரிக்காவில் தெற்கு கரோலினா என்ற இடத்தில் இருந்த இராணுவ தளத்தில் இராணுவ சேவை செய்தவர்.

பின்னர் அடிமைகள் என்ற சொல் அமெரிக்க வரலாற்றிலில் இருந்து முற்றிலும் ஒழிந்தபிறகு கறுப்பர்களின் உரிமைக்காகப் போராடினார். இவரது சேவைகளைப் போற்றும் வகையில் அமெரிக்கா இவர் உருவம் தாங்கிய அஞ்சல் தலையை வெளியிட்டுப்பெருமைப்படுத்தியது.

1820-இல் பிறந்த அந்த சாதனைப் பெண் தனது 93ஆம் வயதில் 1913-ஆம் ஆண்டு மறைந்தார்.

தான் உடல்ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டிருந்தாலும் தன்னுடைய இனத்தைச் சேர்ந்தவர்கள் அடிமைகளாக வாழாமல் சுதந்திர மக்களாக வாழவேண்டும் என்று நினைத்து தன் உயிரைப் பற்றிக் கவலைப்படாமல், ஆபத்தான சேவையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஹரியட் டப்மேன் புகழ் என்றென்றும் நிலைத்து இருக்கும்.

**எ**ல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி. படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.

155

# கொள்ளை ராணி பூலான்தேவி

## திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு

**பூலான்** கோஷ்டியினர் எங்கே இருக்கின்றனர்? என்ற தகவலை திரட்ட ஆரம்பித்தனர் மல்கான்சிங் ஆட்கள். அப் போது தான் பூலானும் அவள் ஆட்களும் கலெளி என்ற கிராமத் தில் ஒன்று கூடப் போவதாகத் தகவல் எட்டியது.

பூலானும் மான்சிங்கும் நிச்சயமாக அங்கு வருவார்கள். இருவரையும் ஒன்றாகவே தீர்த்துக் கட்டிவிட்டு. இருவரில்



ஒருவர் தப்பினாலும் ஆபத்து. அடிபட்ட புலியின் சீற்றத்தை நாம் சந்திக்கும் நிலை ஏற்பட்டு விடும்" என்று சோப்ரானிடம் எச்சரித்தான் மலகான்சிங்.

கலெளி கிராமத்திற்கு தன் ஆட்கள் மூன்று பேருடன் சென் றான் சேரப்ரான்.

அக்கிராமத்தவர்கள் மல் கான் சிங் கூட்டத்தினருக்கும் பழக்கமானவர்கள் என்பதால் சோப்ரானுக்கு வரவேற்பு இருந்தது.

அக்கிராமத்தில் பூலான் கோஷ்டியைச் சேர்ந்த லால்தூ, ராம்சிங்கர் ஆகிய இருவர் தங்கி இருந்தனர்.

பூலானின் கட்டளைப்படி அங்கு வந்து காத்திருந்த இருவரையும். கிராமத்தினர்



சோப்ரானிடம் அறிமுகம் செய்துவைத்தனர்.

சோப்ரானுக்கு பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாகியது.

லால்தூ, ராம்சங்கர் இரு வருடனும் நெருக்கமாகிக் கொண்டான். பூலானைப் பற்றி அவர்களிடம் புகழ்ந்து பேசினார்கள்.

பூலானும், மான் சிங்கும் எப்போது வருகிறார்கள் என்ற தகவலை அவர்களின் வாயில் இருந்து கறந்து கொண்டான்.

அதேசமயம் கலெளி பொலிஸ் நிலைய உதவி இன்ஸ்பெக்டர் யாதவ் மன்பாக தகவல் கூறும் ஆள் ஒருவன் பணிவாக நின்றுகொண்டிருந்தான்.

"உண்மையாகத்தான் சொல்கிறாயா?" என்றார் யாதவ்.

"ஆம் ஐயா, பூலான் தேவ-யும் மான்சிங்கும் மேலும் சிலரும் காலெளி கிராமத்தில் தங்கி இருக்கின்றார்கள். மான் சிங்குக்கு நம்பிக்கையான ஆள் ராம் சங்கரை நான் கண்ணால் கண்டது மெய்" என்றான்.

"பூலான் தேவியைக் கண்டாயா? அதைச் சொல்"

அவன் சிறிது தயங்கி, "ஆம் ஐயா, சேலை கட்டிக்கொண்டு முக்காடு போட்டுக் கொண்டு வந்திருக்கிறாள்" என்றான்.

நன்கு பயிற்சி செய்ய பதினைந்து பேருடன் புறப்பட்டார் சப் இன்ஸ்பெக்டர் யாதவ்.

அனைவரும் இயந்திரத் துப்பாக்கிகள் வைத்திருந்தனர்.

கலெளி கிராமத்தை நோக்கி ஜீப் வண்டிகள் புழுதியைக் கிளப்பிக் கொண்டு சீறிச் சென்றன.

அதே சமயம் சோப்ரான் பூலானை வேட்டையாடப் போகும் நேரத்துக்காக இதயம் படபடக்கக் காத்திருந்தான்.

கலெளி கிராம எல்லையில் ஜீப்புக்கள் மூச்சை நிறுத்தின.

பொலிசார் இறங்கினர். தகவல் கொடுப்போன் வழிகாட்டிச் செல்ல முன்னேறினர்.

சப் இன்ஸ்பெக்டர் யாதவ்வுக்கு தன பதவி உயர்வு நிச்சயம் என்பதை நினைக்க மகிழ்ச்சியாக இருந்தது.

ஆனால் நடந்ததோ?

பூலானின் ஆட்களான ராம் சங்கர், லால்தூ இருவரும் தரையில் படுத்துக் கண்ணயர்ந்து போயிருந்தனர்.

சோப்ரானை நல்லவன் என்று நம்பியதால், அவனை பூானிடம் அறிமுகம் செய்வதோடு. தங்கள் கோஷ்டியிலேயே இருக்குமாறு கேட்க வேண்டும் என்று நினைத்தவாறே ராம்சங்கர் தூங்கிவிட்டான்.

ஜீப்புக்கள் வருவதைக் கண்டணதும் சோப்ரான் முதலில் தன் ஆட்கள் மூவரையும் உஷார்ப் படுத்தினான்.

ராம்சங்கரையும், லால்தூ இருவரும் அப்படியே கிடந்து பொலிசாரிடம் மாட்டிக்கொள்ளட்டும் என்று விட்டுவிட்டான்.

ஆனால், சோப்ரானின் நினைப்புக்கு மாறாக நிகழ்ச்சிகள் நடந்தன.

அவர்கள் அந்த வீட்டை விட்டு வெளியேறும் முன்பாகவே, சப்-இன்ஸ் பெக்டர் யாதவ் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி முற்றுகை இட்டுவிட்டது.

சோப்ரானும், அவன் ஆட்களும் தப்பிச் செல்ல, வீட்டுக் கதவை திறந்த போது, பொலிசாரின் இயந்திரத் துப்பாக்கிகள் சடசடத்தன.

மிகத் துரிதமாக அதிரடிப்படை செயற்பட்டுவிட்டது.

இத்தனை துரிதத்தை சோப்ரான் எதிர்பார்த்தான் இல்லை.

அப்படியே கதவருகே சுருண்டு விழுந்தான். அவன் ஆட்கள் உள்ளே ஓடினார்கள்.

அதிரடிப்படை பாய்ந்தது.

துப்பாக்கிகள் வெடிக்கும் ஓசை கேட்டு ராம்சங்கரும், லால்தூவும் திடுக்கிட்டு எழுந்தனர்.

அதற்கிடையே பொலிஸ் படை வீட்டுக்குள் புகுந்து சரமாரியாகச் சுட்டது.

ராம் சங்கர் படுக்கையில் இருந்து எழவே வாய்ப்பில்லாமல் சுட்டுக் கொல்லப்பட்டான்.

சோப்ரானின் ஆட்களுடன் சேர்ந்து பின்புறமாய் தப்பி ஓடினன் லால்தூ.

நால்வரையும் பின்புறம் தயாராய் காத்திருந்த பொலிஸ் படையின் துப்பாக்கி ரவைகள் வரவேற்றன. உடம்பெங்கும் முத்தமிட்டு உயிர்குடித்தன.

யாதவ் அந்த வீட்டின் மூலை முடுக்கெல்லாம் பூலானைத் தேடினார. அவர் முகம் ஏமாற்றத்தால் சுருங்கியது.

கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்த ஐந்து பேர் வேட்டையாடப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடக்கின்றனர்.

பெரிய வேட்டைதான். அதற்காக மேலதிகாரிகள் நிச்சயம் பாராட்டத்தான் போகிறார்கள்.

அப்படியிருந்தும் திருப்தியில்லை.

"புலிவேட்டைக்கு வந்த இடத்தில் ஐந்து முயல்களைச் சுட்டிருக்கின்றோம்!" சலிப்பாகச் சொல்லிக்கொண்டு தன் பூட்ஸ் காலால் தரையை உதைத்தான். தகவல் சொன்ன ஆள் நடுங்கிக் கொண்டிருந்தான்.

திருப்பங்கள் தொடரும்...

மருத்துவம்

# சுகப்பிரசவம் ஆவதற்கு...!



**கர்ப்ப** காலத்தில் கடைப் பிடிக்க வேண்டிய விதிமுறைகள் மற்றும் உணவு முறைகள் பற்றி பார்க்கலாம். குழந்தை வயிற்றில் இருக்கும் போது, எடை அதிகமாக உள்ள பெண்கள் 5 முதல் 7 கிலோ வரை எடை கூடலாம். அதுவே ஒல்லியானவர்களாக இருந்தால், 12 முதல் 15 கிலோ வரைகூட எடை ஏறலாம். தவறில்லை.

அதேநேரத்தில், முதல் 3 மாதங்களுக்கு எடை கூடவேண்டும் என்ற அவசியம் இல்லை. வாந்தி எடுப்பதால் சிலர் எடை குறைவார்கள் அதுவும் தவறில்லை. அடுத்து, 3-ல் இருந்து 5 மாதங்களுக்கு 2 முதல் 3 கிலோ வரை ஏறலாம். அதன்பிறகு, 5-ல் இருந்து 10 மாதங்களுக்கு 5 முதல் 7 கிலோவரை எடை கூடலாம்.

முதல் 5 மாதங்களுக்கு உணவு அளவை அதிகப்படுத்தவேண்டிய அவசியம் இல்லை. ஐந்தாவது மாதத்துக்குப்பிறகு, 1 வேளைக்கு 300 கலோரி கொண்ட உணவை எடுத்துக்கொண்டால் போதுமானது. உதாரணத்துக்கு 1 இட்லி, 1 வாழைப் பழம், 1 டம்ளர் பால். இதில் அவரவர் விருப்பத்துக்கு ஏற்ற உணவை 300 கலோரி அளவுக்கு மாற்றியும் உட்கொள்ளலாம்.

சில பெண்கள், குழந்தைக்கும் சேர்த்து சாப்பிடுகிறேன் என்று, அளவுக்கு அதிகமாக சாப்பிடுவார்கள். இதனால், அதிக குண்டாகி சிசேரியன் செய்வதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன. ஒல்லியாக இருப்பவர்களைவிட குண்டாக இருக்கும் பெண்கள்தான் உணவு விடயத்தில் கூடுதல் ஜாக்கிரதையோடு இருக்க வேண்டும்.

முதலில் நிறைய சாப்பிடக் கூடாது. கட்டாயம் சீனி கலந்த உணவையோ, அதிக எண்ணெய் கலந்த பதார்த்தத்தையோ உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும். சாதாரணமாக, எல்லாப் பெண்களும் எண்ணெய், சீனி பொரித்த உணவுகளை தவிர்ப்பது நல்லது. ஒல்லியானவர்கள் எந்த பழங்கள், காய்கறிகளை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம்.

ஆனால், குண்டானவர்கள் அதிக இனிப்பு உள்ள வாழை, பலா, மாம்பழத்தைக் கட்டாயம் தவிர்த்துவிட வேண்டும். அதே மாதிரி கிழங்கு வகைகள், கொட்டைகள், மாமிசங்களையும் தவிர்க்க வேண்டும். இரும்புச்சத்து நிறைந்த பேரிச்சம்பழத்தை தேனில் நனைக்காமல் சாப்பிடலாம். ஒரே வரியில் சொல்வதென்றால் கொழுப்புச்சத்து நிறைந்த உணவுகளைத் தவிர்த்தால், சுகமான சுகப்பிரசவம்தான்!

# பற்கள் பராமரிப்பு



கர்ப்பத்தின் போது சில பெண்களுக்கு பற்களில் பிரச்சினைகள் ஏற்படலாம். ஒரு பெண் கருத்தரிக்கும்போது ஹோர்மோன்கள் காரணமாக உடலில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. கர்ப்ப காலத்தில் தானாகவே பற்களில் பாதிப்பு ஏற்படுவது இல்லை. கர்ப்பிணிகளுக்கு ஹோர்மோன் சுரப்பு அதிகரிப்பதால், பற்களின் ஈறுகள் வீக்கமடையலாம்.

இரத்தம் கசியலாம். உணவுத் துகள்கள் பல்லிடுக்கிடையே சிக்கி ஈறுகளில் வலி, எரிச்சலை ஏற்படுத்தலாம். கல்சியம் உட்கொள்ளும் தாயின் கர்ப்ப காலத்தில் கல்சியம் போதுமான அளவு இருந்தால், அவரது எலும்புகள் -பற்கள் வளரும் குழந்தைக்கு கல்சியத்தை வழங்கும்

உங்கள் பற்களில் ஏற்படும் பிரச்சினை உங்கள் குழந்தையை பாதிக்கும். அதனால் கரு உருவான ஆரம்ப காலத்திலேயே பல் மருத்துவரை கர்ப்பிணிகள் நாடி. பல் சொத்தை இருந்தால் அடைப்பது. பல் மீது உறை அமைப்பது. பல்லைப் பிடுங்குதல், வேர்நிலை சிகிச்சை செய்தல், பற்கள் சுத்தம் செய்தல் போன்ற சிகிச்சையைப் பெறுவது அவசியம். பல்லில் பிரச்னை ஏற்பட்டால், பல் மருத்துவரிடம் செல்வது அவசியம். தாம் கர்ப்பம் அடைந்திருப்பதை முதலில் பல் மருத்துவரிடம் கூற வேண்டும்.

மருந்து -மாத்திரைகளையும் அதிகம் எடுத்துக் கொள்ளக் கூடாது. எக்ஸ்-ரே-ஐத் தவிர்க்க வேண்டும். இதனால்தான் கர்ப்பிணிகளுக்கு மருந்துகளைப் பரிந்துரைக்கும்போது அதிக கவனம் எடுத்துக் கொள்வதை மருத்துவர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஏனெனில் சில மாத்திரைகள் கருவில் இருக்கும் குழந்தைக்கு பாதிப்பை ஏற்படுத்தி விடக்கூடும்.

பிரச்சினையை ஆய்வுசெய்து, பல் மருத்துவரின் பரிந்துரைக்கு ஏற்ப கர்ப்ப காலத்தில் பல் சிகிச்சையை மேற்கொள்ளாமல் இருப்பது பாதுகாப்பானது. எனினும் தவிர்க்க முடியாத நிலையில், அதாவது பல் பிடுங்குதல்-பல் வேர் சிகிச்சை என கர்ப்பிணிகளுக்கு அவசரமாகத் தேவைப்படும் சிகிச்சையை உரிய கவனத்துடன் மருத்துவர்கள், செய்வது அவசியம். பற்களை வெண்மைப்படுத்துதல் உள்ளிட்ட அழகு சிகிச்சைகளை குழந்தை பிறக்கும் வரை கர்ப்பிணிகள் ஒத்திப் போடுவது நல்லது.


என்றென்றும் புன்னகை


இருவர் உள்ளம்

## காதல் தோல்வி பாடலுக்கு சம்பளம் வாங்காமல் நடித்த நயன்தாரா

பிரபுதேவாவுடனான காதல் முறிவுக்கு பிறகு நடிப்பில் கவனம் செலுத்தி வருகிறார் நயன்தாரா. இந்நிலையில் எதிர்நீச்சல் என்ற படத்தை முதன்முறையாக தயாரிக்கிறார் தனுஷ். இப்படத்தின் ஹீரோ சிவகார்த்திகேயன் காதல் தோல்வியில் வேதனையாக இருக்கும் நேரத்தில் "சத்தியமா நீ எனக்கு தேவையில்ல.... பத்து நாளா சரக்கு அடிச்சேன் போதையே இல்ல" என்ற குத்து பாடல் இடம்பெறுகிறது. இப்பாடலுக்கு நடனம் ஆடி நடிக்க தனுஷ் முடிவு செய்தார்.

ஜோடியாக ஆட நயன்தாரா பொருத்தமாக இருப்பார் என்று தனுஷ் யோசனை கூறினார். இதுபற்றி நயன்தாராவிடம் தனுஷும் இயக்குனர் துரை செந்தில்குமாரும் கூறியபோது உடனடியாக நயன்தாரா ஒப்புக்கொண்டார். அத்துடன் இந்த பாடலுக்காக சம்பளம் எதுவும் அவர் வாங்கவில்லை. சூழ்நிலைக்கு ஏற்ப அணிய வேண்டிய கொஸ்டியூமை கூட நயன்தாராவே எடுத்து வந்துவிட்டாராம். பிறகு இப்பாடல் படமாக்கப்பட்டது. இந்த தகவலை இயக்குனர் துரை செந்தில்குமார் கூறினார்.

## தமிழில் வரும் 'அயர்ன் மேன் 3'

ஏற்கனவே 2 பாகங்கள் வெளியாகி வெற்றி பெற்ற 'அயர்ன் மேன்' படத்தின் 3ம் பாகம் வரும் 26ம் திகதி தமிழ், ஆங்கிலத்தில் இந்தியா மற்றும் இங்கிலாந்தில் வெளியாகிறது. அமெரிக்காவில் மே மாதம் 3ம் திகதி ரிலீஸ். 3டி படமாக உருவாகி இருந்தாலும் 100 தியேட்டர்களில் வெளியாகும் இப்படத்தின் தமிழ் டப்பிங் 2டி வடிவில்தான் ரிலீஸ் ஆகிறது. ஆங்கிலத்தில் ... மட்டுமே 3டி வடிவில் 30 தியேட்டர்களில் வெளிவருகிறது. ... தொழில் அதிபரும், பிளேபோயுமான டோனி ஸ்டார்கை கண்ணுக்கு தெரியாத ஒரு சக்தி ஆட்டிப்படைக்கிறது.

இதனால் டோனிக்கு பாதிப்பு ஏற்படுகிறது. தனக்கு எதிரான சக்தியை கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்குகிறார் டோனி. அப்போது அவர் எதிர்கொள்ளும் சம்பவங்களே கதை. ராபர்ட் டவ்னே, எனெத் பாட்ரோ, டான் சேடல் உட்பட பலர் நடித்துள்ளனர். ஷேன் பிளாக் இயக்கம். மார்வெல்ஸ் எழுதிய சூப்பர் ஹீரோ அயர்ன் மேன் கதையை நழுவி இப்படம் எடுக்கப்பட்டுள்ளது.





## கமலுக்கு ஜோடியாகும் தீபிகா படுகோனே!

இந்தி நடிகை தீபிகா படுகோனே ரஜினிகாந்தை தொடர்ந்து கமல்ஹாசனுக்கு ஜோடியாக நடிக்கிறார் என்று கூறப்படுகிறது. தீபிகா படுகோனே முதன்முதலாக பொலிவூட்டில் ஷாருக்கானின் ஓம் சாந்தி ஓம் படத்தில் அறிமுகமானார்.

அந்த படத்தின்மூலம் பிரபலமானார். இதையடுத்து பொலிவூட்டின் முன்னணி நடிகர்களுடன் நடித்துவருகிறார். இந்நிலையில்தான் பலரும் ஜோடி சேர விரும்பும் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்துடன் நடிக்கும் வாய்ப்பு தீபிகாவுக்கு கிடைத்தது. ரஜினியுடன் கோச்சடையானில் ஜோடி சேர்ந்த தீபிகா தற்போது உலக நாயகன் கமலுடன் நடிக்கப் போகிறார் என்ற தகவல் கிடைத்துள்ளது. தீபிகா பொலிவூட்டில் முன்னணி நடிகருடன் அறிமுகமானார். அதேபோன்று கோலிவூட்டில் சூப்பர் ஸ்டார் படத்தில் அறிமுகமாகுகிறார்.

## பொம்மையை கொடுத்து காதலியை கவர்ந்த ஜி.வி.

டெடிபியர் பொம்மையை கொடுத்து காதலியை கவர்ந்த இசை அமைப்பாளர் ஜி.வி. பிரகாஷ், விரைவில் அவரை மணக்க உள்ளார். 'வெயில்', 'குசேலன்', 'ஆயிரத்தில் ஒருவன்' உள்ளிட்ட பல்வேறு படங்களுக்கு இசை அமைத்திருப்பவர் ஜி.வி. பிரகாஷ். தனது இசையில் பாட வந்த பாடகி சைந்தவியை காதலிக்கிறார். இவர்கள் திருமணம் வரும் ஜூன் மாதம் 27ம் தேதி சென்னையில் நடக்கிறது.

சைந்தவியை காதலித்த அனுபவம் பற்றி பிரகாஷ் கூறியதாவது: நான் 10ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன் சைந்தவி 8 வகுப்பு படித்துவந்தார். அப்போதே அவர் மீது எனக்கு காதல் பிறந்துவிட்டது. எனது காதலை அவரிடம் வெளிப்படுத்தினேன். டெடிபியர் கரடி பொம்மை இரண்டை அவருக்கு பரிசளித்தேன். அதை தொட்டால் உடனே 'ஐ லவ் யூ' என்று சொல்லும். இப்படித்தான் எனது காதலை தெரிவித்தேன். அவருக்கும் என்னை பிடித்திருந்தது.

அடிக்கடி எனக்கு போன் செய்வார். மனம் விட்டு பேசி காதலர்களாக ஆனோம். கடந்த 12 வருடமாக எங்கள் காதல் வளர்ந்து வந்தது. வாழ்க்கையில் நிலையான ஒரு இடத்தை பிடித்த பிறகே திருமணம் செய்ய முடிவு செய்தோம். இப்போது எல்லோருக்கும் தெரிந்த ஒரு இசை அமைப்பாளராக நான் இருக்கிறேன். சைந்தவி பாடகியாக இருக்கிறார். திருமணத்துகான வயதும் வந்துவிட்டது. எனவே திருமணம் செய்துகொள்ள முடிவு செய்தோம். இவ்வாறு ஜி.வி.பிரகாஷ் கூறினார்.


கில்லாடி



## 'அவள் பெயர் தமிழரசி' நாயகிக்கு அஜித் பட வாய்ப்பு

திரையுலகிற்காக மனோசித்ரா என்ற தனது இயற்பெயரை நந்தகியாக மாற்றியவர் 'அவள் பெயர் தமிழரசி' நாயகி. இவர் தற்பொழுது அஜித்குமார் நடிக்க விஜயா புரொடக்ஷன்ஸ் பிரமாண்ட தயாரிப்பில் சிவா இயக்கத்தில் உருவாகும் லேட்டஸ்ட் படத்தில் நடிக்கிறார்.

பெற்றோர் வைத்த பெயரைவிட வேறு எந்த பெயர் நல்ல பெயராகவோ ராசியான பெயராக இருந்திட முடியும் என்று கூறும் மனோசித்ரா, "இந்த பெயர் மாற்றம் தான் அஜீத் சார் படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது" என்று பெருமிதத்தோடு கூறினார். அஜித் நடிக்கும் படத்தில் இயக்குனர் சிவா கொடுத்த கதாபாத்திரம் குறித்து மனோசித்ரா பேசாமல் மர்மம் காத்துவருகிறார் என்கிறது பட வட்டாரம்.

இவர் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த தமிழ் நடிகை என்பது குறிப்பிடத்தக்கது.

## தாய்மொழிக்கு திரும்பிய கௌதம் மேனன்

தமிழ், தெலுங்கு, இந்தி திரை உலகில் மட்டுமே கவனம் செலுத்திவந்த கௌதம்மேனன் முதன் முறையாக தனது தாய்மொழியில் படம் இயக்க இருக்கிறார். முதல் படத்திலேயே மலையாள சூப்பர் ஸ்டார் மம்முட்டியுடன் இணைகிறார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கேரளாவைச் சேர்ந்த இயக்குநர் கௌதம் மேனன் தமிழில் மின்னலே தொடங்கி நீதானே என் பொன் வசந்தம் வரை பல திரைப்படங்களை இயக்கியுள்ளார். தெலுங்கு, இந்தியிலும் அவரது படங்களை ரீமேக் செய்வார் கௌதம்மேனன்.

ஆனால் மலையாளத் திரை உலகின் பக்கம் திரும்பிக்கூட பார்த்ததில்லை. முதன் முறையாக மம்முட்டியை வைத்து படம் இயக்கப் போகிறார். இப்போது சூர்யா உடன் துருவ நட்சத்திரம் படத்தில் பிஸியாக உள்ள கௌதம் மேனன் 2014ம் ஆண்டில் இருந்து மம்முட்டி படத்தை இயக்கு வார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.




## கலாசாரத்தை சீரழிப்பதாக நடிகர் கமல், கௌதமி மீது புகார்

இந்திய கலாசாரத்தை சீரழிப்பதாக நடிகர் கமல்ஹாசன் நடிகை கவுதமி ஆகியோர் மீது பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. இந்து மக்கள் கட்சி சென்னை மண்டல தலைவர் முத்து ரமேஷ்குமார் சென்னை பொலிஸ் கமிஷனர் அலுவலகத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. விஜய் டி.வி சேனலில், நீங்களும் வெல்லலாம் ஒரு கோடி என்ற நிகழ்ச்சி ஒளிபரப்பப்படுகிறது. கடந்த, 15,16,17, ஆகிய நாட்களில், இந்த நிகழ்ச்சியில், நடிகர் கமல்ஹாசன், நடிகை கௌதமி சிறப்பு விருந்தினர்களாக, கலந்துகொண்டனர். நிகழ்ச்சி தொகுப்பாளரான, நடிகர் பிரகாஷ்ராஜ், நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களிடம், உங்களுக்கு கமலை பிடிக்குமா? எனக் கேட்கிறார் எல்லாரும் பிடிக்கும் என்கின்றனர். ஒரு நடுத்தர வயது பெண், எனக்கு வெறித்தனமாக பிடிக்கும் என்கிறார். அதற்கு பிரகாஷ்ராஜ், உங்களுக்கு, கமலிடம் நிறைவேறாத ஆசை. என்ன? என, கேட்கிறார்.

அந்த பெண், கமலை நான் கட்டிப்பிடித்து முத்தம் கொடுக்க வேண்டும் என்கிறார். இதோ, இப்போதே உங்கள் ஆசையை நிறைவேற்றி கொள்ளுங்கள் என, பிரகாஷ்ராஜ் கூற, நடிகர் கமலை அந்த பெண் கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்து என் வாழ்வின் இலட்சியம் நிறைவேறியது முத்தம் கொடுக்கும்போது, என் கணவரை வெளியே அனுப்பிவிட்டேன் என்கிறார்.


யார் இவள்...

இந்த நிகழ்ச்சியில், நடிகை கௌதமிக்கும், உங்களுக்கும் என்ன உறவு? என, பிரகாஷ்ராஜ் கேட்க நாங்கள் கணவன், மனைவி அல்ல பார்ட்னர் உடலுறவு போன்ற விஷயங்கள் உண்டு என்று கமல் கூறியுள்ளார். இதுதவிர, நடிகை திவ்யதர்ஷினி என்பவரும், கமலை கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்தார். குழந்தைகள் முதல் பெரியவர்வரை, குடும்பத்துடன் பார்க்கும் பொதுஅறிவு நிகழ்ச்சியில், இதுபோன்ற அடுத்தவர் மனைவி, நடிகரை கட்டிப் பிடித்து முத்தம் கொடுப்பதும் நடிகர், நடிகை இருவரும், கணவன் மனைவியாக இல்லாமல், உடலுறவில் ஈடுபடுவோம் என்பதும், நம் நாட்டின் பண்பாட்டையும், கலாசாரத்தையும் சீரழிப்பதுடன், பாலியல் வன்கொடுமைகளை தூண்டுவதாக உள்ளது. நிகழ்ச்சியை ஒளிபரப்பிய, விஜய் டிவி நிர்வாகம் நடிகர்கள் கமல், பிரகாஷ்ராஜ், நடிகை கௌ-தமி மற்றும் நடுத்தர வயது பெண் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## குழந்தை பெறத் தயங்கும் நடிகைகள்

திரையுலகில் கடந்த ஆண்டு பிரசன்னாவை காதல் திருமணம் செய்த சினேகா 'ஹரிதாஸ்' ஓடியதில் அகம் மகிழ்ந்துள்ளார். இவர், சரத்குமார் ஜோடியாக நடிக்கும் 'விடியல்' படத்துக்கு இன்னும் சில நாட்கள் கால்ஷீட் தர வேண்டியிருக்கிறது. இந்நிலையில், மலையாளத்தில் ரிலீசான 'சால்ட் அன்ட் பெப்பர்' படத்தை, "உன் சமையல் அறையில்" என்ற பெயரில் பிரகாஷ்ராஜ் தயாரித்து, இயக்குகிறார்.

இப்படத்திலும் சினேகா ஒப்பந்தமாகியுள்ளார். இதனால், உடனடியாக குழந்தை பெற்றுக்கொள்ளும் எண்ணம் இல்லை என்கிறார். அது போல், பொலிவூட் நாயகன் ரிதேஷ் தேஸ்முக்கை காதலித்து மணந்த ஜெனிலியாவுக்கும் தொடர்ந்து நடிக்கவேண்டிய ஆசை இருப்பதால் தற்போது குழந்தை பெற்றுக்கொள்ளும் எண்ணம் இல்லை என்கிறார்.

தேன் கிண்ணம்

# மேதினத்தைக் கொண்டாடுவோம்





“மே தினம்’ என்று கொண்டாட்டம் இருப்பது என்னவோ, உண்மைதான். ஆனால் நிலைமை ஒன்றும் மாறவில்லை. காலில் காலணி ஒன்றுமில்லாமல் வயதான ஒருவர், பல மூட்டைகள் அடங்கிய ஒரு வண்டியை இழுக்க முடியாமல் மெள்ள போய்க் கொண்டிருந்தார். பின்னால் வந்த வண்டி ஒன்று பீம் பீம் என்று அலறி, அவரை நகரச் சொல்லியது. அவரால் முடியவில்லை.

உடனே காரின் சன்னல் கீழே இறங்கியது. ஒருவன் தலையை நீட்டி “ஏ பெரிசு, முடியலேன்னா வீடடில இருக்க வேண்டியது தானே, ஏன் இப்படி ரோட்டை பிளக் செய்யறே” இதை நேரிலே பார்த்த போது, மனம் மிகவும் நொந்து போனது. இந்தத் தொழிலாளர் தினத்தில் இது போல் வேலை செய்ய முடியாத நிலையில் இருந்து ஆனால் நிர்ப்பந்தத்தினால் உழைக்கும் முதியவர்களுக்கு எப்படியாவது உதவினால் இந்தத் தினக் கொண்டாட்டத்திற்கு ஒரு அர்த்தம் இருக்கும் எனத் தோன்றுகிறது.

தொழிலாளர் தினத்திற்காக ஒரு கவிதை. இது கவிதையா? இல்லை இல்லை, உணர்ச்சிகளின் தொகுப்பு.

## குளிர் நிலவாய்



வாள்முனையை விட
பேனாமுனையின் வலிமை
அதிகம் ஆதலால்
அதன் ஆரோக்கியம்
அழகான சமுதாயத்தின்
ஆணி வேரான இணக்கமே
சந்தர்ப்பம் பார்த்து
சாதிமத பேத
விதை விளைப்பின்
விளை விரிசலின்
பிணக்கமே பூபாளத்தில்
பூபாள ராகம் பூக்க
பூத்த மலர்கள்
ஒரு கொடியினராக
ஒன்றுபட
உடமை கடமை
உரிமையதை
உற்றதாக்கி
வீடு சீரழியாதிருக்க
நாடு சிரிக்க
ஒற்றுமை கயிற்றை
பற்றிப் பிடிப்போம்
சடவாத உலகில்
இனவாதம் வேண்டாம்
என்று போனா முனையே
நீ எடுத்சொல்
எரிமலையும்
குளிர் நிலவாய் மாறும்.

அப்ரார் அப்துல் அஸீஸ்
யாழ்ப்பாணம்.

## தீராத சோகம்!



உழைக்கும் வர்க்கம் வியர்வைச் சிந்த
தனி நிர்வாகம் அவர்களை மேலும் உந்த,
வேலையில் ஒரே கட்டுப்பாடு
தினக் கூலியிலும் குறைபாடு,
அடிமையாக்கி அவர்களை மிரட்ட,
சிக்கல்கள் அங்கு
பின்னிக்கொள்ள ,
போராட்டங்கள் தலைத் தூக்க
இரு வர்க்கத்தின்
உறவு குன்ற,
வந்தது முடிவில் கதவடைப்பு,
ஒரு பெரிய அடி ஏழை வயிற்றில்,
குழந்தைகளோ நடுத் தெருவில்
இத்தகைய நிகழ்ச்சி.

பொருளாதார வீழ்ச்சி
வாழ்வுக்கொரு தாழ்ச்சி
உரிமைகளை நிலை நாட்ட
வன்முறைகள் தலைத் தூக்க
ஒரு பெரிய பூட்டு கதவில் சிரிக்க
மனதிலே அழுகிறான்,
நேர்மை உழைப்பாளி.

வளரும் தொழிற்சாலை
நல்லிணக்கத்தால் உயரும் அது
நல்லுரவுகளால் உயரும் அது
தவறுக்குத் தேவை ஒரு மன்னிப்பு.
மெமோ நோட்டீஸ் புறக்கணிப்பு
இணக்கம் குறைவதில்லை,
இயக்கம் நிற்பதில்லை,
உருவாக்கம் பன்மடங்கு பெருக
ஆர்வம் அங்குப் போட்டி இட
வளர்ச்சிக்கு அன்பு உரம் போட்டு
ஆரோக்கியப் போட்டி வளர்க்க
மனம் நிறைந்தத் தொழிலாளி,
மனம் ஒன்றிச் செயல்பட
உற்பத்தி பெருகும்,
பொருளாதாரம் சீர்ப்படும்
தேவை தொழிலாளிக்குத்
தொழிலில் அக்கறை
வேண்டும் முதலாளிக்கு
அவர்களின் அக்கறை
இரண்டும் நிலைத்தால்
சிறிதளவும் கசப்பல்ல
எல்லாமே இனிப்புத்தான்.

## தற்கால பெண்ணியம்





ஆசைவெறுத்து அறநெறிவாழ்ந்த
சீதை வளர்த்த பெண்மையின் புனித
பாதை வழியே பரிணாம வளர்ச்சியுற்று
கீதை உபதேசப் பெண்ணியம் வாழ்ந்தது

கலாச்சாரச் சீரழிவால் காசாசை மேலோங்க
பலாச் சுளை போல் இனிப்பான
சிலநேர இன்பத்தை
நிலாச் சோறு உண்பது போல்
நடக்கிறாற் வஞ்சியர்கள்
விலா என்று நொறுங்கிடினும்
செய்யாதீர் கலாச்சாரச் சீரழிவை.

தாழை மர நிழலில்
நவீன கண்ணகிகள்
கோவலர் கைகளிலே
வாழைக் குருத்துப் போல்
நெளிகின்றாற் நவீன மாதவிகள்
காளைகள் போல் கோவலர்கள்
சிலம்பேந்தி விற்கின்றாற்
நாளை தெரியவரும் கண்ணகிகள்
உடல்களும் விலைபோனதென்று.

சீதையும் கண்ணகியும் ஆவியாய்
மேல் நின்று சிந்துகிறாற் கண்ணீரை
பேதைகள் எங்கள் பெண்களின்
சீர் கேட்டைக் கண்டு
போதையில் மிதக்கும்
காளைகளைக் கண்டு
சீதை சொன்னாள்
‘தெய்வம் நின்று அறுக்கும்’
என்று.

க.சரவணமுத்து, வெள்ளவத்தை.

## வாழ்வின் யதார்த்தம்



வாழ்க்கை தூவிய
எறியப்பட்ட
விதையா?
வாசித்து முடித்த
சிறுகதையா?

கனத்துப் போன
காலச் சுவடு
வறுமை தாண்டவம்
சில பேர்க்கு...

களித்து
உவகை யுருதல் என்பதும்
வாழ்க்கை தான்
இருந்தாலும்
எல்லோருக்கும் அது
எட்டாக் கனி...

வேம்பு கைப்பது போலும்
வாழ்கையின்
வனப்பு – அது
கையாளத் தெரியாதவன்(ர்)
கதையளப்பு

நேற்றொரு மாற்றம்
இன்று
இனிக்கிறது
நாளை எப்படியோ?
வாழ்க்கையின் எதிர்ப்பார்ப்பு
இரகசியமானது.

அறிவை விதைத்து
ஆழச் சிந்தித்தால்
வாழ்தலும்
அழகான பூந்தோட்டம்
அமுதமாய் இனிக்கும்!

அடுத்தாரைப் போல்
வாழ நினைத்தால்
உ(ள்)ளதையும் இழந்து விட்டு
வெற்று கையை
பிசைந்து கொள்ள
வேண்டிவரும்

இது விதியல்ல
மதியில் ஏற்பட்ட
சேதாரம்!

தான் விரித்த வலையில்
தானே மாட்டிக் கொண்ட
அவல ம்!!

A.R.M.நதார், ஜின்னாநகர்.

கலாபூஷணம்
கே.எஸ்.ஆனந்தன்.

அத்தியாயம் 20

# 36

# சிங்கை மைந்தன்

# அமரசிம்மன்



"பிரபு! அளகக்கோனாருக்கு விசுவாசமான வீரர்கள் சந்தேகத்துக்கிடமாக உள்ளவர்களை மறித்து சோதனை செய்கிறார்கள். அதனால்தான் நான் இப்படி வந்தேன்."

"வழியில் உன்னை யாரும் எதுவும் கேட்கவில்லையா?"

"இல்லைப் பிரபு"

"சரி நீ போகலாம்" என்று கூறியவன் உபதளபதிகள் அனுப்பிய குறிப்புக்களை மீண்டும் ஆராயமுற்பட்டான். அந்தக் கூடாரத்துள் சில விநாடிகள் அமைதி நிலவியது. அமரசிம்மன் தனது உபதளபதிகள் அனுப்பிய குறிப்புக்களை ஆராய்ந்து திட்டங்கள் வகுத்துக் கொண்டிருந்தான். அவனை குழப்பிவிடக் கூடாது என்று அமைதியாக இருந்தான் மாடன்.

"மாடா நாம் நாம் கோட்டை நோக்கி செல்லும்போது இரு பிரிவுகளாகச் செல்வோம். முதலில் சிறுபடைப்பிரிவுடன் நீ செல். உனது படைப்பிரிவு மட்டுமே வருவதாக அளகக்கோனாரின் உளவாளிகள் செய்தி அனுப்புவார்கள். படைநகர ஆரம்பித்துவிட்டால் பின்னால் இடை வெளிவிட்டுவரும் எமது படையினரை எவரும் எதிர்பார்த்திருக்க முடியாது. எமது பொறிக்குள் அளகக்கோனாரும் அவனது அடிவருடிகளும் சிக்கிச்சிதறப் போகிறார்கள்" என்று சிரித்தான்.

" பிரபு! நான் இப்போதே புறப்படட்டுமா?"

"காலையில் புறப்படலாம். இப்பொழுது சற்று ஓய்வு எடுத்துக் கொள்" என்றான்.

"பிரபு" என்று தயங்கி நின்றான் மாடன்.

"என்ன? தயக்கமின்றி கூறு மாடா"

"நான் ஒரு விசயம் தங்களிடம் கேட்க ஆசைப்படுகின்றேன். ஆனால் கேட்கப் பயமாயிருக்கிறது"

"நான் ஏற்கனவே உனக்கு சொல்லியிருக்கிறேன். எதுவாக இருந்தாலும் பயப்படாமல் கேள்"

"இது அரசியல் சம்மந்தப்பட்ட விடயம்"

"அதுதான் சொன்னேன் இல்லையா?, எதுவானாலும் கேள்"

"எங்கள் மன்னருடன் கேரள மன்னர் மட்டுமன்றி விசய நகரப் பேரரசுச் சக்கரவர்த்தியும் நல்லுறவை வளர்த்துக்கொண்டு தேவையான உதவிகளும் செய்வதாக வாக்களித்துள்ளாராம். இந்த விடயம் எனக்கு மகிழ்ச்சியளிக்கின்றது. ஆனால் இது உண்மையா பொய்யா என்பது தங்களுக்குத்தானே தெரியும். அதுதான் கேட்டேன்" என்று தலையைத் தடவிக்கொண்டான்.

"நீ கேட்ட விடயம் அரசியல் சம்மந்தமானதாயினும் வளர்ந்து வரும் அரசுகளுக்கிடையில் நல்ல முறையில் ஆட்சி நடைபெறும். மன்னர்களுக்கிடையில் இராஜதந்திர தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்வதுண்டு. இலங்கையைப் பொறுத்தவரையில் கடற்பிராந்தியத்தில் ஓர் முக்கிய இடத்தில் உள்ளதால் இங்கேயிருக்கும் பலம்மிக்க, நல்லாட்சி நடைபெறும் மன்னர்களுடன் மற்றவர்கள் உறவுகளை வைத்திருப்பது அதிசயமல்ல. இலங்கையில் சிங்கள அரசுகள் சிதறிக்கிடப்பதால் வடக்கிலுள்ள ஆரியச் சக்கரவர்த்திகளின் நல்லாட்சி பற்றி அறிந்து உறவுகளை வைத்துக் கொள்வதில் வியப்பில்லை. இந்த வகையில் இந்தியாவில் விஜயநகரப் பேரரசுடன் நமது மன்னர் இராஜரீக உறவுகளை ஏற்படுத்தியுள்ளார். சக்கரவர்த்திகள் உமக்கு எந்தவிதமான உதவிகளையும் தரத்தயாராகியிருக்கின்றார்." என்றான்.

"பிரபு! நாம் அங்கெல்லாம் செல்லும் சந்தர்ப்பம் கிடைக்குமா?" என்றான்.

"நிச்சயமாகக் கிடைக்கும்."

"பிரபு! கொள்ளைக்காரனாயிருந்தால் இத்தனை பாக்கியங்கள் எனக்குக் கிடைத்திருக்குமா? எல்லாம் தாங்கள் எனக்களித்த பிச்சை" என்ற கூறி அவன் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான்.

"பைத்தியக்காரா! எது எப்போ நடக்க வேண்டுமோ அது அப்போ நடந்தே தீரும். இதற்கு நானோ?, நீயோ? விதிவிலக்கல்ல. எழுந்திரு" என்று அவனை எழுப்பி அணைத்துக் கொண்டான்.

"படிப்பறிவு இல்லாமல் மிருகங்கள்போல் வாழ்ந்துவிட்ட எனக்கு இத்தனை அரசியல் விசயங்களையும் அறியத்தந்தமை தாங்கள்தானே. எனக்கு நல்ல வழிகாட்டியவர் தாங்கள்தானே" என்று கூறிக்கொண்டு இருக்கும் போது கூடாரத்துக்கு வெளியே யாரோ ஓடும் சப்தமும். அடிபட்டு விழும் சப்தமும் கேட்டது. காவலர்கள் ஒருவருக்கொருவர் எச்சரிக்கை கொடுக்கும் குரல்களும் ஒலிக்க அமரசிம்மனும், தொடர்ந்து மாடனும் கூடாரத்துக்கு வெளியே ஓடிவந்தனர்.

******

காலைக் கதிரவனின் வருகைக்குக் கட்டியம் கூறுவது போல, பறவைகளின் பல்வேறு ஒலிகளின் சங்கம வாத்தியங்கள் மலை முகடுகளை மூடியிருந்த பனி மூட்டத்தை விரட்டுவது போன்று சூரியக்கதிர்கள் கீழ்வானில் தங்கப்பட்டங்களாக ஒளிவீசிக் கொண்டிருந்தன. மாடனுடைய வீரர்கள் தங்கள் கூடாரங்களை கழற்றிக் கொண்டு புறப்படுவதற்காக ஓடியாடி வேலைசெய்து கொண்டிருந்தனர். அமரசிம்மனின் கூடாரத்துள் முதல் நாளிரவு பிடிபட்ட அளகக்கோனாரின் வேவுக்காரனிடம் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அமரசிம்மனுக்குப் பாரசீக மொழியிலிருந்து பல மொழிகள் தெரிந்ததினால் நேரடியாகவே தர்மசேன நாயக்கன் என்ற வேவுக்காரனை விசாரணை நடாத்திக் கொண்டிருந்தான். அவனை இரவு துரத்திப் பிடித்த காவல்வீரர்கள் உட்பட மாடன் முதலானோர் அங்கே குழுமியிருந்தனர்.

"உனது எஜமான் விசுவாசத்தைப் பாராட்டும் அதேசமயம் எமது பாசறை எல்லைக்குள் வேவு பார்த்த தவறிற்றாக தண்டனை தரவேண்டிய நிலையில் நானிருக்கின்றேன்." என்று அமரசிம்மன் கூறிய பொழுது தலைகுனிந்து நின்ற அவன் தலைநிமிர்ந்து அமரசிம்மனைப் பார்த்தான்.

"என்ன பார்க்கிறாய்? ஏதாவது கூறவிரும்புகின்றாயா? தயங்காதே கூறு. நியாயம் இருந்தால் உன்னை விடுவிக்க தயாராயிருக்கின்றேன்" என்றான் அமரசிம்மன்.

"தளபதியாரே! தங்களைப் பற்றி எமது தளபதியார் கூறக் கேட்டிருக்கின்றேன். இன்று நேரடியாகவே நான் அந்தக் காட்சியைப் காண்கின்றேன்" என்றான்.

"அப்படி என்னதான் கூறினார் உங்கள் தளபதி அளக்கோனார்" என்று சிரித்துக் கொண்டே கேட்டான்.

(தொடரும்...)


## 3 ஆவது ஆண்டில்...

## தினமுரசு

## நாளிதழ்

தினம்தோறும்
கல்விமுரசு
இணைப்பு

இப்போது நீங்கள் அறிய விரும்பும்
அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

ரூ.10/=
மட்டுமே

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - 'பரமர் சங்கமம்", "மெய்தான் பாருங்கோ"
  "பதிவிறக்கப்பெட்டகம்"

A/L, O/L மற்றும் புலமைப்
பரிசில் மாணவர்களுக்கான
மாதிரி வினாத்தாள்கள் - விடைகளுடன்
தினமும்
சனி, ஞாயிற்றுக்கிழமைகள்
க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான
அலகு ரீதியான குறிப்புகள்,
மாதிரி வினாக்களும்
விடைகளும் வெளியாகின்றன!





# லேடிஸ் ஸ்பெஷல்

# சருமம் உங்கள் அழகு!

**எப்படிக் கண்டுபிடிப்பது?**

காலையில் படுக்கையில் இருந்து எழுந்ததுமே ஒரு டிஷ்யூ பேப்பரால் முகத்தை ஒற்றி எடுக்க வேண்டும். பேப்பர் முழுவதிலும் எண்ணெய் பசை ஒரே சீராகப் படிந்திருந்தால் உங்களுடையது எண்ணெய் பசையுள்ள சருமம்.

கொஞ்சம்கூட எண்ணெய் பசையே இல்லா விட்டால் அது வறண்ட சருமம்.

டிஷ்யூ பேப்பரில் ஒரு பகுதி மட்டும் எண்ணெய் படிந்து, அதாவது, நெற்றி, மூக்கு, தாடைப் பகுதிகளில் மட்டும் எண்ணெய் பசையும், கன்னப் பகுதி வறண்டும் இருந்தால், அது காம்பினேஷன் சருமம். அதாவது, எண்ணெய் பசையும், வறட்சியும் கொண்ட சருமம்.

சிறிது எண்ணெய் பசையுடன், மிகவும் மென்மை யாக, அதாவது, லேசாகக் கிள்ளினாலே தடம் பதிந்து, சுருக்கங்கள் விழும் சருமம் உணர்ச்சியும் மென்மையும்கொண்ட சென்சிட்டிவ் சருமம்.

முகம் முழுக்க மிக லேசான எண்ணெய் பசை தெரிந்தால் அது சாதாரண சருமம்.

**எப்படிப் பராமரிப்பது?**

**சாதாரண சருமம்:** சாதாரண சருமத்துக்கு பெரிய கவனிப்போ, போஷாக்கோ அவசியமில்லை. சாதாரண கவனிப்பே போதுமானது. பாலாடை கொண்டு லேசாக மசாஜ் செய்து, 15 நிமிடங்கள் கழித்து முகம் கழுவினாலே முகம் பளபளப்பாக இருக்கும். பால் அல்லது ரோஸ் வோட்டரை பஞ்சில் நனைத்து, முகத்தில் தடவி, 20 நிமிடங்கள் கழித்துக் கழுவினால் முகம் ப்ரெஷ்ஷாக இருக்கும். வெள்ளரிச்சாற்றை முகத்தில் தேய்த்து அரை மணி நேரம் கழித்துக் கழுவினால், முகம் பளீரென இருக்கும்.

**எண்ணெய் பசையுள்ள சருமம்**

இந்த வகை சருமத்தில் விரைவில் அழுக்கும், தூசியும் சேர்ந்துவிடும். அதிக எண்ணெய் பசை காரணமாக இந்த சருமம் உள்ளவர்களுக்கு முகப்பருக்கள் வரும். அதனால் அடிக்கடி முகத்தைக் கழுவி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். கொழுப்புச்சத்து நிறைந்த உணவு களைத் தவிர்த்து, பழங்கள், பச்சைக் காய்கறி களை நிறைய சாப்பிடவேண்டும். சம அளவு தேன் மற்றும் ஒரேஞ்சு சாறு கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடங்கள் கழித்துக் கழுவினால், எண்ணெய் பசை கட்டுப்படும். வாழைப்பழத்தில் சில துளிகள் எலுமிச்சை சாறு கலந்து, மசித்து, முகத்தில் பேக் மாதிரி போட்டுக் கழுவலாம். பப்பாளிப் பழத்தை மசித்து, முகத்தில் தடவி 20 நிமிடங்கள் வைத்திருந்து கழுவிட, அதிக எண்ணெய் சுரப்பும் கட்டுப்படும். சருமமும் ஊட்டம் பெறும்.

**வறண்ட சருமம்**

பார்ப்பதற்கு பொலிவே இல்லாமலிருக் கும். சருமத் துவாரங்களில் போதிய எண்ணெய் பசை இல்லாததால் சுருக்கங் களுடன் காணப்படும். இத்தகைய சருமம் உள்ளவர்கள், இரசாயனப் பொருள்கள், சூரிய வெளிச்சம் போன்றவற்றில் இருந்து



விலகியே இருக்க வேண்டும். சோப் உபயோகிக்கக் கூடாது. சோப்பானது எண்ணெய் பசையைக் கட்டுப் படுத்திவிடுவதால் சருமம் இன்னும் வறட்சி அடையும். நிறைய தண்ணீர், அடிக்கடி பழச்சாறு குடிக்க வேண்டியது அவசியம். பயத்தம் மாவுடன், சிறிது கடலை மா கலந்து சோப்புக்கு பதில் உபயோகிக்கலாம்.

தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண் ணெயுடன் சிறிது எலுமிச்சை சாறு கலந்து, முகத்துக்கு மென்மையாக மசாஜ் செய்து வந்தால் வறட்சி நீங்கி, இறந்த செல்களும் நீங்கி, முகம் பொலிவடையும். தேன், முட்டைக் கோஸ் சாறு ஆகியவற்றை சம அளவில் கலந்து, முகம், கழுத்தில் தடவி, 15 நிமிடங்கள் ஊறிக் கழுவினால் வறட்சி நீங்கும். அரைத்த தேங்காய் விழுது 2 மேசைக்கரண்டி, தேன் 1 மேசைக் கரண்டி இரண்டையும் கலந்து, முகத்தில் தடவி, கால் மணி நேரம் கழித்துக் கழுவினால், சருமத்தின் எண்ணெய் பசை சமநிலைப்படுத்தப்பட்டு, சருமம் மிருதுவாக, பளபளப்பாக மாறும்.

# மாதவிலக்கை தள்ளிப்போட்டால் உடல்நலம் பாதிக்கும்!



'மாதந்தோறும் ஏற்படும் மாதவிலக்கு பிரச்சினையை, சில நேரத்தில் செயற்கையாக தள்ளிப்போட நேரிடுகிறது. மாதவலிக்கு மாதந்தோறும் நிகழும் இயற்கையான நிகழ்வு. அதை வலுக்கட்டாயமாக தடுத்து நிறுத்தும் முயற்சியில் ஈடுபடுவது ஆபத்தானது. இப் போது மாதவிடாயை தள்ளிப் போட நினைப்பவர்கள் மருத்துவர்களின் ஆலோசனைகளை பெறாமல் மாத்திரை களின் பெயரைச் சொல்லி, மருந்தகங் களில் பெற்று பயன்படுத்து கின்றனர். இது உடலில் பெரியளவில் பாதிப்பை உண்டாக்கும். டாக்டரின் அறிவுரை இல்லாமல் அது போன்ற மாத்திரைகளை கட்டாயம் சாப்பிடக்கூடாது.

மாதவிலக்கு தள்ளிப்போக மாத்திரை எடுப்பவர்கள் முதலில் கர்ப்பப்பையை ஸ்கான் செய்துகொள்ள வேண்டியது அவசியம். யூட்ரசின் நிலை, அதில் ஏதாவது பிரச்சினை இருக்கிறதா, வயிற்று வலி, அல்சர், மாதவிடாய் கோளாறு, கர்ப்பப்பை கேன்சர் பாதிப்பு என எது வேண்டுமானாலும் தாக்கி இருக்கலாம். அது குறித்து தெரியாமல் மாத்திரை சாப்பிட்டால் அந்த பாதிப்புகள் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

டாக்டரின் அறிவுரை இல்லாமல் மாதவிலக்கு மாத்திரைகளை உட்கொள்வதால் உடல் எடை கூடும். வயிற்று புரட்டல், வாந்தி, வாய்க்கசப்பு உள்ளிட்ட பல பாதிப்புகள் ஏற்படும். சிலருக்கு மைக்ரேன் எனப்படும் ஒற்றைத்தலைவலி வர வாய்ப்புள்ளது.

அடிக்கடி மாத்திரை சாப்பிட்டு மாதவிலக்கை தள்ளிப்போடும்போது, அதன் மாதந்திர சுழற்சியும் மாறுபடுகிறது. ஒரு முறை தள்ளிப்போனால் அடுத்த முறை சரியாகிவிடும் என நினைக்கக் கூடாது. அவ்வாறு மாதவிலக்கு முறை தள்ளிப்போகும்போது, அடுத்த மாதவிடாய் சுழற்சியை உடல் ஏற்றுக் கொள்ளாமல் போகலாம். அப்போது இரத்தப்போக்கு அதிகரிக்கும். உடலில் உஷ்ணமும் அதிகமாகும்.

பொதுவாக வலி நிவாரணிக்கும், வைரஸ் பாதிப்பு உள்ளிட்டவைக்கும் மாத்திரைகளை சேர்த்தே தயாரிக் கும் வழக்கம் உள்ளது. அதனால் இஷ்டப்படி மாத்திரை களை பயன்படுத்துவது உடலை பாதிக்கும். சிறு பாதிப்புக்கூட ஏற்படாத அளவுக்கு பெண்கள் உடலை பாதுகாப்பது அவசியம் என்கின்றனர் மருத்துவர்கள்.

## உங்களுடன் கொஞ்ச நேரம்...

# வீட்டுக்கு வீடு வாசற்படி; இதுவும் பிரச்சினையா?



✷ இங்கே நான் எழுதும் பிரச்சினையைப் பற்றி என் நெருங்கிய தோழிகள், உறவினர்கள் எல்லோரிடமும் பலமுறை பேசியிருக்கிறேன். யாருக்குமே அதன் தீவிரம் தெரியவில்லை. "வீட்டுக்கு வீடு வாசற்படி.. இதெல்லாம் ஒரு பிரச்சனையா" என்றுதான் கேட்கிறார்களே தவிர, யாரும் எனக்கான தீர்வைச் சொல்ல வில்லை.

இதே நிலைமை நீடித்தால் சீக்கிரமே எனக்குப் பைத்தியம் பிடித்தாலும் ஆச்சரியமில்லை. கடைசி முயற்சியாக உங்களிடம் இந்தப் பிரச்சினையைப் பகிர்ந்துகொள்கிறேன். எனக்குத் திருமணமாகி 6 வருடங்களாகின்றன. பெற்றோர் பார்த்து வைத்த திருமணம்தான். திருமணமாகி அதிகபட்சமாக ஒரு வருடம் நான் சந்தோஷமாக இருந்திருந்தால் பெரியது.

அடுத்த வருடத்திலிருந்து, எங்களுக்குள் எப்போதும், எதற்கெடுத் தாலும் சண்டையும், சச்சரவும்தான். எங்களுக்கு இரண்டு குழந்தைகள். என் கணவருக்கு நான் என்ன சொன்னாலும், தவறாகவே தெரிகிறது. எந்த விஷயத்துக்கும் நேரடியான அர்த்தமே எடுத்துக் கொள்ளமாட்டார். தவறாகப் புரிந்துகொண்டு, வார்த்தைக்கு வார்த்தை குற்றம் கண்டு பிடித்துக் கொண்டு, சண்டைக்கு நிற்பார்.

எனக்கு என் பெற்றோர் மிகுந்த சிரமப்பட்டு திருமணம் செய்து வைத்தார்கள். அவர்களது மனம் நோகக் கூடாது என்பதற்காகவே நானும், என் கணவரின் நடவடிக்கைகள் அனைத்தையும் சகித்துக் கொண்டு வாழப் பழகினேன். நானும் அவருடன் சரிக்கு சரி சண்டைக்கு நின்றால், குடும்பம் குலைந்துவிடும், என் குழந்தைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும் என்கிற ஒரே காரணத்துக்காக எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டேன். எனக்கும் என் கணவர், குழந்தைகளுடன் அன்பாக, அந்நியோந்நியமாக, சந்தோஷமாக வாழத்தான் ஆசை.

✷ தோழி எல்லா தம்பதியருக்குள்ளும் சண்டைகளும், மனவேறு- பாடுகளும்

வரும். இருவரும் வேறுவேறு சூழலில் வளர்ந்தவர்கள். இருவரின் உலகமும் வேறு வேறு. தொலைக்காட்சியில் ஒருவர் கருத்தை மற்றவர் எதிர்க்கும் பட்டிமன்றங்களையும், விவாதங்களையும் ரசித்துப் பார்க்கிற நமது மனோநிலையின் பின்னணி இதுதான். அதுவே வீட்டுக்குள் வரும்போது நம்மால் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை. என்ன காரணம்?

தன்னை மாதிரியே அடுத்தவரின் பார்வையும் இருக்க வேண்டும் என நினைப்பதைத் தவிர்க்க இது முக்கியம். உங்களுக்கு என்ன தேவை என்பதை முதலில் தீர்மானியுங்கள். நீங்கள் சொல்வது சரி என்பதை நிலைநாட்டுவதா அல்லது பாதுகாப்பாக இருப்பதா அல்லது சந்தோஷ மான வாழ்க்கையா..? எது உங்கள் நோக்கம் என முடிவு செய்யுங்கள்.

நீங்கள் சொல்வதுதான் சரி என்பதை நிலைநாட்டுவதும், பாதுகாப் பாக இருப்பதும்தான் உங்கள் வாழ்க்கையின் குறிக்கோள் என்றால், அதை நோக்கிய நடவடிக்கைகளும், செயல்களும் நிச்சயம் அதை உங்களுக்கு சாத்தியப்படுத்தும். ஆனால், சுமூகமான உறவு என்பதே இருக்காது. மாறாக, சந்தோஷமான வாழ்க்கைதான் இலட்சியம் என்றால், உங்கள் தரப்பிலிருந்து இன்னொரு படி நீங்கள் முன்னோக்கி வைக்க வேண்டும்.

"நான் என் திருமண பந்தத்தின் அடிப்படையான அன்பைக் குலைக் கிற மாதிரி நடக்கும் எந்தச் செயலுக்கும் ரியாக்ட் செய்யமாட்டேன்" என தினம் பல முறை சொல்லிக் கொள்ளுங்கள். உங்கள் கணவர் உங்களிடம் எரிந்து விழும்போதும், கோபப்படும்போதும், அவரிடம் பேசுவதை நிறுத்துங்கள். அன்பாகப் பேசக்கூடிய உங்கள் அம்மா, அப்பா, குழந்தைகள் என யாருடனாவது நேரம் செலவழியுங்கள். கோபம் அடங்கிய பிறகு கணவரிடம் பேசுங்கள். அன்பு ஒன்றே உங்கள் பாணி என்பதில் தெளிவாக இருங்கள்.

இத்தகைய நேர்மறை மனப்பான்மையை சிறிது சிறிதாக நீங்கள் வளர்த்துக் கொண்டால், இப்போது நீங்கள் குற்றச்சாட்டுக்களாக எழுதியிருக்கும் அத்தனை விஷயங்களும் காணாமல் போகும். எப்படிப்பட்ட சூழலையும் பக்குவமாக, மன முதிர்ச்சியுடன் கையாளும் குணம் உங்களுக்கு கைகூடும்.

உங்கள் அணுகுமுறையைக் கண்டு உங்கள் கணவரும் நிச்சயம் மாற ஆரம்பிப்பார்.

# பிரெட் பகோடா

| | |
|---|---|
| பாண் - வெட்டிய துண்டுகள் | - 6 |
| நறுக்கிய கொத்துமல்லித்தழை | - கால் கப் |
| பெரிய வெங்காயம் | - 2 |
| பச்சை மிளகாய் | - 3 |
| இஞ்சி | - சிறிய துண்டு |
| சோம்பு | - கால் கரண்டி |
| உப்பு | - சிறிதளவு |
| எண்ணெய் | - தேவையான அளவு |



**செய்முறை:**

வெங்காயத்தை பொடியாக நறுக்கி கால் கரண்டி உப்பு சேர்த்து கலந்து 10 நிமிடங்கள் ஊறவைக்கவும். பின்னர் தண்ணீரை பிழிந்து அகலமான பாத்திரத்தில் பே- ாடவும். இதனுடன் பாணின் ஓரங்களை நீக்கி சேர்க்கவும். பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய், கொத்துமல்லித்தழை, துருவிய இஞ்சி, சோம்பு, சிறிதளவு, உப்பு, தண்ணீர் சேர்த்து கெட்டியாக பிசையவும். பின்னர் சூடான எண்ணெயில் கிள்ளிப்போட்டு பொரித்து, தக்காளி சோஸுடன் பரிமாறவும்.

## பரிசு 1000/- ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-366

கேள்வி: மாதவிலக்கு மாத்திரைகளை உட்கொள்வதால் ஏற்படும் பாதிப்புகள் எவை?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 14.05.2013

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 366
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 364 இற்கான விடை :- அமெலியா
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- வ.ஜெயபிரதா, 10ம் வாய்க்கால், உருத்திரபுரம், கிளிநொச்சி.

366

பெயர் : ..........
முகவரி : ..........
..........
தே.அ. அட்டை இல : ..........
விடை : ..........
..........
கையொப்பம் : ..........

இப்போரில் இந்திய விமானப்படை பயன்படுத்தப்படவே இல்லை.

1962 ஒக்டோபர் 20 அன்று தொடங்கிய தாக்குதலை சீனா தன்னிச்சையாகவே நவம்பர் 21 அன்று நிறுத்திக்கொண்டது. தான் ஊடுருவியிருந்த பகுதிகளில் இருந்தும் பின்வாங்கி மக்மோஹன் எல்லைக்கு அப்பால் திரும்பிச் சென்றது. அக்சாய் சின் பகுதி மட்டும் இன்றுவரை சீனாவசம் இருக்கிறது. அருணாசலப் பிரதேசத்திலும் தொடர்ந்து உரிமை கோரிவருகிறது சீனா. இப்பொழுதாவது விழித்துக்கொண்டு எல்லைப் பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கவேண்டும் என்றும் இல்லையென்றால், எதிர்காலத்தில் இன்னொரு மோதல் நிகழலாம் என்றும் இராணுவ நிபுணர்கள் கருதுகிறார்கள்.

## எல்லைப் பிரச்சினை தேசிய அவமானமாக

இந்தியா இப்போரை தேசிய அவமானமாக பார்த்தாலும், சீனாவில் இது ஒரு எல்லைச் சண்டையாகத்தான் பார்க்கப்படுகிறது. அந்தப் போரில் சீனாவின் பதில் தாக்குதலுக்கு அஞ்சி இந்தியா விமானப் படையைக்கூட பயன்படுத்தவில்லை. தற்போதைய நிலையில் இந்தியப் படைகள் பெருமளவு பலப்படுத்தப்பட்டுவிட்டன. எனவே மீண்டும் மோசமாக இராணுவத் தோல்வி நடக்க வாய்ப்பில்லை என்று சிலர் வாதிடுகின்றனர்.

அதேநேரம் சீனப் பொருளாதாரத்தின் அளவு இந்தியாவைவிட கிட்டத்தட்ட நான்கு மடங்கு பெரியது. சீனா தனது இராணுவச் செலவினங்களை கடந்த சில ஆண்டு களாக கணிசமாக அதிகரித்துவருகிறது. இந்நிலையில் எல்லைப் பிரச்சினையை இராஜதந்திர ரீதியாக தீர்க்கவேண்டும் என்ற கருத்தும் நிலவுகிறது.

இந்தியாவும் சீனாவும் தமது எல்லைப் பிரச்சினையை தீர்க்கப் பல சுற்று பேச்சுக்களை நடத்தினர். இரு நாடுகளும் இப்பிரச்சினையில் விட்டுக் கொடுக்கவேண்டும் ஆனால் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளின் உரிமையை மாற்றத் தேவையில்லை என்று இருநாடுகளும் 90களில் ஒரு ஒப்பந்தத்தை எட்டின. ஆனால் இதிலிருந்து சீனா பின்வாங்கிவிட்டது. திபெத்திய புத்த மதத்தினரின் மிக முக்கியமான மடாலயம் அமைந்துள்ள தவாங் பகுதியை தனக்குத் தர வேண்டும் என்று சீனா கூறுகிறது.

சீனா கேட்கும் தவாங் பகுதி பிரம்புத்திரா ஆற்றுக்கு வடக்கே அமைந்துள்ளது. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இப்பகுதியை கொடுக்க இந்தியா முன்வராது என்று தெரிந்தும், பேச்சுவார்த்தைகளின்போது பேரம் பேசுவதற்காக இக்கோரிக்கையை சீனா முன்வைப்பதாகக் கருதப்படுகிறது. இந்தியாவும் சீனாவும் தற்போது தத்தமது கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளை ஒட்டி எல்லைக் கோட்டை தீர்மானிக்க வேண்டும் என்ற யோசனையை மூன்று முறை சீனா முன்வைத்தது. ஆனால் அகாய்ச்சின் பகுதியை திரும்பப் பெறவேண்டும் என்று இந்திய நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த யோசனையை இந்தியாவால் ஏற்கமுடியவில்லை.

## இந்திய இராணுவ எழுச்சி

இந்திய இராணுவ எழுச்சியை நான்கு தலைப்புகளின் கீழ் ஆய்வு செய்யமுடியும்.

1) அதன் முதலாவது கட்டம் 1947-1962 காலப் பகுதிக்குள் அடங்குகிறது. 1962ல இந்தியா சீனாவுடனான எல்லைப் போரைத் தொடங்கி அதில் தோல்வியைச் சந்தித்தது.

2) பாதுகாப்புத் துறைக்கான செலவுகளை மட்டுப்படுத்துவதில் ஈடுபட்ட இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு (பதவிக் காலம் 1947-1964) நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் கூடுதல் கவனஞ் செலுத்தினார். பஞ்சசீலக் கொள்கைக்கு இராணுவ மேம்பாட்டுச் செலவுகள் முரணானவை என்று அவர் நம்பினார்.

3) இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் வெளிவிவகாரக் கொள்கை முன்னெடுப்பு பாகிஸ்தான் தொடர்பானது. இரு நாடுகளுக்கு இடையிலான முறுகல் நிலைக்குக் காஷ்மீர் பிரச்சினை முக்கிய காரணம். 1947-48, 1965, 1971 வருடங்களில் இருநாடுகளும் மூன்று தடவை போரிட்டுள்ளன.

4) 1950ல் மாவோ தலைமையிலான செஞ்சீனா திபெத்தைத் தனது நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது. இது இமாலய வடக்கெல்லையின் முக்கியத்துவத்தை இந்திய அரசிற்கு உணர்த்தியது.

பிரிட்டிஸ் காலனித்துவ ஆட்சியாளர்கள் வருங்கால இந்தியாவுக்கு ஆற்றிய மிகப் பெரிய உதவி சீனாவை இமாலய எல்லைக்கு அப்பால் த்ள்ளிவைத்ததாகும். 1950க்குப் பிறகு அது சாத்தியமற்றதாகியது.




1962ம் ஆண்டுப் போரைத் தொடக்கிய நேரு சீனாவைப் பின்னுக்குத் தள்ள முயற்சி செய்தார். அது எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தியது. இமாலய எல்லையை நோக்கி மேலும் நகர்ந்த சீனா எல்லையில் சீன இராணுவத்தை நிறுத்தத் தொடங்கியது.

## பாகிஸ்தானும் சீனாவும் பங்காளிகளாகிவிட்டனர்

இது 1962ம் ஆண்டுப்போரின் நேரடி விளைவு. இந்தியாவை ஒரு இடுக்கித் தாக்குதல் வியூகத்திற்குள் நிரந்தரமாக உட்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் தொடர்பான சீன வெளியுறவுக் கொள்கை இரு இலக்குகளைக் கொண்டது. பாகிஸ்தானின் வலுவை உயர்த்துவது. அதன்மூலம் இந்தியாவுக்கு எதிரான வலுவான நாட்டைக் கட்டியெழுப்புவது. இராணுவ மொழியில் இந்தியாவின் உயிர் நிலை (Achilles heel) பாகிஸ்தான் என்பது வெளிப்படை.

சீனாவின் இந்தத் தந்திரோபாயம் இந்தியாவைப் பலவீனப்படுத்துகிறது. ஒப்பீட்டில் பிரமாண்டமான இந்தியா சிறிய நாடான பாகிஸ்தானின் நிரந்தர எதிரியாகவும் போட்டி நாடாகவும் இடம்பெறுகிறது.

1962ம் ஆண்டுத் தோல்வி இந்தியாவின் கண்ணைத் திறந்தது. இராணுவ வல்லரசாக வேண்டும் என்ற அவாவே அதற்குத் தோன்றியது. உடனடியாக மலைப் பிரதேசத்தில் போரிடும் பத்து டிவிசன்களை மேலதிகமாக அது தனது படையணியில் இணைத்தது.

பாகிஸ்தானுடனும் சீனாவுடனும் சமகாலத்தில் போரிடும் வலுவுள்ள இராணுவக் கட்டமைப்பைப் பெரும் பொருட்செலவில் இந்தியா 1962 இற்குப் பிறகு படிப்படியாகக் கட்டியெழுப்பத் தொடங்கியது.

அமெரிக்கா, பிரித்தானியா, சோவியத் ஒன்றியம், ஜேர்மனி, கனடா, யூகோசிலாவியா ஆகிய நாடுகளிடமிருந்து பெருமளவு ஆயுதங்களை இந்தியா கொள்வனவு செய்தது. 1964இல் முதலாவது ஐந்து வருடப் பாதுகாப்புத் திட்டத்தை (first five year defence plan) இந்தியா நடைமுறைப்படுத்தியது.

ஆயுதத் தயாரிப்புத் தொழில்நுட்பத்தைத் தரும்படி அமெரிக்காவிடம் இந்தியாவிடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டபோது இந்தியா சோவியத் ஒன்றியத்தின் உதவியை நாடியது. இதனால் இருபக்க நெருக்க உறவு ஏற்பட்டது. 1971இல் அமைதிக்கும் நட்புக்குமான இந்தியா சோவியத் ஒன்றிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. (The indo -soviet treaty of peace and friendship 1971)

1964 இல் சீனா தனது முதலாவது அணுகுண்டைப் பரீட்சார்த்தமாக வெடித்தது. இது இந்திய இராணுவத் திட்டமிடலில் பாதிப்பை ஏற்படுத்தியது. நேரு காலத்தில் 1951-1963 இல் இந்தியா விண்வெளி மற்றும் அணுசக்தி ஆராய்ச்சியில் ஈடுபட்டாலும் 1964 இன் பின்னர் இத்துறைகளில் இந்தியா உத்வேகத்துடன் ஈடுபட்டது.

1969ல் இஸ்ரோ (Isro)- இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (Indian space research organization) உருவாக்கப்பட்டது. அணுசக்தித் திணைக்களத்தின் கீழ் இஸ்ரோ இயங்கத் தொடங்கியது.

1970ல் செய்மதித் தொழில் நுட்பத் தில் நிறைவுகாணும் பத்து வருடத் திட்டத்தை இந்தியா வகுத்தது. 1971இல் இந்தியா நடத்திய போரில் பாகிஸ்தானின் கிழக்கு அலகு, பங்களாதேசாக உருவாக்கப்பட்டது. இந்தப் போரின் பிறகு இந்தியப் படைத்துறை மேன்மை உறுதி செய்யப்பட்டது.

1972ல் இந்தியா எதிர்பாராத அமெரிக்கா சீனா நட்புறவு அதிபர் நிக்சனின் சீனப் பயணத்தோடு தொடங்கியது. சீனா அணு குண்டுத் தாக்குதல் நடத்தினால் அதற்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை இனிமேலும் அமெரிக்கா தராது என்று இந்தியா அதன்பின் உணர்ந்தது.

1971ம் ஆண்டிலான வங்கதேசப் போரில் இந்தியாமீது அழுத்தம் பிரயோகிப்பதற்காக அமெரிக்கா தனது விமானம் தாங்கியை வங்காள விரிகுடாவுக்குள் அனுப்பியதையும் இந்தியா கணக்கில் எடுத்தது. இராணுவ பலத்தில் தன்னிறைவு காணுவதில் இந்தியா மேலதிக ஆர்வம் காட்டத் தொடங்கியது.

ஆசிய விவகாரங்களில் வெளிநாடுகளின் நுழைவைத் தடுக்கும் நேருவின் கொள்கை ஒருபோதும் வெற்றிபெறவில்லை. எழுபதுகளில் இந்துமா கடல் நீரில் சோவியத் ஒன்றிய, அமெரிக்கக் கடற்படைகளின் நடமாட்டம் கூடுதலாகக் காணப்பட்டது. டீகோ கார்சியா தீவுகளில் (diego Garcia) அமெரிக்கக் கடற்படைத் தளம் நிரந்தரமாகக்கட்டப்பட்டது.

உலகின் எந்தக் கடற்பரப்பிற்குள்ளும் சஞ்சரிக்கும் திறன் வாய்ந்த நீலநீர் (Blue water) கடற்படையை உருவாக்குவதில் இந்தியா ஈடுபட்டு வெற்றி கண்டது. கிழக்கு, மேற்கு இந்திய கடற்பிராந்தியங்களுக்கான தனித்தனி தலைமையகங்களைக் கொண்ட வலுவான கடற்படை உருவாக்கப்பட்டது.

விசாகபட்டினம், கொச்சின், மும்பாய், அந்தமானின் பிளேயர் ஆகிய துறைமுகங்கள் விரிவுபடுத்தப்பட்டன. கடற்படைக்கான விமான அணியும் உருவாக்கப்பட்டது. மத்திய கிழக்கு தொடக்கம் தென் கிழக்கு ஆசியா வரையான கடற்பரப்பில் தனது வலு வெளிக்காட்டலைச் (force projection) செய்யும்நிலையை இந்தியா அடைந்து விட்டது. ஆனால் இந்து மாகடலில் ஏகபோக உரித்தைக் காட்ட இந்தியாவால் முடியவில்லை.

சீனாவும் அமெரிக்காவும் தமது கடற் பிரசன்னத்தால் இந்தியாவின் கனவை பொய்யாக்கியுள்ளன. இந்தியா விடுதலை பெற முன்பே அயல்நாடுகளை, குறிப்பாக இலங்கை, பர்மா போன்றவற்றைக் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் திட்டத்தை இந்தியத் தலைவர்கள் உருவாக்கினார்கள்.

இந்தியாவின் பல்துறை இராணுவ வளர்ச்சி தெற்கு ஆசியாவின் சிறிய நாடுகளை அச்சுறுத்துகின்றன. இந்திய அச்சுறுத்தலை மட்டுப்படுத்துவதற்காக இவை சீனாவின் நட்புறவைத் தேடிப் பெறுகின்றன.

## இந்திய இராஜதந்திரம் தளம்பல் நிலையில்...

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி உன்னத நிலையில் இருந்தாலும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த முடியாததால் திட்டமிடல் உறுதியற்றதாக இருக்கிறது. காஷ்மீர் பிரச்சினையை சுமூகமாகத் தீர்க்க முடியாமல் இந்திய இராஜதந்திரம் தளம்பல்நிலையில் இருக்கிறது.

காஷ்மீர் பிரச்சினைக்கு இந்தியா இராணுவத் தீர்வை முன்வைக்கிறது. சுதந்திரம் பெற்ற நாட்தொட்டு இன்றுவரை தனது குடிமக்களுக்கு எதிராக இராணுவ மிரட்டல்களையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் ஒரே நாடு இந்தியா மட்டும்தான்.

தனது தார்மீக மேலாதிக்கத்தை பிரதமர் நேரு காலத்தில் அது இழந்து விட்டது. அரசியல் பிரச்சினைகளுக்கு இராணுவத் தீர்வு காணும் இந்திய உபாயம் சிந்தனை வரட்சியையும் காத்திருக்கும் செல்வாக்குச் சரிவையும் எடுத்துக்காட்டுகின்றன.

சீனாவை இந்தியக் கடற்பரப்பில் இருந்தும் ஆசிய நாடுகளுடனான நெருக்கத்தில் இருந்தும் வெளியேற்றும் இந்திய இலட்சியம் படுதோல்விகளைச் சந்தித்துள்ளன. அக்சாய் சின் உட்பட பெருமளவு நிலப்பரப்பைச் சீனாவிடம் இந்தியா இழந்துவிட்டது. அவற்றை மீட்கும் வலு அதனிடம் இல்லை. தனது நாட்டின் ஒரு பகுதியை அயல் நாட்டுக்குப் பூமி தானம் செய்யும் நாடு இந்தியாதான்.

சர்வதேச விவகாரங்களிலும் இந்தியாவால் காத்திரமான பங்களிப்புச் செய்ய முடியவில்லை. ஐ.நா. போன்ற அரங்குகளில் இந்தியாவின் தாக்கம் பூச்சியம் எனலாம். தலைமை தாங்கும் தகுதியற்ற அதனால் பிறநாடுகளு டன் கூட்டுச்சேர்ந்து வாக்களிக்க மாத்திரம் முடிகின்றது. உற்ற நட்பு நாடு இல்லாத தனித்தியங்கும் நாடு என்பது வெளிப்படை.

இந்திய நாட்டின் சாதிப் பிரச்சினை, நதி நீர்ப் பிரச்சினை, தலைவிரித்தாடும் ஊழல், குடும்ப ஆட்சி, மக்களுக்கிடையில் சமச்சீரின்மை, பொருளாதார ஏற்றத் தாழ்வு, நிலமற்றோர் பிரச்சினை, மாவோயிஸ்ட் புரட்சியின் அச்சுறுத்தல் போன்ற இன்னோரன்ன அவலங்கள் சரிவையும் வீழ்ச்சியையும் உறுதி செய்கின்றன.

ஒரு சிறிய துவாரம் பெரிய கப்பலை மூழ்கடிக்கும் என்று சொல்வார்கள். பல துவாரங்கள் உள்ள பாரிய இந்தியக் கப்பல் மூழ்காமல் இருப்பதற்கு இந்திய இராஜதந்திரிகளும் இந்திய அரசியல், பொருளாதார, இராணுவ நிபுணர்களும் எத்தகைய தொடர் உபாயங்களை வகுக்கப்போகிறார்கள் என்பது பெரும் புதிராகும்.

சாணக்கியம் நிறைந்த இந்திய மேதாவிகள் கூறுகிறார்கள்- எவ்வளவுதான் இந்தியா போர் வலிமையுடன் வளர்ந்திருந்தாலும் இந்திய-சீன எல்லைப் பிரச்சினைகளை தீர்க்க ஒரே வழி பேச்சுவார்த்தைகள் மட்டுமே.

# போருக்குப் பின் புல(ன்)ம் பெயர்ந்தவர்களின் அரசியல்!

**புலிகளின் வெற்றிகளின்போது விசிலடித்து மகிழ்ந்து யுத்தத்திற்காக பணம் கொடுத்தவர்கள், புலிகள் சரியில்லை, அவர்களிடம் ஜனநாயகம் இல்லை. அவர்களின் போராட்டம் சரியில்லை என்றவர்கள், வெளி நாட்டிற்கு வந்தாச்சு, அங்கை இருப்பவர்கள் எக்கேடு கெட்டால் என்ன? எங்களிற்கு புலியும் வேண்டாம் அரசாங்கமும் வேண்டாம் என்று ஒதுங்கி இருந்தவர்கள் என்று அனைவரிற்குமே, இலங்கைத் தீவில் வசிக்கும் எங்கள் உறவுகளின் இன்றைய இந்த நிலைமைக்கு காரணம். புலம்பெயர்ந்து வாழும் அனைத்து தமிழர்களும் ஏதோ வழியில் காரணம். இதனை யாரும் தட்டிக் கழிக்கவோ, மறுக்கவோ முடியாது. எனவே நாங்கள் இங்கு எம்மை பிரதிபலிக்கும் அனைத்து தமிழர் தரப்பையும் தமிழ்பேசும் முஸ்லிம்களையும் உள்ளடக்கியதொரு குழு அமைக்கப்பட்டு இலங்கை அரசோடு பேச்சுவார்த்தைகளை தொடங்கவேண்டும். அந்த பேச்சு வார்த்தைகள் ஊடாக சிறுபான்மை யினரின் பாதுகாப்பு உறுதிப்படுத்துவ தோடு அவர்களிற்கு காவல்துறை மற்றும் காணி அதிகாரங்களுடன் கூடியதொரு நிருவாக சபை ஆட்சி அமைப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதன்மூலமாக விழுந்து போய் உள்ள எமது மக்களை தூக்கி நிறுத்தமுடியும். அந்த மண்ணில் வாழ்கின்ற மக்கள் தாங்களாக நிமிர்ந்து நின்ற பின்னர் தங்களிற்கு என்ன தேவையோ அதனை அவர்களே தீர்மானிப்பார்கள்.**

(சென்ற வார 7ஆம் பக்கத் தொடர்ச்சி..)

**சில** நேரங்களில் நீங்களும் பார்த்திருக் கலாம். எனக்கு பார்க்கக் கிடைத்தது. அதைப் பார்த்த போது அவர்கள் ஒவ்வொருவரின் கதையை யும் கேட்டால் இந்த தமிழினத்திலை பிறந்தமே என்று வெட்கமாக இருந்தது. ஒருவர் சொல்கிறார் நான் பல வருடங்கள் போராளியாக இருந்தவள். இரவுபகலாக காடுகள் எல்லாம் அலைந்தவள். யாராவது என்னுடன் பிரச்சனைக்கு வந்தால் அவர்களை தூக்கியடித்து விரட்டும் தைரியம் என்னிடம் உள்ளது.

ஆனால் இப்பொழுது இரவு ஏழு மணிக்கு மேலே வெளியாலை போகவே முடியவில்லை. அதற்குக் காரணம் எனக்குப் பயம் அல்ல. என்னை சுற்றியுள்ள சமூகம்தான் இரவுவெளியில் போனாலே இவள் இந்த நேரம் எங்கை போறாள்...? ஏதும் அப்பிடி இப்பிடி இருக்குமோ? என்கிறார்கள். அதனால் நான் முடங்கிப்போய் இருக்கிறேன் என்கிறார்.

ஆகவே பெரும்பான்மை அரசிடம் இருந்து சிறுபான்மை இனங்களிற்கான நிம்மதியான சுதந்திரமான வாழ்க்கையை பெற்றுக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் எங்கள் சமூகத்திடம் இருந்தும் இந்த முன்னைநாள் போராளிகள் குறிப்பாக பெண் போராளிகளிற்கும் நிரந்தரமானதும், சுதந்திரமானதுமான வாழ்வை பெற்றுக் கொடுக்க புலம்பெயர் சமூகம் அதாவது நாங்கள் என்ன செய்யலாம். அப்பாடா சாத்திரி இப்பவாவதே ஒரு மாதிரி தலைப் புக்கை வந்தானே என்று யோசிப்பீங்கள்.

யோசிக்கும்போது நான் ஆரம்பத்தில் சொன்னதுபோல் பொத்திக்கொண்டும் போகமுடியாது. அடுத்ததாக கூறியதுபோல இந்த யாகம் வளக்கிறது. ஜெனீவா நொக்கி நடப்பது. காவடி எடுப்பது? இதனை பலர் செய்து கொண்டிருப்பதால், அவர்களே அதனை தொடர்ந்து செய்யட்டும்.

ஆனால் புலிகளின் வெற்றிகளின்போது விசிலடித்து மகிழ்ந்து யுத்தத்திற்காக பணம் கொடுத்தவர்கள், புலிகள் சரியில்லை அவர்களிடம் ஜனநாயகம் இல்லை. அவர்களின் போராட்டம் சரியில்லை. என்றவர்கள், வெளிநாட்டிற்கு வந்தாச்சு, அங்கை இருப்பவர்கள் எக்கேடு கெட்டால் என்ன? எங்களிற்கு புலியும் வேண்டாம், அரசாங்கமும் வேண்டாம் என்று ஒதுங்கி இருந்தவர்கள் என்று அனைவரிற்குமே இலங்கைத் தீவில் வசிக்கும் எங்கள் உறவுகளின் இன்றைய இந்த நிலைமைக்கு காரணம். புலம்பெயர்ந்து வாழும் அனைத்து தமிழர்களும் ஏதோ வழியில் காரணம். இதனை யாரும் தட்டிக் கழிக்கவோ, மறுக்கவோ முடியாது. எனவே நாங்கள் இங்கு எம்மை பிரதிபலிக்கும் அமைப்புக்கள். நாங்கள் சார்ந்த சங்கங்கள், சங்கம் வைத்து தமிழ் வளர்த்த தமிழன் இன்று புலம்பெயர் தேசமெங்கும் ஊர்ச் சங்கம், பழைய மாணவர் சங்கம், வர்த்தகர் சங்கம் என ஏகப்பட்ட சங்கங்கள் வைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் என்னத்தை வளர்க்கிறார்கள் என்பது எனக்கு தேவையில்லாத விடயம். அதைவிட எங்கள் பிரதமர் திரு. உருத்திரகுமார் இருக்காக..

ஆம். நாடு கடந்த தமிழீழ அரசு, உலகத் தமிழர் பேரவை, பிரித்தானியத் தமிழர் பேரவை, எல்லா நாடுகளிலும் இருக்கும் மக்கள் பேரவைகள். முக்கியமாக அனைத்து நாடு களில் உள்ள வர்த்தகர் சங்கங்கள். அதை விட மிக மிக முக்கியமாக இலங்கைத் தீவில் தமிழர் தரப்பையும், தமிழ் பேசும் முஸ்லீம் தரப்பையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்கள். காரணம் நாங்கள் என்னதான் வெளிநாட்டில் இருந்து கத்தினாலும் சர்வ தேசம் என்பது அங்கிருந்துவரும் குரலிற்கே அதிகளவு செவிமடுத்து மதிப்பளிக்கும். ஏனென்றால் பிரச்சனை அவர்களிற்கே தவிர எங்களிற்கல்ல.

எனவே எல்லாருமே ஒரு பொதுநோக்கத் தோடு இணைந்து ஒவ்வொரு அமைப்பில் இருந்தும் ஒரு பிரதிநிதியை தேர்வுசெய்து ஒரு குழுவை உருவாக்க வேண்டும். அந்தக் குழு பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும்.

யாரோடு? பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும் எண்டிட்டானே யாரோடை யாரோடை பேசிறதெண்டு சொல்லவே யில்லையே?, இலங்கையரசோடு பேச்சு வார்த்தையில் ஈடுபடவேண்டும்.

அப்பவே நினச்சம் ஐயா. சாத்திரி இதைத் தான் சொல்லுவானெண்டு பெரிய தொகையா வாங்கியிருப்பானோ?, இலங்கை புலனாய் வுத்துறை அனுப்பியிருக்குமோ?, இணக்க அரசியல் செய்யச்சொல்லுறானோ?, இப்படித் தான் பலர் நினைக்க முதல் எழுத முதல் கெதியா சொல்ல வந்ததை சொல்லிடுறன்.

இதனை பேச்சுவார்த்தை என்பதைவிட ஒரு பேரம் பேசுதல். நிகோசியேசன். இதனை நாங்கள் எங்கள் சார்ந்த அமைப்புக்கள் ஏன் ஈடுபடவேண்டும் என்றால், எங்களிற்கான தீர்வை சர்வதேசமோ, அமெரிக்காவோ, ஐ.நா. சபையோ, இந்தியாவோ வந்து வாங்கித் தருவார்கள் என்றும், ஒவ்வொரு ஆண்டும் ஐ.நா கூடும்போது இலங்கையரசிற்கு எதிராக தீர்மானம்கொண்டு வந்து மகிந்த அரசை கலைத்து போர்க்குற்ற விசாரணை நடாத்தி மகிந்தவையும் கோத்தபாயவையும் கொண்டு வந்து தூக்கில் தொங்கவிடுவார்கள் என்று கற்பனைகளிலேயே வாழ்ந்துகொண்டிருக்க முடியாது.

ஏனென்றால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு நாட்டின் அதிபரை, அது எந்த மக்கள் என்றெல்லாம் கிடையாது. அவர் பதவியில் இருக்கும்போது விசாரணையே செய்யமுடியாது. இது எல்லா நாட்டிற்கும் பொதுவான சட்டம். அப்படி எந்த நாட்டிலும் நடந்ததும் கிடையாது. அப்படியிருக்கும்போது பதவியில் இருக்கும் மகிந்தவை அதுவும் போர்க் குற்ற விசாரணை நடத்தி தண்டனை கொடுப்பது என்பது நடக்கவே நடக்காது.

அவரது பதவி பறிபோனதன் பின்னர் அதற்கான சந்தர்ப்பங்கள் வரலாம். ஆனால் அவர் பதவி போவதற்கான சாத்தியங்களும் இப்போதைக்கு இல்லை. அதனால்தான் கற்பனைகளில் வாழவேண்டாம் என்று சொன்னேன்.

இந்தியா எங்கள் பிரச்சனையை தீர்க்க வேண்டும் என்கிறார்கள் பலர். இந்தியாவில் ஆட்சிகள் மாறலாம். ஆனாலும் அதன் வெளியுறவு கொள்கை வகுப்பு என்பதில் பெரிய மாற்றம் எதையும் உடனடியாக நாங்கள் எதிர்பார்க்க முடியாது. இந்தியாவின் கொள்கை வகுப்பு என்பதே, இந்திய நலன் என்பதற்குமப்பால் இந்திய கொள்கை வகுப் பாளர்களின் தனிப்பட்ட விருப்புவெறுப்பே இந்தியாவின் கொள்கை வகுப்பாகின்றது.

இந்தக் கொள்கை வகுப்பாளர்கள் தமிழர் நலன் என்பதை கணக்கில் எடுத்ததில்லை என்பது கடந்த காலங்களின் வரலாறு. இந்தியா தனது நலன்களிற்காக இலங்கைத் தீவில் பிரச்சினைகளை உருவாக்குமே தவிர, தீர்வை பெற்றுத்தரப் போவதில்லையென்பதும் எண்பதுகளில் இயக்கங்களிற்கு பயிற்சியளித்து ஆயுதம் கொடுத்தது வரலாறாகி நிற்கின்றது. அதுமட்டுமல்ல அவர்கள் நினைத்திருந்தால் இந்தியப் படைகள் இலங்கையில் இறக்கியிருந்தபோதே இலங்கை அரசிற்கு அழுத்தத்தை கொடுத்து பிரச்சினையை தீர்த்திருக்கலாம். ஆனால் புலிகள்தான் குழப்பினார்கள் என்பது தங்கள் தவறை மறைப்பதற்கான வழுவல் பதில் என்பதே உண்மை.

இன்று தமிழகத்தில் மாணவர்கள் போராட்டம் எம்மவர் எல்லோரது கவனத்தையும் திருப்பி இருக்கின்றது. நல்ல விடயம். தமிழர்கள் என்கிற ரீதியில் அதற்கான தார்மீகக் கடமை அவர்களிற்கும் உண்டு. ஆனால் அது இலங்கைத் தமிழர் விவகாரத்தில் பெரிய மாற்றம் எதுவும் வந்துவிடாது. ஏன் ? சட்டமன்றத்தில் முதலமைச்சர் ஜெயலலிதாவே தீர்மானம் போட்டிருக்கிறாரே என்று சொல்லலாம். அதுகூட அடுத்த லோக்சபா தேர்தலிற்காக ஈழத்தமிழர் விவகாரத்தை மீண்டும் தன்கையில் எடுத்து டெசோ மூலமாக தமிழ்நாட்டில் சரிந்த தனது செல்வாக்கை மீண்டும் தூக்கி நிறுத்து வதற்காக கருணாநிதி போட்ட திட்டத்தை முறியடிக்க சாதுரியமாக மாணவர் போராட்டங் களிற்கு ஆதரவளித்து சட்டமன்றத்தில் தீர்மானத் தையும் நிறைவேற்றி மாணவர் போராட்டத்தால் எழுந்த உணர்ச்சியலையின் ஆதரவுகள் அனைத் தையும் அப்படியே தன்பக்கம் திருப்பி அரசியல் சாதுரியத்தை காட்டிவிட்டிருக்கிறார் ஜெயலலிதா. இது அவர்களது அரசியல் என்றாலும் சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியது எமக்கு வந்தவரை இனாம் என்பதோடு, இதை வைத்துக் கொண்டு நாங்கள் அடுத்தகட்ட அரசியலை எப்படி நகர்த்தப் போகிறோம் என்ப்தில்தான் மிகுதி தங்கியிருக்கின்றது.

ஆனால் தீர்மானம் நிறைவேற்றிய முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு வாழ்த்து சொல்வதோடு எம்மவர்களின் அமைப்புக்கள் நின்றுவிடும் என்பதே உண்மை.

அதேநேரம் இந்தியா என்பது 28 மாநிலங் களையும், ஏழு யூனியன் பிரதேசங்களையும் கொண்டதொரு நாடு 28 மாநிலத்தில் ஒரேயொரு மாநிலம் அந்த மாநில அரசின் எந்த பிரதிநிதி யும் மத்திய அரசில் அங்கம்வகிக்கவில்லை.

இப்படியானதொரு நிலையில் தமிழ்நாட்டு முதலமைச்சரின் தீர்மானம் மத்திய அரசில் எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தும். தமிழ்நாடு அரசு தமிழ் நாட்டின் நலன்களிற்காக நிறை வேற்றி கிடப்பில் கிடக்கும் தீர்மானங்களே ஆயிரக்கணக்கில் இருக்கின்றது.

வெளிநாட்டவர்கள் எங்கள் பிரச்சனை யில் தலையிட வேண்டாம். இது அண்ணன் தம்பி பிரச்சனை. நாங்கள் அடித்து கொல்லு வோம், கட்டியும் பிடிப்போம். எனவே இதனை எங்களிற்குள் தீர்த்துக்கொள்கிறோம் என்று இந்தியாவிற்கு பகிரங்கமாக அறிவித்திருந்தார் அன்றைய இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா. இலங்கைப் பிரச்சனையில் அவ்வளவு தெளிவோடு இருந்தவரையும் நாம் சரியாக பயன்படுத்தாமல் அனுப்பியாச்சு.

அடுத்ததாக சர்வதேசம். வருடா வருடம் ஐ.நா சபையில் தீர்மானம் கொண்டுவரும். இந்த வருடமும் கொண்டுவந்தது. அடுத்த வருடமும் கொண்டுவரும். எம்மவர்களும் ஜெனீவாவிற்கு போவார்கள். தீர்மானத்திற்கு ஆதரவாக 25 நாடுகள். எதிராக 18 நாடுகள் வாக்களித்தன. 10 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லையென்று செய்திகள் வெளியாகும்.

ஆனால் தீர்மானம் என்னவென்றால் இலங்கையில் நடந்து முடிந்த மோசமான வன்முறைகளை இலங்கை அரசு விசாரிக்கவேண்டும். அதாவது இலங்கை யில் நடந்தது படுகொலைகள் என்றோ, இன அழிப்பு என்றோ அங்கு குறிப்பிடப் பட்டிருக்கவில்லை. அதேநேரம் அதை அவர்களே விசாரிக்கவேண்டுமாம்.

ஆகவே சர்வதேசமும் தமிழரிற்கான தொரு தீர்விற்காக இலங்கையரசின் மீது அழுத்தத்தை பிரயோகிக்கப் போவதில்லை. அவர்களின் அழுத்தங்கள் எல்லாம் இலங்கை அரசை பணியவைத்து தங்கள் சார்புநிலை எடுக்க வைத்து தங்கள் பொருளாதார நலன்களை பேணுவது மட்டுமே.

ஆகவேதான் கேக்கிறேன் தமிழீழம் என்கிற கட்டமைப்பை. தனி நாட்டை.. சிறப்பாக நிருவாக சீர்கேடுகள் இன்றி... சுயநலம் இன்றி தூரநோக்கோடு தமிழர்களின் எதிர்காலம் குறித்த அக்கறைகளோடு வழி நடாத்தக் கூடிய ஒட்டுமொத்த தமிழர்களின் நம்பிக்கைகளையும் பெற்ற பலமானதொரு அமைப்பு எம்மிடம் உள்ளதா...? இல்லை...? அதுமட்டுமல்ல அதனை யாரும் வாங்கித் தரப் போவதும் இல்லை. பக்கத்து நாட்டுக் காரனையும் வெளிநாட்டுக்காரர்களையும் நம்பிக் காலத்தை கழித்துக்கொண்டிருக்கப் போகின்றோமா??

அல்லது தமிழீழத்தை பெற்று அங்கு வாழ்வதற்கு முதலில் அங்கு தமிழர்கள் இருக்கவேண்டும். அவர்கள் நிலங்கள் இருக்கவேண்டும் . எனது நிலத்தில் எனது காணிக்குள் நின்றுதான் நான் எனது உரிமைகளிற்காக போராட முடியும்.

எனது நிலம் பறி போன பின்னர் எனது தேசம் பறிபோன பின்னர்.. எமது உறவுகள் எல்லாம் புலம்பெயர்ந்தும் இறந்தும்போன பின்னர் வெளிநாட்டில் இருந்து கொண்டு கத்தி பிரயோசனம் இல்லை... பலவந்தமான குடியேற்றங்கள் தடுத்துநிறுத்தப்பட்டு எங்கள் நிலங்கள் தக்கவைக்கப்படவேண்டும். முன்னைநாள் போராளிகள் பாதுகாக்கப்படவேண்டும்.

பெண் போராளிகளிற்கான சுதந்திரமானதும் பாதுகாப்பானதுமான வாழ்வு உறுதிப்படுத்தப்படவேண்டும். அதற்கு நான் முன்னர் கூறியதுபோல் அனைத்து தமிழர் தரப்பையும் தமிழ்பேசும் முஸ்லிம்களையும் உள்ளடக்கியதொரு குழு அமைக்கப்பட்டு இலங்கையரசோடு பேச்சு வார்த்தைகளை தொடங்கவேண்டும்.

அந்த பேச்சுவார்த்தைகள் ஊடாக சிறுபான்மையினரின் பாதுகாப்பு உறுதிப் படுத்துவதோடு அவர்களிற்கு காவற்துறை மற்றும் காணி அதிகாரங்களுடன் கூடிய தொரு நிருவாக சபை ஆட்சியமைப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

அதன்மூலமாக விழுந்து போய் உள்ள எமது மக்களை தூக்கி நிறுத்த முடியும். அவர்கள் அரசியல்ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மீண்டும் நிமிர்ந்து நிற்க பல ஆண்டுகள் எடுக்கும். அப்போது இங்கு பேசிக் கொண்டிருக்கின்ற நாங்கள் எல்லாம் இருப்போமா தெரியாது. ஆனால் அந்த மண்ணில் வாழ்கின்ற மக்கள் தாங்களாக நிமிர்ந்து நின்ற பின்னர் தங்களிற்கு என்ன தேவையோ அதனை அவர்களே தீர்மானிப்பார்கள்.

(முற்றும்)



# வாழ்க்கைக்கு உறுதுணையானது தூய நற்கல்வியே...

**சென்ற** காலங்களிலும் பார்க்க இப்போது கல்வி என்னும் புலம் பரந்து விரிந்த பொருளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. "கல்வி கரையாததது" என்ற பதமானது எப்பொழுதோ வடிக்கப்பட்ட ஒரு கல்வெட்டாகும். எனினும் விஞ்ஞான, தொழில்நுட்பக் கல்வியின் அதிவேக வளர்ச்சியின் காரணமாகும். இதனால் சமூக மாற்றங்கள் என்பன மனித குலத்தின் வளர்ச்சிக்கு மிகச் சிறந்த அத்திபாரமாகும். இதனை நாம் பெருமைப் படுத்திக் கொள்ளாது நற்பண்புகளை வளர்க்கவேண்டும்.

வளர்ச்சியோ அல்லது"அபிவிருத்தியோ மாத்திரம்தான் கல்வியாகாது. வளர்ச்சியோடு தூய்மையும், பண்பும் இணைய வேண்டும். அறிவின் வளர்ச்சியும், பொருளின் வளர்ச்சியும், ஆதிக்க வளர்ச்சியும் தூய்மையற்று, மனிதப் பணப்பற்று வளருமேயானால் அத்தகைய வளர்ச்சிகளை ஏற்படுத்திய கல்வி, மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும், திருத்தியமைக்கப்பட வேண்டும்.

"வாழ்க்கைக்கு உறுதுணையாவது தூய நற்கல்வியே" என்பது திருமூலர் கூற்று. கல்விக்கும், வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பு வலியுறுத்தப்படுகிறது. "கற்க மறுப்பவன் வாழ மறுக்கிறான்" என்றார் பகவான் இராகிருஷ்ணர். உயர்ந்த இலட்சியங்களைக் கொண்ட கல்வியானது பாரம்பரியம், பண்பாடு தொட்டு எம்மிடையே இருந்துவருகிறது. "அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே" எனக் கல்வியின் நோக்கம் வரையறுக்கப்பட்டுள்ளது.

மனிதனின் முழுமையான ஆளுமை வளர்ச்சிக்குப் பண்பாட்டுக் கல்வியின்


> **மனிதனின் முழுமையான ஆளுமை வளர்ச்சிக்குப் பண்பாட்டுக் கல்வியின் பங்குமகத்தானது. மனிதப் பண்புகளை வளர்க்கும் கல்வி, நிரந்தர விழுமியங்களை வளர்க்கிறது. பண்பாட்டுக் கல்வி சகல மக்களையும் ஊடுருவி நிற்கவேண்டும். அப்போதுதான் மக்கள் இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழவும் அமைதி, சாந்தி, சமாதானம் பெறவும் முடியும். எனவே கல்வி கற்று நான் பெரிய பண்டிதனாக மாறிவிட்டால் மற்றவர்களைத் துன்புறுத்தக் கூடாது. கல்வி கற்கும்போது பண்பாடுமிக்க கல்வியை கற்கவேண்டும்.**

பங்குமகத்தானது. மனிதப் பண்புகளை வளர்க்கும் கல்வி, நிரந்தர விழுமியங்களை வளர்க்கிறது. பண்பாட்டுக் கல்வி சகல மக்களையும் ஊடுருவி நிற்கவேண்டும். அப்போதுதான் மக்கள் இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழவும்; அமைதி, சாந்தி, சமாதானம் பெறவும் முடியும்.

"உண்டாலம்ம இவ்வுலகம்..... பிறர்க்கென முயலுநர் உண்மையானே" என்ற சங்க காலத்து இளம் வெருவழுதி பிறர் பொருட்டு வலிய முயற்சிகளை மேற்கொணரும் ஆர்வத்தைத் தூண்டினான்.

நவீன காலத்து நிலை பெருவாரியான மக்களுக்கு நெருக்கடியைப் பெருக்க வதாகவே தோன்றுகிறது. ஆட்களுக்கிடையில் போட்டி, குடும்பங் களுக்கிடையே பகைமை, பொருளாதார நிறுவனங்களுக்கிடையே மோதல், மகளிரின் உரிமை மறுக்கப்பட்டு பெண்களை துஷ்பிரயோகம் செய்தல் இப்படியான சூழலையே நாம் இன்று காணமுடிகின்றது. சிக்கல் மிகுந்த இத்தகைய முரண்பாடுகளின் மத்தியில் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் பலர் தோன்றி நடைமுறைச் சமுதாய நியமங்களுக்கும், விழுமியங்களுக்கும் சவால்விடுகிறார்கள்.

கொலைக்காரர்கள், கொள்ளைக் காரர்கள், விநோதப் போக்கினர், கலகக் காரர்கள், புதிய தத்துவவாதிகள் என்று பலர் தோன்றுவதையும் அவர்களைச் சுற்றிப் புதிய குழுக்கள் தோன்றுவதையும் காணமுடிகின்றது.



மனிதர்களுக்கிடையே உள்ள உறவுகள் பசையற்ற தன்மையாகவும், இலாப நஷ்ட நோக்கங்களைக் கொண்டனவாகவும் அமைகின்றன என்றும் அன்பு, இரக்கம், பிறர்நலம் பேணும் பண்பு முதலானவை அருகி வருகின்றன. இலாபத்தினைக் குறி யாகக் கொண்டு சஞ்சிகைகளையும், புத்தகங்களையும் பிரசுரிப்பவர்கள் மக்களுக்கு சிறிதுநேர உடனடிப் போதை யூட்டும் படைப்புக்களை விற்கின்றனர். வாழ்க்கையிலிருந்து மலர்வதே கல்வி; அவ்வாறு மலர்ந்த இலக்கியம் மனித வாழ்க்கை மேலும் வளமும் செம்மையும் பெற உதவுகிறது. நற்பண்பு, கல்வியில் இணைவதால் அதனைக் கற்று, கற்றாங்கு ஒழுக, வாழ்க்கை வளம் பெறுவதற்கு துணையாகிறது.

சமூக மரபுகள், முன்னோர் தாம் பெற்ற அனுபவங்களைத் திரட்டி எமக்களித்த அரும்பெருஞ் செல்வம் ஒவ்வொரு தலைமுறையிலும் சமூகமரபுகள் அளவிலும் பண்பிலும் அதிகரிக்கின்றன. விஞ்ஞான மேதை ஐசாக் நியூட்டன் ஓர் அற்புதமான கருத்தைக் கூறியுள்ளார். அதாவது "எனது முன்னோரைக் காட்டிலும், என்னால் அதிக தொலைவுகாண முடிந்தமைக்குக் காரணம், அவர்களின் தோளின் மேல் நின்று நான் பார்த்ததேயாகும்" இங்கு முன்னோர்களின் தோள்கள் எனக் குறிப்பிடப்படுவது சமூக மரபுகளே ஆகும். இத்தயை சமூக மரபுகள் காலத்திற்கு காலம் மாறுபடுகின்றது. சமூக மரபுகளை ஒரு தலைமுறையினர் அடுத்த தலைமுறையினருக்கு கையளிக்கும் பணி தூய நற்கல்வியிலே தங்கியுள்ளது என்பதனை நாம் மறந்து விடக்கூடாது. அதனை நாமே நிலை நிறுத்தவேண்டும்.

மனித வாழ்க்கையானது செம்மையாக அமைவதற்கு மிக சிறந்த இலட்சியங்கள் வேண்டும். இவ் இலட்சியங்களை அடைவதற்கு சிறந்த ஊடகமாகக் கல்வி திகழ்கின்றது. அறம், நீதி, அன்பு, அழகு, ஒழுக்கம் சார்ந்தனவாகவே விளங்குகின்றது. பண்பாட்டுக் கல்வி இவற்றை வளர்க் கின்றது. கல்வி என்பது பண்பாட்டுக் கல்வியாகவே மனித குலத்தில் ஆரம்பிக் கப்பட்டது. அண்மைக் காலம்வரை வளர்ந்து வந்தது பண்பாட்டுக் கல்வி. உண்மையின் அடிப்படையிலும் அழகுத் தத்துவத்திலும் உலக நன்மையைப் பயனாகக் கொள்வதிலும் கட்டியெழுப் பப்படுகிறது. "நெஞ்சத்து நல்லம் யாம்" என்னும் நடுநிலைமையை வழங்குவ தால் 'கல்வி அழகே அழகு" என்னும் கருத்து கீழைத்தேய, மேலைத்தேயக் கல்வியாளர்களாலும் ஏற்றுக்கொள்ளப் பட்ட ஒரு கருத்தாகும்.

"கல்விக்கும் பயன் அறிவு" அவ்வாறு பெற்றுக் கொள்ளப்படுகின்ற அறிவு, "அறம் காக்கும் கருவியாக" விளங்கும் என்பது வள்ளுவர் வாக்கு. அறிவிற்கு பயன் ஒழுக்கம், கல்வி இரண்டு கூறுகளை உடையது. கற்றல், நிற்றல் என்பவையே அவை. கற்க வேண்டியவற்றைக் 'கசடறக் கற்றல்' என்பது ஒன்று கற்றவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுதல் என்பது. மற்றையது இவ்விரண்டு செயற்பாடுகளும் இணைந்து திகழும்போதுதான் கல்வி முழுமை பெறுகிறது என்ற கருத்தாகும்.

மனித இயல்புகள் மாறாது இருப்ப தால் வரலாற்றில் முன்னர் இடம்பெற்ற வையே திரும்பவும் இடம்பெறும் என்று கிரேக்க வரலாற்றிஞரான தூசிடிடீஸ், சுமார் 2500 ஆண்டுகளுக்குமுன் கூறிவைத்ததனை இங்கு நினைவுகூர வேண்டும். மனித சமுதாயத்தின் எதிர் காலத்தை நிர்ணயிப்பவையாக தனி மனித சமூக பண்பாட்டு ஒழுக்க விழுமியங்களை உணர்த்தவேண்டிய தேவை இன்று மிகுதியாக உள்ளது என்பதையும் அக்காரியத்தை தூய நற்கல்வியினால் துல்லியமாகவும் செவ்வையாகவும் செய்யமுடியும் என்பதையும் வலியுறுத்துவது பொருந்தும்.

பண்பாடு என்றால் என்ன என்பதை யும் விளக்க புகுந்த ஆர்னெய்ல்ட் "ஒருவன் தன் குணநலன்களை நிரப்புவதிலும் தன்னைச் சூழ்ந்திருக்கும் சமுதாயத்தின் நலன்களை பேணுவதிலும் பேரவாக் கொண்டிருக்கும்" நிலையே அது என்றார். எனவே நாம் அதனை வளர்க்க இயன்ற பங்களிப்பு வழங்க வேண்டுமெனின் நாம் கற்கும் கல்வியை மிகப் பண்புடையதாகக் கற்கவேண்டும். எனவே கல்வி கற்று நான் பெரிய பண்டிதனாக மாறிவிட்டால் மற்றவர்களைத் துன்புறுத்தக்கூடாது. கல்வி கற்கும்போது பண்பாடுமிக்க கல்வியை கற்கவேண்டும்.


கஜேந்தினி நவரத்தினம்
களபூமி, காரைநகர்.


## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

### குறுக்கெழுத்துப் போட்டி - 519

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | ■ |
| 7 | ■ | 9 | 10 | 11 | 12 |
| 13 | ■ | ■ | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | ■ | 23 | 24 |
| 25 | ■ | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | ■ | ■ | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 14.05.2013 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 519
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப் போட்டி 517- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பா | 2 ம் | ■ | 4 க | 5 ம் | 6 போ |
| 7 பு | 8 ப் | 9 ஒ | 10 வி | ■ | 12 தி |
| ■ | 14 சு | 15 ஸ் | 16 ரு | 17 த | 18 ர் |
| 19 சா | 20 ர | 21 தி | ■ | 23 ன் | 24 த |
| 25 த் | 26 பி | 27 ரி | ■ | 29 லை | 30 ம |
| 31 து | ■ | 33 யா | 34 தா | 35 வ | 36 ர் |

**இடமிருந்து வலம்**

01. கடைச் சங்கத்தின் இறுதிக்கால தலைமைப் புலவர்.
09. யோக வழிநிற் போன் அல்லது நிர்வாண தீட்சை பெற்றவன்.
16. புகழ்ந்துரைக்கும் பாட்டு.
19. தருமக் கொடை.
23. அருகன் அல்லது வன்னி மரம். (திரும்பியுள்ளது)
27. ஓர் இராகம். (குழம்பியுள்ளது)
31. மன்மதன் அல்லது சினிமாவில் வரும்பாத்திரம் ஒன்று.

**மேலிருந்து கீழ்**

01. இவர் இருந்தால் வாழ்க்கை தெய்வீகமாகும்.
03. பொய் அல்லது பொய்த்தோற்றம்.
04. களை மூடிய உவர் நிலம். (குழம்பியுள்ளது)
05. அறச் சிந்தனை. (குழம்பியுள்ளது)
21. நிலமகள்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 517 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**சி.ஆர்யா, பாலத்தோப்பூர், தோப்பூர்.**

பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01. ஜே.ரெம்சி, மன்னார்.
02. இ.நிரோஜனா, பம்பலப்பிட்டி.
03. உ.சிந்துஜா, குருநகர், யாழ்ப்பாணம்.
04. சி.மாதங்கி, பளை, கிளிநொச்சி.
05. சௌ.பார்த்தீபன், பிரதான வீதி, புத்தளம்.
06. வ.சத்தியநாதன், அரியாலை, யாழ்ப்பாணம்.
07. மா.அருளானந்தம், ஒட்டமாவடி.
08. அ.மதனகுமார், கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
09. த.யமுனா, கண்டி வீதி, சாவகச்சேரி.
10. கு.பாண்டியன், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.



27

**இராமசாமி ரமேஷ், அளம்பில்**


ஆம்! வலிகளையும், சுமைகளையும் தோல்விகளையும், அவமானங்களையும் சுமந்து - கடந்து வெற்றிக்காகப் போராடும் எழுத்தாளன் ஒருவனின் எழுத்துலகப் பயணம் இங்கே தொடர்கிறது.

# வலிகளின் சன்மானம்

பிழைகளை சரிபார்த்து விட்டு அந்த பெயரை மட்டும் தன் கரங்களால் தடவிப் பார்த்தாள் மௌனிகா! நட்சத்திரன் என்னும் இலக்கியக்காரனின் பிரசவம் என்று முழுமையடையும், என்பதோடு, தன் இதயத்திலிருக்கும் அவனின் நினைவுகளை மீட்டிக்கொண்டாள். முதலாவது சந்திப்பில் அவனது அழகான பார்வை இவளை இன்றும் என்னவோ செய்தது.

வலிகளின் சன்மானம் வெளியிடும் தினத்தில் தன் இதய எண்ணங்களை அவனிடம் ஒப்புவிக்கும் நோக்கமும் இவனிடம் தொற்றியிருந்தது. தன்னோடு இறுக்கப்படுத்திக் கொண்டாள் வலிகளின் சன்மானத்தை மௌனிகா!!

வெயிலும் உச்சியைத் தாண்டிக் கொண்டிருந்தது. மகேஷ்வரி கண்ணீரோடு கரையில் காத்திருக்கிறாள். நட்சத்திரனுக்கென கொண்டு வந்திருந்த தேநீர் ஆறிவிட்டது. பிட்டும் சம்பலும் காய்ந்து விட்டதாக தோன்றியது.




வாய்விட்டு கதறத் தொடங்கிவிட்ட மகேஸ்வரியை ஊரவர்கள் சிலர் ஆற்றுப்படுத்திக் கொண்டிருந்தார்கள். பிரவீனும் வசந்தனும் இன்னும் சிலருமாய் நான்கைந்து படகுகளில் ஒவ்வொரு திசையாக தேடிப் புறப்பட்டார்கள். பிரவீன் உள்ளுக்குள் வேண்டிக் கொண்டான். "கடவுளே... என் நட்சாவுக்கு எதுவும் நேரக்கூடாது.."

நட்சத்திரனின் வருகையை எதிர்பார்த்து உப்புமாவெளி மக்களில் பலர் கடற்கரையில் கூடிவிட்டார்கள். மகேஸ்வரிக்கு விழிகளில் நீர்த்துளிகள் பூத்துவிட்டன. இயலாமை ஆற்றாமை எல்லாம் ஒருமித்து வந்துவிட, படகின் ஓரமாய் சாய்ந்துகொண்டு கடலையே வெறித்துக் கொண்டிருந்தாள்.

மௌனிகா நூலை சரிப்படுத்தி செவ்வனே பிழை திருத்தியிருந்தாள். சரிபார்த்தவற்றை நட்சத்திரனிடம் கொண்டுவந்து சமர்ப்பிப்பதற்காக உப்புமாவெளி மண்நோக்கி பயணமாக எத்தனித்து, தன்னை தயார்ப்படுத்திக் கொண்டிருந்தாள்.

நட்சத்திரனைப் பற்றி சிந்திக்கையில் ஏனோ, பசுமையும் பாசமும் உள்ளுக்குள் அதிகமாய் பூத்துக்கொள்கின்றன.

(வலிகள் தொடரும்...)




# வெளிநாடு தந்த சொத்துக்கள்

**ரகு** ஓர் சாதாரண தரப் பையன். அவன் வாழ்க்கைப் பாதையினில், அவனால் கடத்தப்பட்ட ஆண்டுகள் பல... இவற்றிலே ரகு கடந்துவந்த பாதையில் அவனால் பாதிக்கப்பட்ட சில பாதச்சுவடுகள் இன்னமும் அவனது நெஞ்சிலிருந்து இரகசியமாக இறுக்கி வைக்கப்பட்டதை. அவனிடம் சொல்லாது மேல்நீதிமன்றில் சமர்ப்பிப்பதற்காக நான் எடுத்த முடிவு...

ரகுவின் நடுத்தரக் குடும்பம் ரகுவோடு நீண்டகாலமாக இணைந்திருக்கவில்லை, காரணங்கள் பல. ரகு பிறந்த வேளையில் ரகுவின் தாயார் 'மாதுளம்' ரகுவோடு வாழப்பிடிக்காது அவனைவிட்டு நிரந்தரமாய் நீண்டதூரம் பயணிக்க தாயன்பை இழந்தான் ரகுவின் தநதை தனிமையை விரும்பாது, ரகுவுடன் சேர்ந்து தனது மூன்று குழநதைகளையும் தனிமைக்கு பரிசாகக் கொடுத்துச் சென்றார்...

ரகு கடை மகனானதால் அவன் தனது தாயையோ, தந்தையையோ, கண்களினாலோ, காதுகளினாலோ பார்த்திருக்கவுமில்லை. கேட்டிருக்கவுமில்லை. இளவயதுவரை ரகு தன் தாயின் தங்கையின் நிழலிலேயே பாதுகாப்புடனும், பாசத்துடனும் தொடர்ந்தான் வாழ்க்கைப் பயணத்தை... முதல் படியேற சறுக்கியது ரகுவின் தாய் இழப்பு. அன்று மறுபடியும் இரண்டாம்படிக்கு மெல்லத் தாவுகையில் சறுக்க எத்தனித்தன அவனில கால்கள்.

கால்களை கச்சிதமாக வைப்பது எப்படி என்பதனை ரகுவின் மாமனார் இள்வயதை எட்டிய ரகுவிற்கு "கீதாசாரமாய்" எடுத்துரைத்தார். இறந்தவையெல்லாம் இறந்தகாலம், இருப்பவை எல்லாம் நிகழ்காலம், இல்லாதவையெல்லாம் எதிர்காலம் என்று தன்னைத்தானே தேற்றியவாறு கல்விக்கூடம் சென்று கல்விக்கு முன்னுரிமை இட்டுவநதாள்... கல்வியும் கைகொடுக்க (கா.பொ.த. சா/த) முழுமையாக சித்தியெய்தி கவலை களும் கஷ்டங்களுமற்று மேற்படிப்பை தொடர பாதச்சுவடுகளை அவன் முன்நோக்கி நகர்த்தினான்...

ரகுவினது காலங்கள் காற்றாய் ஓட அவனது வாழ்க்கையில் பூகம்பம் மீண்டும் வெடித்துக் கிளம்பத் தயாராவதைப் புரியாதவனாய் தனது மேற்படிப்பிற்காக பாடசாலைக்கு செல்கிறான்.

பாடசாலைக் காலம் பாதியானது பார்த்திருந்ததுபோல ரகு வாழ்க்கை ரகுவை நடுவீதிக்கு இழுக்க ஆரம்ப புத்தகத்தின் முகவுரையை எழுதத் தொடங்கியது. 'காதல்' எனும் காலனிடம் ரகுவும் மாட்டிக்கொண்டான்.

காதலை ரகு தனது வாழ்வின் விளக்கேற்றப்போகும் தருணமென்று நினைத்துத் தாராள மனதுடன் சம்மதித்து காதலிக்க தொடங்குகிறான். ரகுவோ தன் தாயை பார்த்ததில்லை. தாய்ப்பாசத்தை உணர்ந்ததுமில்லை என்பதால் காதலியை தாயாகவும், தாரமாகவும் எண்ணி முற்று முழுதாக நம்பியும் பழகிவந்தான்.

காதல் செய்த கோலத்தினால் சண்டைகள் சச்சரவுகள் வீட்டிலும், நண்பர்களுடனும். அனைத்தையும் தாண்டிக் குதித்த ரகுவிற்கு உயரதரப் படிப்பு பல்கலைக்கதவுகளை தாண்ட வழிவிடவில்லை. சித்தியெய்தியது போதுமென்ற ரகுவின் மனதிற்கேற்ப சித்தியெய்தினான். காலகட்டமோ ரகுவை மீண்டும் துரத்த ஆரம்பித்தது....

வெளிநாடு ஒன்றுக்கு செல்லும் வாய்ப்பு ஏற்பட வாய்ப்பினை வரப்பிரசாதமாக நினைத்தான் ரகு. செல்வதற்கான ஏற்பாடுகள் செல்லத்தயங்கும் காதல் புதைந்த மனங்கள் அனைத்தையும் ஒரு முகப்படுத்திய ரகு வெளிநாடுசென்று சம்பாதிக்கவே வேண்டும் என்ற எண்ணத்தை ஆழ்மனதில் பதியப்போட்டான்.

ரகுவின் குணநிலையில் ஒன்றான ஆழ்மனத் தகவலைத் தட்டாமை காரணமாக ரகுவும் வெளிநாடு சென்றான். உறவுகளைப் பிரிந்த சோகம்,



உடலையே உலுக்கும் அளவிற்கு உள்ளத்தில் தோன்ற, காதலியின் நினைவுடன் காலத்தை ஓட்ட நினைத்தான். நிலைமையும் அதுதான்... காதலியுடனும், உறவுகளுடனும், பேசுவதன் மூலம் சந்தோசத்தை இடைக்கிடை வரவழைத்துக் கொள்வான். ஆண்டுகள் ஓடின. ஒன்று... இரண்டு... இப்படியே ஓடிய ஆண்டுகளுக்கு இடிவிழவும் நேரிட்டது.

காதலியவள் காரணம் சொல்லாது பேசுவதை நிறுத்திவிட, மூச்சுக்காற்றே நின்றது போலாயிற்று. ரகு வாழ்வினை வெறுத்து விரக்தியின் விளிம்பிற்கு தள்ளப்பட்டான். வாழ்வியலில் வருவதெல்லாம் ரகுவின் கண்ணீரை இல்லாததாக்கும் கொடியதொரு நோயாக மாறியது... வேலைப்பளு அதிகரிக்க, அதிகரிக்க காதலியின் பிரிவும், நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் அதிகரித்தது. அதிகரித்ததன் பலனாக கண்ணீரற்ற ரகுவைத் தோற்றுவித்தது அந்த வெளிநாடு.

வெளியூர் கற்றுக்கொடுத்த பாடங்கள் பல இருப்பினுமகூட ரகுவினால் மறக்கவோ, மறைக்கவோ முடியாத ஒரே ஒரு பாடமாக பள்ளிக் காதல் மனதைத் தைத்து குருதிக்கு ஈடாக கண்ணீரை வெளியேற்றி முடித்தது. ரகுவிற்கு சோகங்கள் தீர்ந்ததோ, இல்லையோ, கண்களுக்கு சொந்தமான கண்ணீர் மட்டும் இல்லாது போனது.

கண்ணீரை மட்டும் இழக்கவில்லை, கண்ணீருக்குச் சொந்தக்காரியான தன் காதலியையும் இழந்திருந்தான் ரகு. காலங்கள் கடலலையாய் பழைய நினைவுகளை மீண்டும் மீண்டும் ஆரப்பரிக்க ரகுவினால் தொழில் முயற்சிகளோ, மற்றைய அனைத்தையுமோ அவனால் சிறப்புடன் செயல்வடிவமாக ஆற்றப்படுத்த முடியாதுபோக வெளிநாட்டு வேலையை இடைநிறுத்தி விட்டு ஊருக்கு திரும்புகிறான்.

காலங்கள் கடந்தும் பறந்துபோயின. கையிருப்பு காலியானது. காதலித்த அவளது உள்ளம் போலாகியது. அந்த நிமிடத்தில் ரகுவின் உள்ளங்கள் குமுறி அழும் சத்தங்கள் அவள் கூறிய கதைகளின் வழியே, வழிந்தோட அதை எடுத்து கதையாக்க முயற்சித்தேன்... இதையெல்லாம் அறிந்த பெண் உள்ளம் ரகுவிற்காக ஊரில் காத்திருப்பை அறியாமல்...

**R.கஜகாந்த், கல்வயல்.**



# இன்பத்தின் ஊற்று எங்கே இருக்கிறது...?



மகிழ்ச்சி எங்கே வருகிறது?
மனத்திலா?
மனம் எங்கே இருக்கிறது?
மூளையிலா?
அப்போ மகிழ்ச்சி எங்கே
முளையிலிருந்தா வருகிறது?

எங்கிருந்து வந்தாலென்ன?
மனம் பொங்குவது
மூளைக்கு தெரிகிறது. அது
மட்டுமா? மகிழ்ச்சி என்று
வந்துவிட்டால் நரம்பு.
தசை. இரத்தம் உடம்பு
முழுவதும்தானே நிலை
கொள்ளாமல் பூரித்துத்
துடிக்கின்றன!

மூளையா. நரம்பா. உடலா.
மனமா... நான் இன்பத்தில்
துள்ளுவது எதனால்?

உலுக்கியெடுக்கிற இந்த
இன்பத்தைத் தாங்க
மாட்டாமல் உடல்
நடுங்குகிறது. கண்களில்
கண்ணீர் பொங்குகிறது.
இதயம் படபடவென
அடித்துக் கொள்கிறது.
நரம்புகள் அதிர்கின்றன.
இரத்தத்திற்குப் பதில் தேன்
ஓடுவதாக மனம் இனித்து
இலேசாகி சிறகடித்து
விண்ணில் பறக்கிறது.
மூளைக்குள் மில்லேனிய
பிறப்பு நாளின் வான
வேடிக்கைகள் மூளைதான்
கட்டுப்படுத்துகிறதா?

மூளையின் கொண்டாட்டம்
தானா இந்த இன்பம்?
அப்படியானால், எதனால்
இந்த இன்பம் என்று ஏன்
இந்த மூளை பகுத்தறிய
மாட்டாமல் இருக்கிறது?
உடலெல்லாம்
உழுதுசெல்லும்
இன்பத்தின் ஏர்முனை
உள்ளத்தில் களி துள்ள தேன்
தடவிய மயிலிறகு- எண்ண
மெல்லாம் ஒளி நிரம்பிய
பாலமுதச் சந்திரன் இவை
யெல்லாம் யாரால்?, எப்படி?
எங்கிருந்து வந்து என்னை
இப்படி ஆட்டுவிக்கின்றன
என்று இந்த மூளை
பகுத்துணராதது ஏன்?

சரி, இந்த இன்பப்பெருக்கை
வேறு யாரிடமாவது பகிர்ந்து
கொள்ளவாவது இந்த மூளை
துணை செய்கிறதா? தான்
அனுபவிப்பதை எடுத்துச்
சொல்லுமளவுக்கு இதனிடம்
வார்த்தைகள் கிடையாது.
வழிவகையும் தெரியாது.

எப்படி நாம் வலிமை பிறருக்கு
உணர வைத்துவிட முடியாதோ.
அப்படியே தான் அளவற்ற
இன்பமும் யாருக்கும்
தெரியப்படுத்திவிட முடியாத
திண்டாட்டம் உள்ளுக்குள்
மூச்சுத் திணறலை ஏற்படுத்தும்.

நண்பர்களிடம் சொல்லிப்
பகிர்ந்து கொள்ளக் கூடிய
இன்பங்களும் உண்டுதான்
அது பரவாயில்லை
ஆசுவாசப்படுத்திக்
கொள்ளலாம்.

ஆனால்... காதல் அந்த
இருவரைத்தவிர வேறுயாரிடமும்
பகிர்ந்து கொள்ளப்பட முடியாதது.

எப்படிச் சொல்ல முடியும்.
அதற்குரிய வார்த்தைகள்
உலகத்துப் பாஷைகள்
எவற்றிலேனும்
இருக்கின்றனவா? போகட்டும்.

அந்த மூச்சுத் திணறலில்
ஒரு துளியைத்தானும்
வெளிப்படுத்திவிடச் சொல்
உண்டா?

உடலில், நரம்புகளில்
இரத்தத்தில் சித்தத்தில்
பரவும் சுகமான வாதையை..
சொல்ல முடியா அந்தரத்தை..
இந்த உலகிலிருந்து கழற்றி
வீசப்பட்டுவிட்டதான அந்த
விண்வெளி நீச்சலை..
மனதின் மாய்ச்சலை
மூன்றாம் நபருக்கு எப்படிக்
கடத்தமுடியும்?

துளையிடப்பட்ட மூங்கில்
இசையாக அழும் சுகம்போல்
ரணப்பட்ட இதயம் வலியில்
துடிப்பதே இன்பமாகும்
விந்தை! வயிற்றுக்குள்ளிருந்து
சிறகடித்துக் கிளம்பும் பட்டாம்
பூச்சிகள்... தொண்டைக்குள்
பறந்து, மூச்சைத் திணற
வைத்து, தலைக்குள் நிரம்பி
படபடத்து கும்மாளமிடும்
வேதனை!

அடடா வலியில் இத்தனை
சுகமா? ஒரு பார்வையில்
நுழைந்து இதயத்தினுள்
புகுந்து கொண்டவள் தருகிற
இன்ப வாதை!

வண்டுகளின் குடியிருப்பு
அவள் கூந்தல், அந்த அடர்-
இருளை அகற்றிவிடும்
ஒளிவிளக்கு அவள் வதனம்!
அந்த வெளிச்சத்திலேயே
ஆற்றங்கரைக் கரு
மணலாகப் பளபளக்கின்ற
அவள் கூந்தலின்
இழைகள், பார்த்தாலே
தெரிந்துவிடுகிறது இதன்
மணமும் குளிர்ச்சியும்.
அவள் உலவிய
இடங்களிலெல்லாம்
காற்று உற்சாகத்துடன்
அசைவதிலிருந்து புரிகிறது.
குளிர்ச்சியும் வாசனையுமாய்
நடந்துலவுகின்ற
நந்தவனத்தைப் பார்த்தால்
காற்றுக்கே களிப்பேறிப்
பாடத் தோன்றாதா?

காற்று பாடுகின்றது.
சந்தேகமில்லை. அதோ!
மரங்கள் எல்லாம்
தலையாட்டுகின்றனவே!
அந்தப் பெண்தான் அவன்
விரும்பித் தன் நெஞ்சினுள்
வைத்திருப்பவள். காற்று
அகன்ற வெளியில் விட்டு
விடுதலையாகிக் களிப்பில்
துள்ளுகிறது. அவன்
என்னசெய்வான். நெஞ்சில்
குடியிருப்பவள் அவனுக்குள்
இன்பக் கட்டாற்றைப்
பொங்கிச் சுழித்தோட
வைக்கிறாள். வெளியேயும்
சொல்லி ஆற்றிக் கொள்ள
முடியாத மகிழ்ச்சித்
திணறல்.

யான் நயந்து உறைவோள்
தேம்பாய் கூந்தல்
வளம்கெழு சோழர்
உறந்தைப் பெருந்துறை
நுண்மணல் அறல்
வார்ந்தன்ன
நன்னெறி யவ்வே
நறும்தண்ணியவே.

(குறுந்தொகை : 116)

## சிந்தியா பதில்

**சிந்தியா! சிங்கள மக்களை வடக்கில் குடியேற்றி தேர்தலில் வெற்றிபெறுவது அரசின் திட்டமாக இருப்பதாக ஜே.வி.பி குற்றம்சாட்டுகின்றதே...?**

*ம.லோகநாதன், கொழும்பு-13*

புதிதாக மக்களைக் குடியேற்றி அவர்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு. வடக்கின் தேர்தலில் வெற்றி பெற முடியும் என்று இவர்கள் அளவுக்கு அரசு பக்கம், முட்டாள் தனமாக சிந்திப்பார்கள் என்று நான் நம்பவில்லை.

**சிந்தியா! வட மாகாண சபைத் தேர்தலுக்கான நகர்வுகள் இப்போதே சூடுபிடித்திருக்கிறதே...?**

*ஏ.ஞானவரோதயன், மட்டக்களப்பு.*

அரசாங்கம் செப்ரெம்பர் மாதம் தேர்தல் என்று உறுதியாகக் கூறுகிறது. எதிர்க்கட்சிகளோ முடிந்தால் இப்போதே தேர்தலை நடத்துங்கள் என்று சவால் விடுகிறது.

கூட்டமைப்பின் அரசியல் மேடைகளில் கூச்சமில்லாமல் முகம் காட்டத் தொடங்கியிருக்கும் முன்னாள் நீதியரசரே செப்ரெம்பரில் தேர்தல் நடை பெறாது என்று கூறுகிறார்.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது பலருக்குத் தேர்தல் சூடுபிடித்திருப்பது புரிகின்றது.

**சிந்தியா! அமெரிக்கா, இலங்கை உள்விவகாரங்களில் தலையிடுகிறதாமே..?**

*அ.மயில்வாகனம், யாழ்ப்பாணம்.*

அதில் இரகசியம் ஒன்றும் இல்லையே. இலங்கையில் மட்டுமல்ல. உலக நாடுகள் அனைத்திலும் அமெரிக்கா வின் தலையீடு ஏதோவொரு வகையில் இருக்கவே செய்கின்றது.

**மின் கட்டண உயர்வு சிந்தியாவைப் பாதிக்கவில்லையா...?**

*ம.லவஸ்ஷனி, வவுனியா.*

எல்லோரையும் போல என்னையும் பாதித்திருக்கின்றது. ஏற்றுக்கொள்ளமுடியாத கட்டண உயர்வு அது.

விரைவில் அரசு கட்டண உயர்வை மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்று கோரிக்கைவிடும் குரல்களோடு என்னையும் இணைத்துக்கொள்ளுங்கள்.

**சிந்தியா! சினிமாவுக்கு முழுக்குப்போட்ட நயன் மீண்டும் அபாரமாகக் கலக்குகிறாரே?**

*க.சஜிபாலா, கல்லடி.*

அவசரப்பட்ட அவரை எங்கே கொண்டுபோய் நிறுத்தியது என்பதை அவர் உணர்ந்துகொள்வதற்கான கால அவகாசம் அது.

மீண்டும் திரையில் மின்னுவதற்கு அவருக்கு வாய்ப்பு இருக்கின்றது. இயக்குநர்களுக்கு அவசியம் இருக்கிறது.

அவர் பிரபு என்று கையில் குத்தியிருக்கும் பச்சையை எப்படி அழித்துக் கொண்டு. மீண்டும் புதுப்பிறவி எடுக்கப் போகிறார் என்பதை அவர் விரைவில் முடிவு செய்துகொள்வார்.

**சிந்தியா! அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?**

*மா.சஜீவன், மருதானை.*




கிரிக்கெட் ரசிகர்கள் ரசிக்கும் ஒரே துடுப்பாட்ட வீரர் கிறிஸ்கெய்ல்.

அவரின் உயரமும் உடல்வலிமையும், கையில் இருக்கும் துடுப்பும், அவரிடம் சிக்கும் பந்தும், வான வேடிக்கை நிகழ்த்துகின்றன.

சிக்ஸர்களும், பவுண்ரிகளும் அதிகம் பறப்பது கிறிஸ் கெய்லின் துடுப்பிலிருந்துதான் என்று ரசிகர்கள் பந்தயம் கட்டிக்கொள்ளும் வீரராக கெய்ல் திகழ்கின்றார்.

விளையாட்டு நிர்ணயச் சதிக்குள் சிறந்த வீரர்களின் ஓய்வு, 50,30:20 என்ற ஓவர் மாற்றங்கள், அரசியல், பணம் ஆகியவற்றில் தலையீடுகள். இவற்றால் கிரிக்கெட் விளையாட்டின் புகழ் மங்கத்தொடங்கிய காலகட்டத்தில் வேற்றுக்கிரக மனிதர்போல் மைதானத்தில் நின்று கொண்டு பந்துவீச்சாளர்களை பதம்பார்க்கும் கெய்லின் துடுப்பாட்டம் கிரிக்கெட் வீரர்களின் புகழுக்கு மீண்டும் ஒரு வலிமையைச் சேர்த்துள்ளது.

**சிந்தியா! பெண்கள் பெண்களாலேயே கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்பது நியாயப்படுத்தப்படக் கூடியதா?**

*எம்.மணிமேகலை, பல்லவராயன்கட்டு.*

கொடுமைப்படுத்துவது என்பது எந்தவகையிலும் நியாயம் தேடமுடியாது. அது ஆண்.பெண் பேதத்துக்கு அப்பால் வருத்தப்படவேண்டியது.

பாதிக்கப்பட்ட பெண்கள் துணிச்சலோடு குற்றவாளி களை சட்டத்தின் முன்நிறுத்த முன்வரவேண்டும்.

**சிந்தியா! கங்கணம் ஸ்ரைல் என்றால் என்ன?**

*சி.விஜயரூபன், திருகோணமலை.*

தென்கொரியாவைச் சேர்ந்த பாடகர்களான Park Jai sang, Yoo Gun Hyung ஆகிய இருவரும் எழுதி தயாரித்து ஆடிப் பாடியுள்ளார்கள்.

தென்கொரியாவின் தலைநகரிலுள்ள ஒரு இடம்தான் கங்கணம். அந்த மக்களின் வாழ்க்கையை பிரதிபலிப்பதாகவே இந்தப் பாடல் வெளிவந்துள்ளது.


ஸ்ரீ ராம ஜெயம்



ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர், P.K.சாமி JP ஐயா

மலையாள மாந்திரிக சக்தி

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்ட தெளிவான ஜாதக குறிப்புகளுக்கு....

MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM
23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
Tel : 011 2342463/4, 011 2470615 Fax : 011 2344831
E-mail : drpksamy@sltnet.lk
நுவரெலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508



ஜோசெப் கிருஷ்ணா

# விளையாட்டு

## நம்பமுடியவில்லை




**றோயல்** செலெஞ்ஜர்ஸ் பெங்களூர் அணிக்காக, புனேவாகியர்ஸ் அணிக்கெதிராக கிறிஸ்கெய்ல் குவித்த 175 ஓட்டங்கள் தொடர்பான அதிர்ச்சிப் புயல் இன்னும் ஓயவில்லை. கெய்ல் துடுப்பாட்டம் செய்த போது அரைவாசி வேளையாவது மறுபுறத்தில் நின்றவர் இலங்கை வீரர் டில்ஷான். கடந்த ஐ.பி.எல். போட்டிகளிலும் நான் கெய்ல் உடன் துடுப்பெடுத்தாடினேன். அப்போதும் அவர் இரண்டு செஞ்சரிகள் அடித்தார். ஆனால் இதைப்போன்ற துடுப்பாட்டத்தை நான் என்றுமே கண்டதில்லை.

உண்மையில் நான் மறுபுறத்தில் ஒரு பார்வையாளனாக நின்று கெய்லின் ஆட்டத்தை ரசித்துக் கொண்டிருந்தேன் என்று கூறியுள்ளார்.

இதேவேளை உங்களுக்கு பந்துவீச்சாளர்கள் மீது இரக்கமே வருவதில்லையா என்றொரு கேள்வியை இவரிடம் கேட்டிருந்தார்கள். அப்பொழுது கெய்ல், நான் சில சந்தர்ப்பங்களில் ஆரம்பத்திலேயே அவுட்டாகிப் போவதுண்டு. அப்போதெல்லாம் பந்து வீச்சாளர்கள் என்மீது இரக்கப்பட்டதுண்டா என்று சிரிக்கிறார் இவர்.

ஐ.பி.எல் மிகுந்த போட்டித் தன்மை கொண்டது. நிறையப் பணம் அங்கு முதலீடு செய்யப்படுகிறது. ஆகவே எம்மால் முடிந்த முழுத் திறமையும் காட்டியாக வேண்டும் என்கிறார்.

இதில் இன்னொரு விஷேடம் ஆட்டத்தின் இறுதி ஓவரைவீச அழைக்கப்பட்டவர் கிறிஸ்கெய்ல் ஆச்சரியமாக அந்த இறுதி ஓவரில் இரண்டு விக்கெட்டுக்களையும் சரித்து கலக்கிவிட்டார். அதைத் தொடர்ந்து கொரிய நாட்டுப் பாணியில் கங்கணம் (Gangnam) ஸ்ரைலில் நடனம் ஆடவும் தொடங்கிவிட்டார். எதைப் பற்றிக் கேட்டாலும் நான் ஒரு என்ரரெயினர். ரசிகர்களை குஷிப் படுத்துவதே என் நோக்கம். அதனைச் சரிவரவே செய்கிறேன்.

அதெல்லாம் சரி, இப்பொழுது ஒரே ஆட்டத்தில் குலைகுலையாக சாதனை மாங்காய்களை விழுத்தித் தள்ளிவிட்டார் இவர். இவற்றை முறியடிக்கப்போவது யார்? அதற்கு எவ்வளவு காலம் தேவை?

## புதிதாய் பிறப்போம்



**, வேகப்பந்து** வீச்சாளர்களை உருவாக்குவதற்கான சரியான வயது 15 – 20 வரையான வயதாகும். தசைகளின் விருத்திக்கு (Muscle Building) இதுவே சரியான காலம். பாடசாலைக் காலங்களில் பயிற்றுனர்கள், வேகப்பந்து வீச்சாளர்கள் இயல்பான பாணியை மாற்ற முனைந்து, வீரர்களுக்குப் பாதகத்தையே செய்திருக்கிறார்கள். இவர்கள் வீரர்களின் இயற்கைத் திறமையை கண்டுபிடித்து அதனை வளர்க்க முயற்சிக்கவேண்டும். வேகப் பந்துவீச்சாளர் என்பது பந்தை வேகமாக வீசுவது என்பதல்ல. line and length ஐச் சரியாகப் பேணி வேகமாகப் பந்து வீசுவதே அது. வேகப் பந்துவீச்சாளர் என்பவர் நூறு சதவீதம் உடற்தகுதி, தொடர் தகைமை, பொறுமை, சரியாக சிந்திக்கும் ஆற்றல் என்பன கொண்டிருக்கவேண்டும். இப்படியெல்லாம் கூறியிருப்பவர் எவ்வித அறிமுகமும் தேவையில்லாத சமிந்தவாஸ்.

இவரே தற்போதைய இலங்கை அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளர். மகிழ்ச்சியான செய்தியாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட பயிற்சிவேகப் பந்துவீச்சாளர்களையும் இவரே கவனித்துக் கொள்கிறார். அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில்தான் சமிந்தவாஸ் மேற் சொன்ன கருத்துக்களை வெளிப்படுத்தி உள்ளார்.

தற்போதைக்கு வடக்கு, கிழக்கு என்ற வகையில் சில வீரர்கள் பயிற்சிப் பாசறைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

கமலலோகேஸ்வரன் சிலோஜன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜெயபால சிங்கம் ஜனஞ்ஜன் (மகாஜனாக் கல்லூரி) கே.கஜதீபன் (மகாஜனாக் கல்லூரி) எம்.பெரேரா (பாத்திமாக் கல்லூரி, மன்னார்) இம்மானுவெல் றெக்சன் (சென். சேவியர்ஸ் கல்லூரி, மன்னார்) ஆகியோரே இவர்கள்.

இவர்கள் கேதரராமா மைதானத்தில் சமிந்தவாஸ் தலைமையிலான வலைப் பயிற்சியில் பங்குகொண்டு பயிற்சி பெறுகிறார்கள். இவர்கள் அதியுயர் நிலையை அடைய வேண்டுமானால் மிகக் கடுமையான பயிற்சிகளுக்கு உட்படவேண்டும் என்று கூறியுள்ளார் சமிந்த.

மேற்படி இளைஞர்கள் திறமையானவர்கள் மட்டுமல்ல, அதிர்ஷ்டம் செய்தவர்களும் கூட. இல்லாவிட்டால் சமிந்தவாஸிடம் பயிற்சிபெறும் சந்தர்ப்பம் இவர்களுக்குக் கிடைத்திருக்குமா என்ன?

(தகவல்கள் நன்றி: SUNDAY OBSERVER)

## ஆறு மனமே!

**முதல்** தரக் கிரிக்கெட் மற்றும் அதற்குப்பால் உள்ள நிலையில் ஒரு ஓவரில் ஆறு சிக்ஸர்கள் அடிப்பது அரிதிலும் அரிது. இந்தவகையில் இங்கிலாந்தின் லங்காஷயர் துடுப்பாட்ட வீரர், இருபத்தியிரண்டே வயதான ஜோர்டான் கிளாக் யோர்கஷயர் கவுண்டிக்கு எதிராக ஒரே ஓவரில் ஆறு சிக்ஸர்கள் அடித்து அசத்தியிருக்கிறார்.

முன்னாள் மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவரும், சகல துறை ஆட்டக்காரருமான கார்பீல்ட் சோபர்ஸ் 1968 இல் முதன்முதலாக இச்சாதனையைப் புரிந்திருக்கிறார். பின்னர் 1985இல் இந்திய வீரர் ரவிசாஸ்திரி இரண்டாவது முறையாக ஒரே ஓவரில் ஆறு சிக்ஸர் அடித்திருந்தார். தொடர்ந்து 2007 இல் தென்னாபிரிக்க ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹேர்சல் கில்ஸ் உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆறு சிக்ஸர் அடித்திருந்தார்.

தொடர்ந்து முதலாவது இருபதுக்கு இருபது உலகக் கிண்ணப் போட்டிகளில் இங்கிலாந்தின் ஸ்ருவட் புரோட்டின் ஆறு பந்துகளையும் யுவராஜ்சிங் சிக்ஸர்கள் ஆக்கினார். இறுதியாக இப்போது லங்காஷயரின் ஜோர்டான் கிளார்க் அந்தப் பட்டியலில் சேர்ந்துள்ளார். இனி அடுத்து இந்தச் சாதனையைப் புரியப் போவது யார்?, கிறிஸ் கெய்லா அல்லது கெய்ரோன் பொலார்டா? அப்படியானால் எப்போது?



## ஓயாத ஓட்டம்




**பொஸ்டன்** மரதன் ஓட்டப் போட்டிகள் இரட்டைக் குண்டு வெடிப்பால் களை இழந்துபோன பின், அதிதீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளின் கீழ் லண்டன் மரதன் நடைபெற்றது. கென்யாவைச் சேர்ந்த எமானுவெல் முட்டாய் முன்னிலை வகித்தபோதும் சரியான தருணத்தில் எத்தியோப்பிய நாட்டின் ஸிகாயா கெபேடே அவரை பின் தள்ளி வெற்றிப் பதக்கத்தைத் தனதாக்கிக்கொண்டார்.

இவர் இந்த ஓட்டத்திற்கு எடுத்துக்கொண்ட நேரம் இரண்டு மணித்தியாலங்களும் ஆறு நிமிடங்களும் ஆகும். அதோடு லண்டன் மரதன் 2012 இலும் இவரே முதலாவதாக வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதில் இன்னொரு விடயம் என்னவென்றால் லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் எத்தியோப்பியத் தேர்வாளர்கள் இவரைத் தெரிவு செய்திருக்கவில்லை என்பதுதான். இதேவேளை மகளிர் பிரிவில் கென்யாவைச் சேர்ந்த பெண்மணி வெற்றியடைந்தாலும், எட்னா கிப்லகாட் மற்றும் ஜப்பானின் யுகிகோ அகாபா தோல்வி அடைந்தமை எதிர்பார்க்கப்பட்டதாகும். இன்னொருபுறம் ஒலிம்பிக் தங்கப்பதக்கம் வென்ற டிகி ஜெலீனா பதினாறாவது இடத்தையே பெறமுடிந்தது இன்னொரு சோகமாகும்.

## சிறு சறுக்கல்

**கடந்த வாரம்** நடைபெற்ற சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்ட அரை இறுதி ஆட்ட முதல் சுற்றில் மிகப் பெரும் அதிர்ச்சியாக பார்சலோனா அணியை (ஸ்பானியா), பேயர்ன் மியூனிக் அணி (ஜேர்மனி) 4–0 என்ற கோல் கணக்கில் மோசமாகத் தோற்கடித்தது. உடனடியாகவே ஐரோப்பா முழுவதும் பார்சலோனாவின் சகாப்தம் முடிந்தது என்பதே பேச்சாக இருந்தது. இதற்குக் காரணம் கடந்த பதினாறு வருடங்களில் பார்சலோனா சந்தித்த மிகமோசமான தோல்வி இது.

கடந்த வருடம்கூட செல்டிக், செல் சீ, றியல் மெட்ரிட் அணிகளிடம் பார்சலோனா தோற்றிருந்தது. ஆனால் இந்தத் தோல்வி பார்சலோனாவில் இருந்து மியூனிக் நகரத்துக்கு உதை பந்தாட்டக் கவனத்தைத் திருப்பிவிட்டுள்ளது என்று பேசப்படுகிறது.

ஆனால் இப்படியெல்லாம் பேசுவது தவறு என்கிறார் பார்சலோனாவின் அண்டிரியர்ஸ் இனியெஸ்டா. கடந்த ஐந்து வருடங்களில் இரண்டு சம்பியன்ஸ் லீக் கிண்ணங்கள் வென்றுள்ளோம். மூன்று முறை அரை இறுதிப் போட்டிக்குள் நுழைந்திருக்கிறோம். சுபர் கப் கிண்ணம் வென்றிருக்கிறோம். ஆகவே உயர்வது, தாழ்வது என்பது ஒரு போட்டியை வைத்து முடிவுசெய்வதல்ல. அது நீண்டகாலச் செயற்பாடு. நாங்கள் வீழ்ந்தவர்கள் அல்ல என்று கூறியுள்ளார். நியாயமான பேச்சு.

ஆனால் கடந்த காலங்களில் 4–0 என்று தோற்ற எந்த அணியும் மறுசந்திப்பில் இதனை மேவிக் கோல்கள் சேர்த்து வென்றதாக இல்லை. எனவே மறுசந்திப்பில் மியூனிக் அணியை பார்சலோனா அணி அதிகூடிய கோல் எண்ணிக்கையில் தோற்கடிக்குமா? அப்படி நடந்தால், அது உதை பந்தாட்ட உலகில் மிகப் பெரும் ஆச்சரியம். அப்படியில்லாவிட்டாலும்கூட பார்சலோனா எதிர்காலத்தில் சாதிக்காமல் விடப்போகும் அணியும் அல்ல.



# காதிலை பூ கந்தசாமி




**வணக்கமுங்கோ யாழ்ப்பாணத்தில ஆர்ப்பாட்டங்கள், அடையாள உண்ணா விரதங்கள் என்றெல்லாம் நடத்தின மெல்லோ அவைக்கு தொடர்ந்து ஏமாற்றங்கள் தானுங்கோ மிச்சமாகிக் கொண்டிருக்குது.**

கொழும்பு தமிழ் ஊடகங்களும், புலம்பெயர் இணையத்தளங்களும் புகைப்படங்களை பிரசுரித்து, செய்திகளை போட்டால் போதும் என்றளவில் இந்தப் போராட்டங்கள் நடக்குதுங்கோ.

போராட்டம் நடத்திறம் எண்டு முன்னுக்கு நிக்கிறவையையும், அவைக்கு வால் பிடிக்கிற சில பேரும் மட்டும்தானுங்கோ போட்டோவுக்கு போஸ் கொடுக்கினமுங்கோ.

போனவாரம் காணி அபகரிப்புக்கு எதிராக கஜேந்திரன் குழுவின்ர போராட்டத்தையும், அதில் கலந்து கொண்ட நாலைந்து பேரையும் பார்த்து கூட்டமைப்பு எம்.பி. ஒருவர் கொடுத்த கொமண்டைக் கேட்டு சிரிச்சே சீக்காயிட்டினமாமுங்கோ.

மூண்டு கஜேந்திரன்மார் சேர்ந்தால் ஒரு கட்சி நடத்தலாமெண்டு நிலைமை மோசமாகிட்டுதுங்கோ.

காணி அபகரிப்பை நிறுத்துங்கோ, காணிச் சொந்தக்காரரை மீளவும் குடியேற அனுமதியுங்கோ எண்டு கோரிக்கை கோஷங் களை பதாகைகளில எழுதாமல், புத்தரா சொன்னார் காணிகளை அபகரிக்கச் சொல்லி, எங்கள் தாயக பூமியிலிருந்து சிங்கள கூலிப்படையே வெளியேறு எண்டு பதாகைகளை எழுதி வேடிக்கை பார்க்க வந்திருந்தவர்களிடம் கொடுத்து பிடிச்சுக் கொள்ளுங்கோ எண்டு கொடுத்திருக்கினமுங்கோ.

உந்த வாசகங்களைப் பார்க்கும் போது இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுவதற்கோ, காணி அபகரிப்பு ஒரு அநீதி எண்டதை வலியுருத்துகின்ற நோக்கமில்லையுங்கோ, புலன்பெயர்ந்து வாழிற புலிக்காய்ச்சல் பிடிச்சவையலை மனதில கொண்டு எழுதப்பட்ட வாசகங்கள் மாதிரித்தானுங்கோ இருந்திச்சுதுங்கோ.

ஏன் எண்டு கேக்கிறியளோ மாகாண சபை தேர்தல் வரப்போகுது. அதற்கு நிறைய செலவுகள் உண்டு உலகத்திலேயே அழிவு யுத்தம் நடத்துவதற்கும், வெறுப்பேற்றும் கோஷங்களுக்கும் பணம் கொடுத்து உற்சாகப்படுத்தி விட்டு அது தொடர்பான வீடியோவை லீவு நேரத்தில போட்டுப் பார்த்துக் கொண்டு அதைப் பார்த்தியோ, இதைப் பார்த்தியோ எண்டு வியாக்கியானம் பேசி தண்ணியும் பைட்டுமாக பொழுதை போக்குகின்ற ஒரே இனம் நம்முடைய தமிழ் இனம் தானுங்கோ.

அவை சுமந்திரனை, சம்மந்தரை, சுரேஷை, கஜேந்திரனை எண்டு பலபேரை தூண்டி விடுகினம் இவை யாரும் பிரபாகரன் அளவுக்கு பெர்போமன்ஸ் காட்டினமில்லை யாமுங்கோ. ஆலை இல்லாத ஊருக்கு இழுப்பம்பூ சக்கரை எண்ட மாதிரி பிரபாகரன் இல்லாத இடத்தில இந்த நாதாரிகளை தெல்லோட்டிக் கொண்டு இருக்கின்றோம் என்று அவை கவலை வேறு படினமாமுங்கோ.

கஜேந்திரன் நடத்தின போராட்டத்தில விக்கிரமபாகுவும், வித்தியாதரனும் கறுப்புக் கண்ணாடி போட்டுக் கொண்டு நிண்டதைப் பார்த்தால் ஏதோ பார்வை அற்றோர் நிண்டமாதிரி இருந்துச்சுது எண்டு அந்த கூட்டமைப்பு எம்.பி கொடுத்த கொமண்டைக்கேட்டு சிரிக்கா ஆக்கள் இல்லையாமுங்கோ.

இண்டையான் இலங்கை பொலிடிக்ஸில உந்த ஆர்ப்பாட்டங்களும், பேரணிகளும் இருமலும், தும்மலும் மாதிரி ஆகிப்போயிட்டு துங்கோ. தென்னிலங்கையில இதை விட அப்பனான போராட்டங்கள் எல்லாம் நடந்து கொண்டிருக்குதுங்கோ. அதுகளையே செய்தியில பார்த்துவிட்டு செரிக்கிறதுக்கு செம்பைன் குடிக்கிற காலமுங்கோ.

பிரச்சனையை யாருடன் பேசவேண்டுமோ அவரிடம் பேச இவர்கள் முன் வரவேணு முங்கோ. அதற்கு இவைக்கு துணிச்சல் மட்டுமில்லையுங்கோ, சகிப்புத் தன்னையும் வேணுமுங்கோ. அது இல்லாவிட்டால் காணி அபகரிப்புக்கும், கக்குஸ் அடைப்பெடுக்கவும் சர்வதேசம் வர வேணும் எண்டு கத்திக் கொண்டு இருப்பதைத் தவிர வேறு ஒண்டையும் இவையாலை செய்ய முடிதுங்கோ.

இவையாலை ஒரு விஷயத்துக்காக ஒற்றுமைக்கே வரமுடியவில்லையுங்கோ. இந்த இலட்சனத்தில இவை சொன்னவுடன சர்வதேசம் தன்ர வேலைகளை விட்டுப்போட்டு ஓடி வந்து இலங்கை அரசின்ர காதில பிடிச்சு திருகுவினமெண்ட மாதிரி தொட்டதுக்கெல்லாம் சர்வதேசம், சர்வதேசம் எண்டு சொல்லின முங்கோ.

அரசோடு பேசாமல் இவை எத்தனை பதாகையை ஏந்தினாலும், எத்தனை போராட்டங்களை நடத்தினாலும் ஒரு பிரயோசனமும் இல்லையெண்டதில அரசு திடமாக இருக்குதாமுங்கோ. உப்பிடியெல்லாம் உள்ளதைச் சொன்னால் கந்தசாமிக்கு விசர் எண்டுவாங்கள். காலம் யாருக்கு விசர் எண்டதை காட்டுமுங்கோவ்.

**யாவும் கலப்படமற்ற பொய்**

1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000

# உலகை வியக்க வைத்தவர்கள்




**பதினைந்து** வயது வரைமுசோலினி எழுதப் படிக்கத் தெரியாதவராகவே இருந்தார் அதன் பிறகு வயதாக ஆக, படிக்கக் கற்றுக் கொண்டவர், ஏராளமான புத்தகங்களைப் படிக்கலானார். ஆனாலும் பல வழிகளில் இவர் அறிவிலியாக, மூட நம்பிக்கைகள் கொண்டவராகவே விளங்கினார். ஒரு உதாரணம், சந்திரனில் ஒளி மனிதவாழ்வின் விதியை நிர்ணயிக்கிறது என்று நம்பினார். "அபாயங்களை எதிர்கொண்டு வாழுங்கள்" என்று இத்தாலி நாட்டு மக்களுக்கு அறிவுரை வழங்கிய முசோலினி, இரவில் சந்திர ஒளி தன் முகத்தில் விழும்படி தூங்குவதற்கு அஞ்சுபவர். சீட்டுக் கட்டுக்களைப் பார்த்து வருங்காலத்தை அறிந்து கொள்ளுவதிலும் தீவிர ஆர்வமுள்ளவர். சரித்திரப் புகழ் பெற்ற தன் ரோமாபுரியை நோக்கி என்ற படையெடுப்பின் போது மேஜை மீது சீட்டுக் கட்டிலுள்ள கார்டு களைப் பரப்பி அவற்றில் வெற்றிக்கான அறிகுறிகளை ஒருமுறையல்ல, பலமுறை ஆராய்ந்தவர் முசோலினி.

இத் தகவல்களெல்லாம் வெளி உலகுக்கு எப்படித் தெரியலாயிற்று? அதிகாரபூர்வமான அரசியல் சுயசரிதை யாகப் பதிவு செய்யப்பட்டு, முசோலினியே அவற்றைப் படித்து ஏற்றுக் கொண்டு, அந்த சுயசரிதைக்கு முன்னுரையும் எழுதியுள்ள குறிப்புக்களிலிருந்தே இவை கிடைத்துள்ளன.

முசோலினி நரம்புக் கோளாறினால் பாதிக்கப்பட்டவர். அரைப்பைத்தியமாக, பகட்டான வாழ்வுக்காக ஏங்கி ஏமாந்த வராக பல வருடங்கள் வாழ்ந்தவர். ஒவ்வொரு மன நோயாளிகளின் இல்லத்திலும் பலர் தங்களை மாவீரர்களாக நினைத்துக் கொண்டு பிதற்றுவதைக் காணலாம்.

(தொடரும்...)

# இந்தவாரம் உங்கள் பலன்

(02.05.2013 தொடக்கம் 08.05.2013 வரை)

## மேடம்

பிள்ளைகளின் வருங்காலத்திற்காக சேமிக்கத் தொடங்குவீர்கள். உயர்ரக ஆபரணம் வாங்குவீர்கள். செவ்வாய் ஆட்சிப் பெற்றிருப்பதால் உங்களைச் சுற்றிமிருப்பவர் களின் சுயரூபத்தை அறியும் சக்தி கிடைக்கும். சூரியன் ராசிக்குள் அமர்ந்திருப்பதால் பிள்ளை களிடம் உங்களின் எண்ணங்களை திணிக்க வேண்டாம். அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளை உடனுக்குடன் செலுத்தப்பாருங்கள். கண்டகச் சனி நடைபெறுவதால் கணவன் – மனைவிக்குள் கருத்து மோதல்கள், வீண் சந்தேகங்கள் வரும். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் மனம் விட்டு பேசுவது நல்லது. மறதியால் பணம், நகைகளை இழக்க நேரிடும். அரசியல்வாதிகளே! எந்த கோஷ்டியிலும் சேராமல் நடுநிலையாக இருக்கப்பாருங்கள்.

## இடபம்

எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியாதபடி செலவினங்கள் இருந்துக் கொண்டேயிருக்கும். அநாவசியச் செலவுகளை கட்டுப்படுத்தப்பாருங்கள். யாருக் காகவும் எந்த வாக்குறுதியும் தர வேண்டாம். சொந்த – பந்தங்கள் விஷயத்தில் அத்துமீறி தலையிட வேண்டாம். ராசிக்குள்ளேயே குரு நிற்பதால் எப்போதும் எதையோ இழந்ததைப் போல இருப்பீர்கள். முன்கோபத்தால் சிலரின் நட்பை இழக்க நேரிடும். பெரிய நோய் இருப் பதைப் போல் இருக்கும். தலைச்சுற்றல் வரும். நெஞ்சு வலி வரக்கூடும். அரசியல்வாதிகளே! சகாக்களைப் பற்றிக் குறைக் கூற வேண்டாம். வெளிநாட்டவர், வேற்றுமொழிக்காரர்களால் புது ஒப்பந்தங்கள் கிடைக்கும்.

## மிதுனம்

சகோதரங்களின் அரவணைப்பு அதிகரிக் கும். புது பொறுப்புகளும், வாய்ப்புகளும் தேடி வரும். வீடு, மனை வாங்குவது, விற்பது நல்ல விதத்தில் முடியும். தாய்வழியில் ஆதரவுப் பெருகும். புகழ் பெற்ற ஆலயங்களுக்குச் சென்று வருவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். அரசியல்வாதிகளே! தலைமைக்கு நெருக்கமாவீர்கள். வியாபாரத்தில் புதிய திட் டங்கள் வகுத்து லாபத்தைப் பெருக்க முற் படுவீர்கள். வாடிக்கையாளர்கள் அதிருப்தி அடைவார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிட்டும். சக ஊழி யர்களிடம் நெருங்கிப் பழக வேண்டாம். எதிர்பார்த்த இடத்திற்கு மாற்றம் கிடைக்கும்.

## கடகம்

பூர்வீக சொத்தில் மாற்றம் செய்வது, விற்பது, புதுப்பிப்பது போன்ற முயற்சி கள் சாதகமாக அமையும். சகோதரங்களிடம் விட்டுக் கொடுத்துப் போவீர்கள். சிலர் கார் வாங்குவீர்கள். புது வேலை அமையும். கல்யாணப் பேச்சு வார்த்தை வெற்றியடையும். பால்ய நண்பர்களின் சந்திப்பால் உற்சாகமடை வீர்கள். விலகிச் சென்ற சொந்த – பந்தங்கள் வலிய வந்துப் பேசுவார்கள். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். கன்னிப் பெண்களே! கசந்த காதல் இனிக்கும். தடைப் பட்ட உயர்கல்வியை தொடர்வீர்கள். வியா பாரத்தில் அயல்நாட்டு நிறுவனங்களுடன் புது ஒப்பந்தங்கள் செய்வீர்கள்.

## சிங்கம்

சொந்த – பந்தங்கள் மதிக்கும்படி நடந்துக் கொள்வீர்கள். உறவினர், நண்பர்கள் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வீடு வாங்குவது, கட்டுவதற்கு வங்கிக் கடன் உதவி கிட்டும். சிலர் வீடு மாறுவீர்கள். செவ்வாய் சாதகமாக இருப்ப தால் பணவரவு திருப்திகரமாக இருக்கும் என் றாலும் திடீர் செலவுகளால் கைமாற்றாக, கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை உரு வாகும். உங்களிடம் திறமை குறைந்து விட்டதாக நினைத்துக் கொள்வீர்கள். சுப காரியங்கள் ஏற்பாடாகும். கூடுதல் நேரம் ஒதுக்கி வேலைப் பார்த்தாலும் மூத்த அதிகாரியை திருப்திபடுத்த முடியாமல் திணறுவீர்கள்.

## கன்னி

புதிய முயற்சிகள் யாவும் வெற்றி யடையும். பிரபலங்கள் ஆதரவாக இருப்பார்கள். பணவரவு அதிரிக்கும். வீண் குழப்பங்கள், தடுமாற்றங்கள் நீங்கும். பூர்வீக சொத்தை சீர் செய்வீர்கள். கை, கால் வலிக் கும். எளிதில் செரிமானமாகக் கூடிய உணவு களை உட்கொள்வது நல்லது. முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும் முன் சட்ட ஆலோசகரை கலந்தாலோசிப்பது நல்லது. வீடு, மனை வாங்குவதற்கு முன்பாகவும் பத்திரத்தை சரிபார்த்துக் கொள்வது நல்லது. கன்னிப் பெண்களே! நல்ல வரன் அமை யும். தகுதிக் கேற்ப புது வேலை கிடைக் கும். வியாபாரம் தழைக்கும்.

## துலாம்

பணவரவு உண்டு. கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். கட்டிடம் கட்டத் தொடங்குவீர்கள். எதிர்பார்த்த விலைக்கு பழைய மனையை விற்று புது வீடு வாங்கு வீர்கள். சகோதரங்கள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். அப்படிப்பட்டவர்களை யார் என்பதை புரிந்துக் கொள்வீர்கள்..அரசியல் வாதிகளே! தொகுதி நிலவரங்களை உடனுக் குடன் மேலிடத்துக்கு கொண்டு செல்லுங் கள். கன்னிப்பெண்களே! காதல் விவகாரத் தில் தள்ளி இருங்கள். வியாபாரத்தில் கடின மாக உழைத்து லாபம் பெறுவீர்கள். உத்தி யோகத்தில் செல்வாக்குக் கூடும். அவலக நிமித்தமாக சிலர் வெளி மாநிலம், அயல் நாடு சென்று வருவீர்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

## விருச்சிகம்

அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். பதவிகள் தேடி வரும். சகோதரங்களுடன் இருந்த சச்சரவு நீங்கும். அனுபவ அறிவு அதிகமுள்ளவர்கள், ஆன்மிகப் பெரியோர்களின் ஆலோசனைகள் சில பிரச்னைகள், சிக்கல்களிருந்து விடுபட உதவிகரமாக இருக்கும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். பெற் றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் திடீர் யோகம் உண்டாகும். புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்தி யோகத்தில் இடமாற்றம் உண்டு. அதிகாரி களுடன் பனிப்போர் வந்து நீங்கும். சில படைப்புகளை வெளியிட்டு அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

## தனுசு

நல்லவர்களின் நட்பும் தக்க நேரத்தில் உதவிகரமாக இருக்கும். புகழ் பெற்ற புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். யாரும் தன்னுடன் முழு அன்புடனோ, பாசத் துடனோ நடந்துக் கொள்ளவில்லை எல்லோரும் நடக்கிறார்கள் என்றெல்லாம் ஆதங்கப்படு வீர்கள். மூத்த சகோதர வகையில் நன்மை உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். சொத்து வாங்குவீர்கள். பெற்றோருடன் கலந்தாலோசித்து வருங்காலம் குறித்து சில திட்டங்கள் தீட்டுவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் கூடுதலாக உழைக்க வேண்டி வரும். நீண்ட கால கனவுகள் நனவாகும் வாரமிது.

## மகரம்

எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறு வீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். கணவன் – மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளும் உங்களைப் புரிந்து நடந்துக் கொள்வார்கள். வீடு கட்ட லோன் கிடைக்கும். சொந்த ஊரிலே செல்வாக்குக் கூடும். முதல் மரியாதையும் கிடைக்கும். உறவினர் வீட்டு விசேஷங்களையும் எடுத்து நடத்துவீர்கள். சகோதரங்களால் ஆதாயம் உண்டு. கன்னிப் பெண்களே! கல்யாண முயற்சிகள் சாதகமாக முடியும். வியாபாரத்தில் லாபம் குறைவாக வருவதற்கான காரணத்தை கண்டறிந்து நீக்குவீர்கள். அனுபவமுள்ள வேலையாட் களை பணியில் அமர்த்துவீர்கள்.

## கும்பம்

சகோதரங்கள் மனம் விட்டு பேசுவார் கள். துணிச்சலாக சில முடிவுகள் எடுப்பீர்கள். அலைச்சல், வேலைச்சுமை, தூக்க மின்மை, மஞ்சள் காமாலை வரக்கூடும். தாயாருடன் பிரச்னைகள் வந்துப் போகும். திடீர் பணவரவு உண்டு. அதன் மூலம் கடனில் ஒரு பகுதியை செலவு செய்வீர்கள். சனியுடன் ராகுவும் நிற்பதால் முதுகு வலி, மூட்டு வலி வரும். மனைவிவழி உறவினர் களால் வீண் டென்ஷன், செலவினங்கள் இருக்கும். வியாபாரத்தில் போட்டியாளர்களை சமாளிக்கு யுக்தியை கண்டறிவீர்கள். உத்தி யோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

## மீனம்

விலை உயர்ந்த ஆடை, ஆபரணங் கள் வாங்குவீர்கள். முக்கிய ஆவணங் களில் கையெழுத்திடும் முன்பாக சட்ட நிபுணர் களை கலந்தாலோசிப்பது நல்லது. எந்த சொத்து வாங்கினாலும் வில்லங்கம் ஏதேனும் உள்ளதா என பார்த்துக் கொள்ளுங்கள். பணத் தைக் கொடுத்து ஏமாற வேண்டாம். களவுப் போக வாய்ப்பிருக்கிறது. எனவே குடும்பத் துடன் வெளியூர் செல்ல நேரிட்டால் பாது காப்பு ஏற்பாடுகளை செய்து விட்டு செல்வது நல்லது. புதன் சாதகமான வீடுகளில் செல்வ தால் நண்பர்கள் உங்கள் தேவையறிந்து உதவுவார்கள். வீடு, மனை வாங்குவீர்கள். புது வேலை அமையும். வியாபாரத்தில் இலாபம் கணிசமாக உயரும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

**பில்கேட்ஸ்** என்ற பெயரை தெரியாதவர் உலகில் மிகக்குறைவு எனலாம். தொழில்நுட்ப உலகில் என்றுமே இவர் ஒரு ஜாம்பவான். இதுமட்டுமன்றி உலகப் பணக்காரர் வரிசையில் நீண்ட நாட்களாக முதலிடத்தில் இருந்தவர் கேட்ஸ். தொழில்நுட்ப உலகை ஆளும் மைக்ரோசொப்டின் ஸ்தாபகரும், முன்னாள் நிறைவேற்று அதிகாரியான பில்கேட்ஸ் புதிய சர்ச்சையொன்றில் சிக்கியுள்ளார்.

தென்கொரிய ஜனாதிபதி பார்க் கியுன் - ஹேய்யை அண்மையில் சந்தித்த பில்கேட்ஸ் அவருடன் கை குலுக்கிய விதமானது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. கியுனுடன் கைகுலுக்கும்போது பில்கேட்ஸ் தனது மற்றுமொரு கையை தனது காற்சட்டையின் பொக்கெட்டுக்குள் வைத்திருந்துள்ளார். இது தென்கொரிய ஜனாதிபதியை அவமதிப்பதுபோல் உள்ளதாக கொரிய ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. மேலும் சமூகவலைத்தளங்களில் இவ்விடயம் தொடர்பாக பரவலாக விவாதிக்கப்பட்டு வருகின்றது.






**கண்,** காதை மறைக்கும் அளவுக்கு முகத்தில் சதை வளர்ந்த நாய்க்கு 2 முறை சத்திரசிகிச்சை செய்யப்பட்டு சதைகள் அகற்றப்பட்டுள்ளன. நம்மூரில் நடிகைகள் சத்திரசிகிச்சைமூலம் தங்களை மேலும் மெருகேற்றிக்கொள்ள முயற்சிப்பார்கள் என்பது நாமறிந்ததுதான். ஆனால், நாய் ஒன்று அழகு சத்திரசிகிச்சை செய்துகொண்டதை கேட்கும்போதே வியப்பாக இருக்கிறதா? அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலம் சான் ஆன்டானியோ நகரை சேர்ந்த 2 வயது நாய்க்குட்டி சீசேம். சைனீஸ் ஷெர்பே வகையை சேர்ந்தது. துணியை சுருட்டி வைத்தது போல இதன் உடல்முழுவதும் சதை தொங்கியது. இந்த வகை நாய்களுக்கு சதை இப்படித்தான் இருக்கும் என்றாலும், சீசேமுக்கு ரொம்ப ஓவராக இருந்தது. ஐயோ! கண், காது, நாள் ஆக ஆக சதைகள் இன்னும் அதிகம் வளர்ந்து கண்ணையும் காதையும் மறைக்கத் தொடங்கின. பார்வை தெரியாமலும், காது கேட்காததாலும் சீசேம் ரொம்ப சிரமப்பட்டது. சதையின் திரட்சிகள் அதிகம் இருந்ததால் நோய்த்தொற்றால் சிரங்கும் ஏற்பட்டது. சத்திர சிகிச்சைதான் ஒரே தீர்வு இதையடுத்து, சான் ஆன்டானியோ நகரை சேர்ந்த கருணை மையத்தின் ஏற்பாட்டின் பேரில், உள்ளூரில் உள்ள கால் நடை மருத்துவமனையில் சீசேம் நாய் சேர்க்கப்பட்டது. அதை பரிசோதித்த டாக்டர்கள் சத்திரசிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறினர். இப்போ பைன் சீசேம் 2முறை ஒப்பரேஷன் செய்யப்பட்டு, அதிகம் இருந்த சதைகள் அகற்றப்பட்டுள்ளன. அதன் கண், காது தற்போது நன்றாக திறந்துள்ளன. சீசேம் இனி நன்கு பார்க்கமுடியும், கேட்க முடியும் என்று டாக்டர்கள் கூறியுள்ளனர். வளர்ப்பு செல்லமாகத் தயார் சீசேமை யாரேனும் தத்தெடுக்கலாம் என ஆன்டானியோ கருணை மையம் அழைப்புவிடுத்துள்ளது.




ஓடும்வரை ஓடலாம். ஓட்டம் முடிந்துவிட்டால் மடித்து கட்டிலுக்கு அடியில தள்ளி வைத்துவிடலாம். என்ன குழப்பமாக இருக்கிறதா? ஆம். இதுவரை வீதிகளிலே ஊர்ந்து செல்லுகின்ற இரு சக்கர வாகனங்களைப் பார்த்திருப்பீர்கள். அவற்றை நிறுத்தி வைப்பதற்கும் வீட்டில் ஒரு பகுதியை ஒதுக்கி வைத்திருப்பீர்கள். இனி அந்தக் கவலையில்லை. வேலை முடிந்ததும் பகுதி பகுதியாக கழற்றி மடித்து வைத்துக்கொள்ளும் வகையில் மோட்டார் சைக்கிள் ஒன்று சந்தைக்கு வந்துள்ளது. அதையே இங்கு படங்களில் காண்கிறீர்கள்.



